

DEVELOPMENT LOTTERIES

அபிவிருத்தி லொத்தர் சபை

# 2024 ஆண்டறிக்கை

# முன்னேற்றத்தில் வலிமை, வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு



# முன்னேற்றத்தில் வலிமை வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு

முன்னெப்போதும் எதிர்நோக்காத சவால்களுக்கு மத்தியில், அபிவிருத்தி லொத்தர் சபை நவீனத்துவம் மற்றும் தகவமைப்புத் திறன் மூலம் தடைகளை வெற்றிகொண்டு, அதன் மூலோபாய நோக்கங்களை ஈடேற்றிக்கொண்டுள்ளதுடன், சிறப்பம்சம், வளர்ச்சி மற்றும் நீண்டகால நிலைபெருந்தன்மைக்கான அதன் அர்ப்பணிப்பை வலுப்படுத்தியுள்ளது.
2024 ஆம் நிதியாண்டில் நாம் பெற்றுக்கொண்ட வெற்றிகள், எமது தங்கு திறன், நவீனத்துவம், முன்னேற்றத்தின் பலம் மற்றும் வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு பற்றிய தகவல்களை நாம் பெருமையுடன் சமர்ப்பிக்கின்றோம்.

# உள்ளடக்கம்


நிறுவனம் பற்றிய தகவல்கள் ........ 04
எமது தொலை நோக்கு மற்றும் பணி ........ 05
எமது வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான பார்வை ........ 06
முக்கியமான திருப்புமுனைகள் ........ 08
முக்கியமான நிதிசார் தகவல்கள் ........ 10
தலைவரின் செய்தி மற்றும் முன்னேற்ற அறிக்கை - 2024 ........ 12
பணிப்பாளர் சபையின் மீளாய்வு ........ 15
பணிப்பாளர் சபை - 2024 ........ 17
தற்போதை பணிப்பாளர் சபை ........ 18
பணிப்பாளர் சபை பற்றிய விவரக்குறிப்பு ........ 19
முகாமைத்துவக் குழு ........ 26
கனிஷ்ட முகாமையாளர்கள் ........ 27
தொழிற்பாட்டு மீளாய்வு ........ 29
உற்பத்திகளின் தொகுப்பு பற்றிய மேலோட்டமான பகுப்பாய்வு ........ 33
நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கை ........ 39
2024.12.31 ஆம் திகதியில் பதவியணி ........ 50
நிறுவனத்தின் ஆளுகை ........ 52
இடர்வரு நிலை முகாமைத்துவம் பற்றிய அறிக்கை ........ 55
கணக்காய்வு குழு அறிக்கை ........ 57


# நிதியியல் அறிக்கை


சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை ........ 59
கணக்காய்வு அறிக்கை - 2024 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் ........ 67
விரிவான வருமானக் கூற்று ........ 85
நிதி நிலைக் கூற்று ........ 86
காசுப் பாய்வுக் கூற்று ........ 87
உரிமைப் பங்குகளின் மாற்றம் பற்றிய கூற்று ........ 88
கணக்கீட்டு கொள்கைகள ........ 89
வகுதிசார் அறிக்கை ........ 95
நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 96
பத்தாண்டு கால பொழிப்பு ........ 109
நிறுவன அமைப்பு ........ 110

# நிறுவனத்தின் தகவல்கள்

**சபையின் பெயர்**
அபிவிருத்தி லொத்தர் சபை

**சட்ட வடிவம்**
இச்சபை 1097 ஆம் ஆண்டில் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டம் எனும் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

**ஆரம்பிக்கப்பட்ட திகதி**
1983 சனவரி 19

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**
இல. 356 கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

**தொலைபேசி இலக்கம**
0112 333 546-8, 0114 824 824

**தொலைநகல் இலக்கம்**
0112 333 545

**மின்னஞ்சல் முகவரி**
info@dlb.lk

**இணையத்தளம்**
www.dlb.lk

**வரி அடையாள இலக்கம்**
409089844

**தற்போதைய பணிப்பாளர் சபை**

| | | |
|---|---|---|
| சட்டத்தரணி திரு. ஹேமந்த சுவர்ணதிலக்க, | – | தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி |
| திரு. ஜீ.எம்.ஆர்.டீ.அபொன்சு | – | சனாதிபதிக்கான சிரேஷ்ட மேலதிக செயலாளர், பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை |
| செல்வி. டீ.சீ.டபிள்யூ. ஹபுகொட | – | மேலதிக பணிப்பாளர் நாயகம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை |
| திரு. ஏ. சாணக்கிய லியனகே | – | பணிப்பாபளர், அபிவிருத்தி லொத்தர் சபை |
| திரு.பீ.ஏ.சீ.கே. குமார | – | லலித் அத்துலத்முதலி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் |

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிஎல்சி, ஹட்டன் நெஷனல் வங்கி

# எமது தொலைநோக்கு மற்றும் பணி

## தொலைநோக்கு

அதிர்ஷ்டத்தை தோற்றுவிக்கும் இலங்கையின் முன்னணி அரசு நிறுவனமாக மாற்றமடைதல்

## பணி

பங்காளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விடயத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நம்பகத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதுடன் சிறப்புத் தன்மைளை பேணிவரும் அதேவேளை நவீன மற்றும் கவர்ச்சிமிக்க லொத்தர்களை நடாத்தல்.

# குறிக்கோள்கள்

- சந்தைப் பங்கை அதிகரித்துக் கொள்ளுதல
- சனாதிபதி நிதியத்திற்கு வழங்கும் பங்களிப்பினை அதிகரித்தல்.
- புதிய தொழில்நுட்பத்தை தழுவிக் கொள்ளுதல் மற்றும் பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்தல்.
- பங்கீடுபாட்டாளர்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றுதல்.

# எமது அடிப்படை விழுமியங்கள்

| | |
|---|---|
| **நேர்மை** | நாங்கள் அறிமுகப்படுத்தும் லொத்தர்களும் நாம் தொழில் முயற்சியை மேற்கொள்ளுகின்ற விதமும் நியாயமானதும் நேர்மையானதும் நம்பகத்தன்மையும் கொண்டதாகும் |
| **நேர்மறையான மனோபாவம்** | லொத்தர் தொழில் முயற்சியை மேற்கொள்ளும்போது அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் தாங்கள் முகம் கொடுக்கும் அனைத்து சவால்களையும் நேர்மறையான அணுகுமுறையின் ஊடாக எதிர்கொள்கின்றனர். |
| **பெறுபேறுகளை இலக்காகக் கொண்டு செயலாற்றுதல** | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களே நம்பிக்கையுடன் தங்களுடைய பணிகளை மேற்கொள்வதுடன் வழங்கப்பட்டுள்ள இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்துகின்றனர். |
| **புத்தாக்கம்** | தொழில் முயற்சியை மேம்படுத்தக்கூடிய முறைகள் தொடர்பாக கருத்துக்களை ஆராய்வதற்கும் மூலோபாயங்களையும் போட்டி தன்மையும் கொண்ட சந்தை மாற்றங்களுக்கு பதில் அளிக்கும் வகையில் துரிதமாக தீர்மானங்களை மேற்கொண்டு செயல்படுத்துவதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. |
| **குழுவாகச் செயற்படுதல்** | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் வெளிப்படைத்தன்மை பரஸ்பர கௌரவம் மற்றும் தனிநபர் அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு கைகோர்த்துக் கொண்டு செயற்படுகின்றனர். |
| **சிறப்புத்தன்மையை இலக்கு வைத்தல்** | சேவையின் தரத்தை உச்ச மட்டத்தில் பேணிவரும் பொருட்டு ஊழியர்கள் தொடர்ச்சியாக முயன்று வருகின்றனர். |

# எமது வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான பார்வை

தேசத்தின் வாயிற் படிக்கு விடியலைக் கொண்டு வரும் அபிவிருத்தி லொத்தர் சபை 1983 இல் அபிவிருத்தி லொத்தர் சபையாக நிறுவப்பட்டது. அபிவிருத்தி லொத்தர் சபையின் அப்போதைய முக்கிய நோக்கம் யாதெனில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டிய சனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல புலமைப்பரிசில் நிதிக்கான நிதியை திரட்டுவதாகும்.

மேற்படி நோக்கத்திற்கு மேலதிகமாக, பல்வேறு நிதிசார்ந்த மற்றும் சமூக அபிவிருத்தி சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக தொடர்ச்சியான வருமானம் ஈட்டும் திட்டத்தை நிறுவுவதற்கான எதிர்பார்ப்புடன் உடனடி லொத்தர் திட்டமொன்றை அறிமுகப்படுத்தும் பொருட்டு இவ்விடயத்திற்கு உதவி வழங்குமாறு பல்வேறு பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கலாநிதி விக்கிரமசூரிய அழைப்பு விடுத்தார்.

மேற்படி அழைப்பிற்கு சாதமாக பதிளித்த இலங்கையின் அப்போதைய சனாதிபதி திரு. ஜே.ஆர்.ஜயவர்தன அவர்கள் ரூ. 2.2 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்ததுடன் திரு. லலித் அத்துலத்முதலியும் இதற்கு சமமானதொரு தொகையை மஹாபொல உயர்கல்வி நிதியிலிருந்து பங்களிப்பு வழங்கினார். இதற்கமைவாக, நிதியின் ஸ்திரத்தன்மையை இலக்காகக் கொண்டு அபிவிருத்தி லொத்தர் என்ற பெயரில் முதலாவது லொத்தர் சீட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சிகளின் விளைவாக சனாதிபதி நிதியம் மற்றும் மஹபொலவிற்கு நிதி திரட்டும் நோக்கில் அபிவிருத்தி லொத்தர் நிலையம் தாபிக்கப்பட்டது

அபிவிருத்தி லொத்தர் தொழில்துறையில் தனது பயணத்தை ஆரம்பித்து முதலாம் ஆண்டில் தனது பொருளாதார இலக்குகளில் வெற்றியடைந்ததுடன் கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்களவு சாதனைகயையும் அடைந்துகொள்வதற்கான வாய்ப்பினையும் பெற்றுள்ளது DLB இன் வருமானத்தின் பிரதான பகுதி அதனை போஷித்து வளர்த்த சனாதிபதி நிதியத்திற்கும் மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கும் சென்று சேர்கின்றது. அது முதற்கொண்டே அபிவிருத்தி லொத்தர் சபை தனது வருமானத்தில் பெரும்பகுதியை சனாதிபதி நிதியத்திற்கு வழங்குவதடன் அதற்கு பிரதிபலனாக சனாதிபதி நிதியமானது அதில் 50மூ வீதத்தை மஹாபொல புலமைப்பரிசில் நிதிக்கு ஒதுக்குகிறது.

1993 ஆம் ஆண்டில், அபிவிருத்தி லொத்தர் நிலையம் அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியமாக மாற்றியமைக்கப்பட்டதுடன் அதனையடுத்து 1997 ஆகஸ்ட 12 ஆம் திகதி பாராளுமன்ற சட்டமொன்றின் வாயிலாக அபிவிருத்தி லொத்தர் சபையாக மீள நிறுவப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் எனும் பெயரில் அழைக்கப்பட்ட முதலாவது உடனடி லொத்தர் சீட்டு ரூ.10 இற்கு நாடளாவிய ரீதியில் விற்பனை செய்யப்பட்டதுடன் 24 மணித்தியாலங்களுக்குள் இரண்டு ஜக்பாட் வெற்றியாளர்களை உருவாக்கிய இந்த புதிய லொத்த முறைமையினை பிரபல்யப்படுத்தி உடனடி லொத்தரின் பால் வாடிக்கையாளர்களை கவர்ந்திழுப்பதற்கு வழிகோலியது.

முதன் முறையாக தொலைக்காட்சி வாயிலாக சனிதா வாசனா (சனிக்கிழமை அதிர்ஷ்ட லொத்தர்) எனும் பெயரில் சீட்டிழுப்பை நடாத்தி வெற்றியாளர்களை தீர்மானிக்கும் ஒரு லொத்தரை அறிமுகம் செய்தமை லொத்தர் தொழில்துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக உருவெடுத்ததுடன் அது சனிக்கிழமை நாட்களில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதன் பிரபல்யம் வளர்ச்சியடைந்ததை தொடர்ந்து தற்போது ஒவ்வொரு நாளும் சீட்டிழுப்பு நடாத்தப்படுகின்றது. மேலும் உடனடி லொத்தர்களின் மூலம் உடனடியாக அதிர்ஷ்டத்தை பெற்றுக்கொள்ள இயலாமல் போனவர்களை நோக்காகக் கொண்டு 1998 ஜனவரி மாதம் 25ஆம் திகதி 'வாசனா சக்ரய' நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மிகவும் உயர்ந்த வரவேற்பு கிடைத்ததால் அபிவிருத்தி லொத்தர் சபை 'அபிவிருத்தி அதிர்ஷ்டம்' எனும் பெயரில் தொலைக்காட்சி வாயிலாக சீட்டிழுப்பை நடாத்தும் இரண்டாவது லொத்தரை 1998 ஆம் ஆண்டு அறிமுகம் செய்ததுடன் அச் சீட்டிழுப்பு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒளிபரப்பப்பட்டது. அதன் விற்பனையை கருத்தில் கொண்டு, 2015 இல் 12 லக்கினங்களை உள்ளடக்கி 'லக்கின அதிர்ஷ்டம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன் இப்போது இந்த லொத்தர் மிகவும் பிரபல்யமான லொத்தராக மாற்றம் அடைந்து ஒவ்வொரு நாளும் சீட்டிழுப்பு நடாத்தப்படுகின்றது.

2004 ஆம் ஜயோதா சீட்டிழுப்பினை அறிமுகப்படுத்தியதை அடுத்து லொத்தர் தொழில்துறையில் மற்றுமொரு மைல்கல்லை அடைந்துகொள்வதற்கு நிறுவனத்திற்க வாய்ப்பு கிட்டியதுடன் இது திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்படும் அதேவேளை ஜாக்பாட் பரிசாக ரூபாய் 10 மில்லியன் ஆரம்பத் தொகையில் இந்த லொத்தர் ஆரம்பிக்கப்படுகிறது. இதன் சிறப்பம்சம் யாதெனில் ஜாக்பொட் பரிசில் வெற்றியாளர்களுக்கு ரூபாய் 10 மில்லியன் பணத்தொகையை அல்லது ஒரு பத்து மில்லியன் ரூபாவிற்கு சமமான பெறுமதியைக் கொண்ட ஒரு வீட்டைத் தெரிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியமை ஆகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை 2009 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ஜன ஜய லொத்தர் சீட்டை அறிமுகம் செய்ததுடன் இது வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமை நாட்களில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. ஜாக்பொட் வெற்றியாளர்கள் சிறப்புப் பரிசுகளை வெற்றி கொள்வதற்கு சிறப்பு இலக்கமானது 64 இலக்கங்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற 4 வெற்றி இலக்கங்களில் ஒரு இலக்கத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். இந்த சிறப்பு பரிசில் ரூபாய் 2.5 மில்லியன் பணத் தொகையில் ஆரம்பிக்கின்றது.

2012 ஜுலை மாதம் 11 ஆம் திகதி சுப்பர் போல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டமை இந்நாட்டின் லொத்தர் வரலாற்றில் புரட்சிகரமானது ஒரு திருப்புமுனையை பதிவு செய்ததுடன் ரூபாய் 30 மில்லியன் ஆரம்ப பணப் பரிசைக் கொண்ட இந்த விசேடமான லொத்தர் அச்சந்தர்ப்பத்தில் மிகப்பெரிய ஜாக்பாட் பணப் பரிசை வழங்கிய லொத்தராக இருந்தது. அப்போதிலிருந்து இது தினசரி சீட்டிழுப்புடன் கூடிய மிகவும் பிரபல்யமான லொத்தராக இது மாற்றமடைந்துள்ளது.

2016 இல் அபிவிருத்தி லொத்தர் சபை பல புதிய லொத்தர்களை அறிமுகம் செய்ததுடன் இதில் மே மாதம் 14ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட இலட்சாதிபதி லொத்தரும் உள்ளடங்குவதுடன் இது 5.6 மில்லியன் சீட்டுகளை விற்பனை செய்து சாதனை படைத்தது. மேலும் 2016 ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி 75 மில்லியன் சுப்பர் ஜாக்பொட் பரிசுடன் அறிமுகப்படுத்தப்பட்ட கோடிபதி சனிதா (கோடீஸ்வரர் சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பு) லொத்தர் சீட்டு 4.4. மில்லியன் லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்வதற்கான ஆற்றலைப் பெற்றது.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் (சங்வர்தன வாசனா) அபிவிருத்தி லொத்தர் மூன்று பணப் பரிசில்களை கொண்டதாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இதன் சீட்டிழுப்பு 2016 டிசம்பர் 12ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2017 ஆகஸ்ட் 31ஆம் திகதி அத கோடிபதி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது இலங்கை லொத்தர் வரலாற்றில் தினசரி சீட்டிழுப்பினைக் கொண்ட முதலாவது லொத்தராகும்.

நவீன தொழில்நுட்பத்தை தழுவிக்கொண்ட DLB 2020 ஆம் ஆண்டில் தனது வாடிக்கையாளர்களுக்கு ஸ்மார்ட் போன் மூலம் லொத்தர் வாங்குவதற்கான வழியைத் திறக்கும் வகையில் "DLB Sweep App" செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த புதிய திருப்புமுனையுடன், தொழில்துறையில் ஒரு புதிய சந்தையை இலக்காகக் கொண்டு "சசிரி" என்ற பெயரில் தெற்காசியாவின் முதல் டிஜிட்டல் லொத்தரை அபிவிருத்தி லொத்தர் சபை அறிமுகப்படுத்தியது.

அனைத்து சீட்டிழுப்பினையும் ஒளிபரப்பு செய்வதன் ஊடாகவும் மார்ச்சு மாதம் 1 ஆம் திகதி பிரத்தியேகமானதொரு யூடியுப் சனலை செயற்படுத்தியதன் ஊடாகவும் அபிவிருத்தி லொத்தர் சபை 2021 ஆம் ஆண்டில் சீட்டிழுப்பு முறையில் புரட்சிகரமானதொரு மாற்றத்தை அறிமுகப்படுத்தியது. மேலும் 2021 டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி "கோட்டிபதி கப்ருக" லொத்தர் சீட்டு "கப்ருக" என்ற பெயர் மாற்றம் பெற்றதுடன் 120 மில்லியன் ஜாக்பொட் பரிசுடன் தினசரி சீட்டிழுப்பையும் ஆரம்பித்து அபிவிருத்தி லொத்தர் சபை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது.

2022 செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி அதிர்ஷ்டத்தை அடையாப்படுத்தும் ஒரு லொத்தராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாழ் வாடிக்கையாளர்களை இலக்குவைத்து "வலம்புரி" எனும் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இதற்கு கிடைத்த அமோக வரவேற்பின் காரணமாக இது நாடாளவிய ரீதியில் விரிவாக்கப்பட்டது.

விற்பனையாளர்கள் மற்றும் விநியோகத்தர்களின் நீண்ட கால கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் 2023 யூலை மாதம் 6 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரூ. 20 ஆக இருந்த லொத்தர் சீட்டின் விலையை ரூ. 40 ஆக உயர்த்துவதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை நடவடிக்கை மேற்கொண்டதுடன் இது அரசாங்கத்தின் கொள்கை மற்றும் நிதியமைச்சின் வழிகாட்டலுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டது.

மில்லியன்களுக்கு அதிபதியானவர்களின் எண்ணிக்கையையும் வாய்ப்புகளையும் அதிகரிக்கும் பொருட்டு 2023 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி "சுப்பிரி தன சம்பத" லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் ஆரம்ப சீட்டிழுப்பு 1.6 மில்லியன் டிக்கட் விற்பனையை பதிவு செய்ததுடன் இது தினசரி டிக்கட் விற்பனையை 1.9 மில்லியனில் இருந்து 2.2 மில்லியன் வரை உயர்வடையச் செய்தது.

2024 ஆம் ஆண்டின் மேம்படுத்தல் உத்தியின் ஒரு பகுதியாக ஆகக்கூடிய எண்ணிக்கையிலான ரூ.200,000 பரிசுத்தொகையை வழங்கும் லொத்தர் என அறியப்பட்ட "சசிறி" லொத்தர் சீட்டிழுப்பு ஒரு வாரத்தில் ஐந்து நாட்கள் சீட்டிழுக்கப்படும் வகையில் விரிவாக்கப்பட்டதுடன் நவம்பர் 2 ஆம் திகதியிலிருந்து சனிக்கிழமையையும் நவம்பர் 7 ஆம் திகதியிலிருந்தும் வியாழக்கிழமையையும் இணைத்துக்கொண்டது.

அபிவிருத்தி லொத்தர் சபை அதன் தொடக்கம் முதற்கொண்டே சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் பொறுப்பு நிதியத்திற்கு நிதியினை சேகரிக்கும் நோக்கத்தை கொண்டதாக விளங்குகின்றது. இதற்கமைவாக சபை கடந்த 41 வருட காலமாக தனது வாடிக்கையாளர்களுக்கு 44.6 ரூபாவைக் கொண்டு தங்களது அதிர்ஷ்டத்தை பரிட்சித்து பார்ப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் அதேவேளை தனது பங்களிப்பாக 40 பில்லியனுக்கு மேற்பட்ட தொகையினை வழங்கியுள்ளது.

மேலும், அபிவிருத்தி லொத்தர் சபை 22,500 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு நிதிசார் நிலையான தன்னையை அடைந்துகொள்வதற்கும் வழிசமைக்கும் வகையில் சுய தொழில் வாய்ப்புகளை வழங்கியுள்ளது. மேலும், அபிவிருத்தி லொத்தர் சபை 100,00 மேற்பட்டவர்களின் வாழ்கைக்கு உதவி வழங்கி உயர்வடையச் செய்வதுடன் அதன் ஊடாக அவர்களின் தனிப்பட்ட வாழ்கைக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் கணிசனமானளவு பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

# முக்கியமான திருப்புமுனைகள

### 1983

இலங்கையில் முதல் முறையாக உடனடி சீட்டிழுப்பு லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 1987

முதல் முறையாக தொலைக்காட்சி வாயிலாக சீட்டிலுப்பு நடாத்தப்பட்ட சனிதா வாசனா லொத்தர்

### 1993

அபிவிருத்தி லொத்தர் நிலையம் அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியமாக மாற்றப்பட்டது.

### 1997

அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியம் 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை எனும் பெயரில் மீண்டும் தாபிக்கப்பட்டது.

- ரூபாய் 2 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வு மட்டத்தினை அடைந்து கொண்டது.

### 1998

வெற்றி வாய்ப்பினை பெற்றுக் கொள்ளாத உடனடி / சுரண்டும் லொத்தர் சீட்டுகளுக்கு வாசனா சக்ரய (அதிஷ்ட வட்டம்) தொலைக்காட்சி சீட்டிழுப்பு அறிமுகப்படுத்தப்பட்டது

- ‘முதல் பரிசாக சொகுசு மோட்டார் வாகனத்தை பரிசாக வழங்கும் 100 ரூபாய் பெறுமதியுடைய லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்கின்ற விண்டோஸ் மற்றும் யுரேகா உடனடி லொத்தர் சீட்டுடன் அபிவிருத்தி அதிர்ஷ்ட லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

### 1999

2000 ஆம் ஆண்டு எதிர்நோக்க வேண்டியிருந்த தொழில்நுட்ப சவால்களுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் கணினி முறைமை இற்றைப்படுத்தப்பட்டது.

### 2004

அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோடி அம்சமாகிய பணப்பரிசு அல்லது ஒரு வீடு எனும் மாற்றுவழி முறையுடன் கூடிய ஜயோதா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

- ரூபாய் 03 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வு மட்டம் அடைந்து கொள்ளப்பட்டது

### 2008

இலக்கம் 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை கொழும்பு 2 எனும் முகவரியில் அமைந்துள்ள அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான கட்டிடத்திற்கு சபைக்கு கொண்டு செல்லப்பட்டது.

- ரூபாய் 5 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வினை பதிவு செய்தது.

### 2010

சிறப்பு ஜாக்பாட் பரிசுடன் ‘ஜனஜய’ லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

### 2011

நியத்த ஜய (வெற்றி நிச்சயம்) லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

### 2012

ரூபாய் 30 மில்லியன் பெருமதியுடைய சிறப்பு ஜாக்பாட் பரிசுடன் சூப்பர் போல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

**2013**

ஆகக்கூடிய பெறுமதியுடைய ஜக்பொட் பரிசுத்தொகையை வழங்குகின்ற ஹைவே ட்ரீம் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

**2014**

குறுஞ்செய்தி வழியாக லொத்தர் சீட்டு விற்பனை முறை நடைமுறைப்படுத்தப்பட்டது

**2016**

சங்வர்தன லக்ஷபதி, கோடிபதி சனிதா மற்றும் அபிவிருத்தி ஆகிய லொத்தர்களை ஆரம்பித்தல்.

**2017**

அத கோடிபதி லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது

**2018**

IVR மற்றும் SMS பெறுபேறுகளை அறியத் தரும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

**2019**

'DLB Sweep App' செயலியை அறிமுகப்படுத்துதல்

**2020**

“சசிரி” டிஜிட்டல் லொத்தர் அறிமுகம்

**2021**

இலங்கை லொத்தர் தொழில்துறையில் மிகப்பெரிய ஜக்பொட் பரிசாக ரூ.120 மில்லியன் தொகையுடன் “கப்ருக” மீள்அறிமுகம்

**2022**

“வலம்புரி” லொத்தர் அறிமுகம்

**2023**

“சுபிரி தனசம்பத” லொத்தர் அறிமுகம்

**2024**

வருமானம் 30.3 பில்லியனை அடைந்தது

# நிதிசார் சிறப்பம்சங்கள்

## வருவாய் (ரூ)

மில்லியன்




## வரிக்கு முந்திய இலாபம்

மில்லியன்




## சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு (ரூ)

மில்லியன்




## வருமான வரி

மில்லியன்




## அரசுக்கு வழங்கப்பட்ட மொத்த நிதிப்பங்களிப்பு

மில்லியன்




## மொத்த சொத்துக்கள்

மில்லியன்



டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டு

| தொழிற்பாட்டு விளைவுகள் | 2024 | 2023 |
|---|---|---|
| வருவாய் | 28,880,477,301 | 25,442,131,713 |
| மொத்த இலாபம் | 11,435,403,517 | 10,017,436,178 |
| வரிக்கு முந்திய இலாபம் | 4,197,090,255 | 3,516,296,477 |
| வருமான வரி | 111,163,568 | (106,210,247) |
| தேறிய இலபாம் | 4,078,417,348 | 5,265,256,062 |
| **சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு** | **4,085,926,687** | **3,622,506,725** |

**நிதி நிலைப் பற்றிய கூற்று**

| சொத்துக்கள் | | |
|---|---|---|
| ஆதனங்கள் இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 2,774,930,577 | 2,718,047,956 |
| நிரந்தர வைப்புகள் | 1,222,751,286 | 1,710,213,172 |
| இருப்புகள் | 54,221,755 | 56,720,455 |
| வர்த்தக கடனாளிகள் மற்றும் ஏனைய வருமதிகள் | 195,633,999 | 207,964,715 |
| முற்கொடுப்பனவுகள் மற்றும் வைப்புகள் | 9,494,998 | 4,748,286 |
| கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு | 1,196,185,002 | 767,981,019 |
| **மொத்த சொத்துக்கள்** | **5,453,217,617** | **5,465,675,603** |

| பொறுப்புகள் | | |
|---|---|---|
| ஊழியர் நலன்சார்ந்த பொறுப்புகள்- | 13,363,119 | 9,081,293 |
| விற்பனையாளர்கள் மற்றும் விநியோகத்தரகளுக்கு செலுத்த வேண்டிய வைப்புகள் | 40,985,881 | 39,875,881 |
| கடன் செலவுறுதிச்சீட்டு செலுத்தவேண்டியவை | 148,086,860 | 167,800,730 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை | 833,301,365 | 690,726,582 |
| சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தவேண்டியவை | 193,438,687 | 682,730,725 |
| செலுத்தவேண்டிய பரிசு | 1,611,749,784 | 1,456,785,350 |

| உரிமைப் பங்கு | | |
|---|---|---|
| சனாதிபதி நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| பரிசுகளுக்கான ஒதுக்கக் கணக்கு | 340,232,474 | 139,106,256 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 2,267,659,447 | 2,268,909,427 |
| ஊழியர் நலன் திட்டத்தின் மீள் மதிப்பிடப்பட்ட இலாபம் /(நட்டம்) | - | 6,259,359 |
| **மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்** | **5,453,217,617** | **5,465,675,603** |

| இலாபத்தன்மை விகிதம் | | |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் | 15% | 14% |
| மொத்த இலாப விகிதம் | 40% | 39% |

| திரவ நிலை விகிதம் | | |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1 : 1.30 | 1 : 1.19 |
| ஊடனடி (திரவ) சொத்து விகிதம் | 1 : 1.01 | 1 : 1.16 |

# தலைவரின் செய்தி மற்றும் முன்னேற்ற அறிக்கை 2024



"முன்னொரு போதும் இல்லாத சவால்களை எதிர்கொண்டு, 2024 ஆம் ஆண்டு அபிவிருத்தி லொத்தர் சபை (DLB) குறிப்பிடத்தக்க மீள்தன்மை மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி, அதன் மூலோபாய நோக்கங்களை நோக்கி தொடர்ந்து முன்னேறி வருகிறது."

புத்தாக்கம் மற்றும் தகவமைப்புத் தன்மை அல்லது மாற்றத்தை தழுவிக்கொள்வதற்கான தன்மை மூலம், DLB தடைகளை வெற்றிகரமாக கடந்துள்ள அதேவேளை உன்னத நிலை, வளர்ச்சி மற்றும் நீண்டகால நிலைத்தன்மை ஆகியவற்றை நோக்கிய அதன் அர்ப்பணிப்பை வலுப்படுத்தியுள்ளது. இந்த அர்ப்பணிப்பானது 2024 ஆம் ஆண்டில் நாம் பெற்றுக்கொண்ட ஆகக்கூடிய வருமானம் மற்றும் சனாதிபதி நிதியத்திற்கு எங்களால் வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு ஆகியவற்றில் பிரதிபலிப்பதுடன் இதன் அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூ. 28,880 மில்லியன் வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ள அதேவேளை சனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு ரூ. 4,086 மில்லியன் நிதிப் பங்களிப்பையும் வழங்கியுள்ளோம். அந்த வகையில் இந்த அறிக்கையானது கடந்த ஆண்டின் எமது மீள்தன்மை, புத்தாக்கம் மற்றும் வெற்றிப் பயணத்தை எடுத்தியம்புவதாக அமைகின்றது.

| | 2024 ரூ.மில் | 2023 ரூ.மில் | வளர்ச்சி % |
|---|---|---|---|
| வருமானம் | 28,880 | 25,442 | 14% |
| பரிசுகளுக்காக செலுத்தப்பட்டவை | 15,701 | 13,451 | 17% |
| மொத்த வருமானம் | 11,435 | 10,017 | 14% |
| வரிக்கு முந்தைய இலாபம் | 4,197 | 3,516 | 19% |
| வரிக்கு பிந்தைய இலாபம் | 4,086 | 3,623 | 13% |

2024 நிதியாண்டில், DLB கணிசமான நிதிசார் வெற்றியைப் பெற்றுள்ளதுடன் இது முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் மூலம் வெளிப்படுகின்றது.

- **வருவாய் வளர்ச்சி:** DLB வருவாயில் 14% அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளதுடன் இது 2023 இல் பெற்றுக்கொண்ட ரூ. 25,442 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூ. 28,880 மில்லியன் தொகையை அடைந்து வெற்றியை பதிவு செய்துள்ளது. இது எங்கள் வருவாயை தோற்றுவிக்கும் உத்திகளின் செயல்திறனின் வெற்றியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- **பரிசு கொடுப்பனவுகள்:** DLB பரிசு கொடுப்பனவுகளை 17% அதிகரித்ததுடன் நம்பிக்கைக்கு பாத்திரமான எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ரூ. 15,701 மில்லியனை பரிசாக வழங்கி அவர்களின் அனுபவத்தையும் ஈடுபாட்டையும் மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.
- **மொத்த இலாபம்:** மொத்த இலாபம் 11,435 மில்லியனாக அதிகரித்துடன் இது 14% அதிகரிப்பாகும். இந்த அதிகரிப்பு எங்கள் செயல்பாட்டு திறன் மற்றும் செலவு முகாமைத்துவ முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.
- **வரிக்கு முந்தைய இலாபம்:** வரிக்கு முந்தைய இலாபம் 19% அதிகரித்து ரூ. 4,197 மில்லியனாக இருந்ததுடன் இது மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் எங்கள் நிதி மீள்தன்மையைக் எடுத்துக் காட்டுகிறது.
- **வரிக்கு பிந்தைய இலாபம்:** ரூ. 4,086 மில்லியனாக இருந்த வரிக்கு பிந்தைய இலாபம் 13% வளர்ச்சியை காட்டுவதுடன் இந்நிலை பங்குதாரர்களுக்கு பெறுமதியை வழங்குவதற்கும் நிதி நிலைத்தன்மையைப் பேணுவதற்கும் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இந்த வலுவான நிதிசார் செயல்திறன் DLB ஐ தொடர்ச்சியாக வெற்றிப் பாதையில் நிலைநிறுத்துவதுடன் நாங்கள் சேவையாற்றும் சமூகங்களுக்கு பெறுமதியை தோற்றுவிப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்துகிறது.

### எங்கள் அடைவுகள்

சனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு வருவாயை உருவாக்குவதே DLB இன் முக்கிய நோக்கமாக அமைகின்றது. இவ்விடயத்தில் 2024 ஆம் ஆண்டில், எங்கள் பங்களிப்பு ரூ. 4,086 மில்லியனாக இருந்ததுடன் இது முந்தைய ஆண்டை விட 13% அதிகரிப்பாகும். இந்த சாதனையானது முக்கியமான சமூக முன்னெடுப்புகளை ஆதரிப்பதற்கும், தேசத்தின் மீது அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் நாங்கள் கொண்டுள்ள உறுதியான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

### தொழிற்பாட்டு மீளாய்வு

எங்கள் 41 ஆண்டு வரலாற்றில் மிக உயர்ந்த வருவாயை அடைந்துகொண்டதன் மூலம் 2024 ஆம் ஆண்டு னுடுடீ இற்கு ஒரு வரலாற்று ரீதியில் முக்கியமானதொரு மைல்கல்லாக அமைந்தது. நிதிசார் ரீதியில் நாம் அடைந்துகொண்ட வெற்றிக்கு அப்பால் எங்கள் லொத்தர் பரிசுக் கொடுப்பனைவுகளையும் சலுகைகளையும் மேம்படுத்துவதன் மூலமும் வாடிக்கையாளர் ஈடுபாட்டை மேம்படுத்துவதன் மூலமும் இலங்கை சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளோம்.

### பரிசு கட்டமைப்புகளின் மேம்பாடுகள்

வாடிக்கையாளருக்கு கிடைக்கும் பெறுமதியை அதிகரிக்க, விலை சீராக்கங்களுக்குப் பின்னர் 2023 டிசம்பர் 11 ஆம் திகதி முதல் இரண்டாவது வாய்ப்பினை வழங்குவதற்கான சிறப்பு சீட்டிழுப்பை நாங்கள் மீண்டும் தொடங்கினோம். வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் விதமாக, 2024 மார்ச் 25 அன்று, பிரதான சீட்டிழுப்புகளுக்குப் பின்னர் மேம்படுத்தப்பட்ட பணப் பரிசுகளை வழங்குவதற்காக, இரண்டாவது வாய்ப்பினை வழங்கும் சீட்டிழுப்பை மீண்டும் அறிமுகப்படுத்தினோம்:

- அத கோடிபதி, கப்ருக, சுப்பர் போல் மற்றும் சுபிரி தன சம்பத லொத்தர்களுக்கு ரூ. 100,000.
- லக்கின அதிர்ஷ்டம் லொத்தர்சீட்டுகளுக்கு ரூ. 50,000.

## சந்தைப்படுத்தல் சிறப்பம்சங்கள்

### விலை சீராக்கம் மற்றும் விற்பனை தாக்கம்

நிதி அமைச்சின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி 2023 ஜூலை 6 ஆம் திகதி முதல் லொத்தர் சீட்டுகளின் விலை ரூ. 20 இலிருந்து ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டது. இது ஆரம்பத்தில் விற்பனையில் சரிவுக்கு வழிவகுத்த போதிலும் எங்கள் சந்தையின் மீட்சியை நிரூபிக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு வலுவான மீட்சியை காணக்கூடியதாக இருந்தது.

### புதிய லொத்தர் சீட்டுகள் மற்றும் சீட்டிழுப்பு தடவைகளை அதிகரித்தல்

சந்தையில் ரூ. 200,000 என்ற அதிகபட்ச பரிசை வழங்கும் சசிரி லொத்தரின் பிரபல்யத்தை அதிகரிக்கும் பொருட்டு நாங்கள் சீட்டிழுப்பு அட்டவணையை மாற்றியமைத்து அதன் சீட்டிழுப்பினை வாரத்திற்கு மூன்று தடவையில் இருந்து ஐந்து தடவை வரை அதிகரித்தோம்.

### விற்பனை ஊக்குவிப்பு மற்றும் ஊக்கத்தொகை

டிக்கெட் விற்பனை மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டை வெற்றிகரமாக அதிகரிக்க வழிசமைத்த இரண்டாம் நிலை சீட்டிழுப்புகள், மினி சீட்டிழுப்புகள் மற்றும் சிறப்பு சீட்டிழுப்புகள் உள்ளிட்ட பல்வேறு விளம்பர முன்னெடுப்புகளை DLB அறிமுகப்படுத்தியது.

### விரிவாக்கம் மற்றும் உதவி வழங்குவதற்கான முன்னெடுப்புகள்

நாங்கள் எங்கள் விநியோகஸ்தர் வலையமைப்பை விரிவுபடுத்தியதுடன் எங்கள் விற்பனை முகவர்களுக்கு உதவி வழங்குவதற்கான முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தினோம். அவற்றில் பின்வருவன அடங்கும்:

- அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் முகவர்களுக்கு நிதி உதவி.
- புதிய லொத்தர் விற்பனை நிலையங்களை நிறுவுதல்.

- விற்பனை முகவர்களின் பிள்ளைகளுக்கான கல்வித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

## சமூகப் பராமரிப்பு மற்றும் சமுதாய ஈடுபாடு

சமுதாய மேம்பாட்டிற்கான எங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு கலாச்சார விழாக்கள் மற்றும் கல்வி முயற்சிகளில் நுடுடீ அர்ப்பணிப்புடன் செயலாற்றியது.

## புத்தாக்க முன்னெடுப்புகள் மற்றும் பணியாளர் அங்கீகாரம்

- தொலைபேசி வழியாக லொத்தர் சீட்டுகளுக்கான அனுப்பற் கட்டளைகளை (ஓடர்) செய்வதற்கான வசதியை அறிமுகம் செய்தல்.
- முகவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விற்பனை கருமபீட வெகுமதி திட்டங்கள்.
- நீண்டகாலமாக பணியாற்றும் மற்றும் ஓய்வு பெறும் ஊழியர்களுக்கான அங்கீகாரத் திட்டங்கள்.

## எதிர்காலக் கண்ணோட்டம்

தொடர்ச்சியான புத்தாக்க மற்றும் தொழிற்பாட்டு மேம்பாடுகளுக்கு DLB உறுதிபூண்டுள்ளது. முக்கியமான மூலோபாய முன்னெடுப்புகளில் பின்வருவன உள்ளடங்கும்.

**டிஜிட்டல் நிலைமாற்றம்:**

டிஜிட்டல் லொத்தர் முறைமையின் ஊடாக இணையவழி சீட்டு விற்பனையை விரிவுபடுத்துதல்.

**வலையமைப்பு மறுசீரமைப்பு:**

வினைத்திறனை உயர்த்துவதற்காக எங்கள் விநியோகஸ்தர் வலையமைப்பை மேம்படுத்துதல்.

**அனர்த்தங்களிலிருந்து மீட்சியடைவதற்கான முறைமை:**

வணிக நடவடிக்கைகளின் இடையறாத தன்மைக்காக தகவல் தொழில்நுடப செயல்பாடுகளை வலுப்படுத்துதல்.

**நாடு தழுவிய வணிகக் குறியிடல்:**

அனைத்து விற்பனை நிலையங்களிலும் வணிகக் குறியிடலை தரப்படுத்துதல்.

**நவீன லொத்தர் கடைக் கருத்திட்டம்:**

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல்.

**புதிய வலைத்தளம் மற்றும் இணையவழி விற்பனை தளம்:**

வாடிக்கையாளர்களுக்கான அணுகல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

**வாடிக்கையாளர் சேவை மேம்பாடுகள்:**

சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்திற்காக சேவைத் துறைகளை மறுசீரமைத்தல்.

மேற்படி முன்னெடுப்புகள் DLB இன் எதிர்கால வளர்ச்சியை உந்துவதுடன் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை விஞ்சி செயற்படுவதுடன் சமூகத்தில் எங்கள் நேர்மறையான தாக்கத்தை நிலைநிறுத்துவதையும் உறுதி செய்கின்றன.

## நிறைவுக் குறிப்பு

இவ்விடயங்களை வெற்றிகரமாகமேற்கொ-ள்வதற்கு முழுமையான உதவியினை வழங்கிய மேதகு சனாதிபதி, கௌரவ பிரதமர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பயணத்தில் வழிகாட்டுதலாக இருந்த பணிப்பாளர் குழுவிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பினை வழங்கிய சீட்டிழுப்பு நடுவர்கள், சனாதிபதி நிதியத்தின் பணியாளர்கள், மஹாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்தின் குழு, விநியோகத்தர்கள், விற்பனையாளர்கள், விற்பனை உதவியாளர்கள், மீள் விற்பனையாளர்கள், ஊடக பங்குதாரர்கள், வங்கியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகிய எங்கள் பெறுமதிமிக்க பங்குதாரர்கள் அனைவருக்கும் எனது விசேட நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சந்தைப்படுத்தல், நிதி, தகவல் தொழில்நுட்பம், பெறுகை, விற்பனை, நிர்வாகம் மற்றும் உள்ளக கணக்காய்வு போன்ற அனைத்து துறைகளிலும் உள்ள எங்கள் அர்ப்பணிப்புள்ள குழு உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுதல் வேண்டும். இவர்களின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் DLB இன் இந்த சாதனைகளுக்கு அடித்தளமாக விளங்கியது என்பதை குறிப்பிட்டாக வேண்டும். மேலும், எங்கள் மீது தளராத நம்பிக்கையை வைத்துள்ள எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவர்களின் இந்த நம்பிக்கை எங்களுக்கு ஊக்கமளிக்கின்றது. மேலும், எங்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து தலைமைத்துவம் மற்றும் மூலோபாய வழிகாட்டுதல் வழங்கி வரும் எங்கள் பொது முகாமையாளருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இறுதியாக, எங்கள் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு-ணர்வை உறுதி செய்ததற்காக வழங்கிய பெறுமதிமிக்க மேற்பார்வைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கும் எனது நன்றி உரித்தா-குதல் வேண்டும்.

நாங்கள் எதிர்காலத்தை நோக்கி முன்னேறும்போது, உன்னத தன்மை, புத்தாக்கம் மற்றும் சமூக தாக்கத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டில் உறுதியாக இருந்து செயற்படுவதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் இன்னும் பல சாதனைகளு-க்கு களம் அமைத்துக்கொள்வோம்.



**சட்டத்தரணி ஹேமந்த ஸ்வர்ணதிலக்க**

தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

# பணிப்பாளர் சபையின் மீளாய்வு

2024 டிசம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறது.

## முதன்மை செயற்பாடுகள்

பணிப்பாளர் சபையின் முதன்மை செயற்பாடு யாதெனில் சனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு வருவாய் ஈட்டித் தருவதே ஆகும்.

## ஆண்டின் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு

2024 ஆம் ஆண்டில் இயக்காற்றல் மிக்க ஒரு பொருளாதார சூழ்நிலையில், அபிவிருத்தி லொத்தர் சபை குறிப்பிடத்தக்க பங்களிப்பை சனாதிபதி நிதியத்திற்கு வழங்கும் வகையில் ரூ. 4,086 மில்லியன் பங்களிப்பை வழங்கியதுடன் இது 2023 ஆண்டின் தொகையை விட 13% அதிகரிப்பைக் காட்டுகின்றது. மேலும், அபிவிருத்தி லொத்தர சபை சிறப்பான முறையில் செயலாற்றி ரூ. 28.8 பில்லியன் வருவாயை ஈட்டியுள்ளதுடன் இது முந்தைய ஆண்டின் ரூ. 25.4 பில்லியனை வருவாயுடன் ஒப்பிடுகையில் விட 14% அதிகரிப்பை பிரதிபலிக்கும் குறிப்பிடத்தக்கதொரு வருவாயாகும்.

## நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு (CSR)

எங்கள் CSR முயற்சிகளின் விவரங்கள் இந்த ஆண்டறிக்கையின் தொழிற்பாட்டு மீளாய்வுப் பிரிவில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## நிதி அறிக்கையிடலுக்காக பணிப்பாளர்கள் கொண்டுள்ள பொறுப்பு

நிலவரத்தின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை பிரதிபலிக்கும் நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் பணிப்பாளர்களின் பொறுப்பாகும். இந்த நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

## கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 மற்றும் 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரிவு 14(3) இன் ஏற்பாடுகளின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதி அபிவிருத்தி லொத்தர் சபையின் கணக்காய்வாளர் ஆவார். 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் நிதி அறிக்கைகள் குறித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் 59-66 பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக (LKASs) சபை அதன் நிதி அறிக்கைகளைத் தயாரித்தது. நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஈடுபடுத்திக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் 89-94 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில் சபையினால் ஈடுபடுத்திக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் எவ்வித பாரிய மாற்றங்களும் காணப்படவில்லை.

## சபையுடனான ஒப்பந்தங்களில் சபை உறுப்பினர்களின் அக்கறை

2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான சபையுடனான எந்தவொரு ஒப்பந்தத்திலோ அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்திலோ பணிப்பாளர்களுக்கு நேரடி அல்லது மறைமுக அக்கறை காணப்படவில்லை.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

ஆளுகை அமைப்பின் துணைக் குழுவென்ற வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் இடர்வரு நிலை முகாமைத்துவ முறைமைகளை மீளாய்வு செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறைகளைக் கண்காணித்தல் மற்றும் உள்ளக கணக்காய்வு மற்றும் சட்டப்பூர்வ கணக்காய்வு செயற்பாடுகளை மேற்பார்வையிடுதல் ஆகியவற்றுக்கு ஒட்டுமொத்தப் பொறுப்பைக் கொண்டுள்ளது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 57 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

## சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இசைந்தொழுகுதல்

தங்கள் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரை, சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் எந்தவொரு செயலிலும் சபை ஈடுபடவில்லை என்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

## சட்டப்பூர்வமான செலுத்தல்கள்

சனாதிபதியின் நிதியம், அரசாங்க வரிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் பணிக்கொடைகள் போன்ற சட்டபூர்வமான அனைத்து கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் செய்யப்பட்டுள்ளன என்பதை சபை உறுதிப்படுத்துகிறது.

## ஐந்தொகைக்கு பிந்தைய நிகழ்வுகள்

நிதியாண்டின் இறுதிக்கும் இந்த அறிக்கை வெளியிடப்பட்ட தேதிக்கும் இடையிலான இடைவெளியில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்படும் எந்தவொரு குறிப்பிடத்தக்க நிகழ்வுகளும் ஏற்படவில்லை என்று பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

## இடையறாத தன்மை

சபையின் வளங்கள் அதன் தொழிற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு போதுமானவை என்று பணிப்பாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே, நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் இடையறாத தன்மை பற்றிய அடிப்படை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## நன்றி நவிலல்

பணிப்பாளர் சபையின் சார்பில் மேதகு சனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DLB இன் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த எனது சக பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் மூலோபாய வழிகாட்டுதல் மற்றும் அர்ப்பணிப்புக்காகவும் எனது மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எமது நிறுவனத்தின் சந்தைப்படுத்தல், நிதி, தகவல் தொழில்நுட்பம், பெறுகை, விற்பனை, நிர்வாகம் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய அனைத்து துறைகளிலும் உள்ள எங்கள் ஊழியர்களின், அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் DLB இன் சாதனைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தாக இருந்ததென குறிப்பிடுதல்

வேண்டும். எங்கள் பயணத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் வகையில் தலைமைத்துவம் வழங்கிய பொது முகாமையாளருக்கு அவரின் தொலைநோக்குப் பார்வைக்காக எங்கள் விசேட நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதியாக, எங்கள் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சியை உறுதி செய்வதில் பெறுமதிமிக்க மேற்பார்வையினை மேற்கொண்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் பங்கினை அங்கீகரித்து அவர்களுக்கு எனது பாராட்டுதலை தெரிவிக்க விரும்புகின்றேன்.

எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை பெரிதும் பாராட்டுவதுடன் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவு நாங்கள் பாரிய வெற்றிகளை அடைவதற்கு ஊக்கமளிக்கின்றது என்பதை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

**எம்.ஏ. சாணக்கிய லியனகே,**
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை.

# பணிப்பாளர் சபை - 2024

**2024 சனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியின் பணிப்பாளர் சபை.**

**திரு. அஜித் குணரத்ன நாரகல**
தலைவர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
2021.12. 16 முதல்

**திரு. ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து**
செயலாளர்
வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2023.09.27 முதல்

**திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார**
செயலாளர், சனாதிபதி நிதியம்.
திறைசேரியின் பிரதிச் செயலாளர், நிதி அமைச்சு
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2022.08.22 முதல்

**செல்வி. கே.ஏ.எச்.சி. புபுதுசிறி**
பணிப்பாளர்
வெளிவளத் திணைக்களம்
நிதி அமைச்சு.
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2021.06.28 முதல்

**திருமதி ஜெனட் ஜயவர்தன**
(சட்டத்தரணி).
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர்
சபை
2020.01.15 முதல்

**2024 செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான காலத்திற்கான பணிப்பாளர் சபை.**

**திரு. ஹேமந்த சுவர்ணதிலக்க**
சட்டத்தரணி
தலைவர்/தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர்
2024.09.26 முதல்

**செல்வி. டீ.சி.டபிள்யூ. ஹபுகொட**
மேலதிக பணிப்பாளர் நாயகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு. கொழும்பு 01
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2024.10.21 முதல்

**திரு. ஜீ.எம்.ஆர்.டீ. அபொன்சு**
சனாதிபதியின் மேலதிக செயலாளர்
சனாதிபதி செயலகம்
கொழும்பு 01
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2024.12.11 முதல்

**திரு. ஏ. சாணக்கிய லியனகே**
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2024.10. 07 முதல்

# தற்போதைய பணிப்பாளர் சபை



**சட்டத்தரணி திரு. ஹேமந்த சுவர்ணதிலக்க**
தலைவர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
2024.09.26 முதல்



**திரு. ஜி.எம்.ஆர்.டீ. அபொன்சு**
சனாதிபதியின் மேலதிக செயலாளர்
சனாதிபதி செயலகம்
கொழும்பு 01
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2024.12.11 முதல்



**செல்வி டீ.சி.டபிள்யூ. ஹபுகொட**
மேலதிக பணிப்பாளர் நாயகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி
அமைச்சு. கொழும்பு 01
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2024.10.21 முதல்



**திரு. ஏ. சாணக்கிய லியனகே**
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2024.10. 07 முதல்



**திரு பி.ஏ.சி.கே. குமார**
பணிப்பாளர்
அபிவிருத்தி லொத்தர் சபை
2025.01.28 முதல

# பணிப்பாளர் சபை பற்றிய விவரக்குறிப்பு

**சட்டத்தரணி திரு. ஹேமந்த சுவர்ணதிலக்க** நியமனத் திகதி - 2024.09.26



**தலைவர் / தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர்**
அபிவிருத்தி லொத்தர் சபை

**முழுப் பெயர** : ஹேமந்த ஸ்வர்ணதிலக

**தற்போதைய பதவிகள்** : தலைவர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

## கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்

**கல்வி** : பிஎஸ்சி. வணிக நிர்வாக (சிறப்பு) பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
நிதித்துறையில் முதுகலைப் பட்டம், களனி பல்கலைக்கழகம்
பட்டய பொது நிதி கணக்காளர் (CPFA)

## திறன்கள் மற்றும் அனுபவம

**தொழில்முறை** : சட்டத்தரணி
: பிரசித்த நொத்தாரிசு, கம்பனி செயலாளர், சத்தியப்பிரமாண ஆணையாளர்
: இலங்கை பட்டய நிறுவனத்தின் உறுப்பினர் (பொதுத்துறை பிரிவு) - CPFA
: பொது நிதி மற்றும் கணக்கியல் நிறுவனத்தின் (லண்டன்) பட்டய நிறுவனத்தின் உறுப்பினர் - CIPFA

## பிற நியமனங்கள் / பதவிகள் - இல்லை

**முந்தைய நியமனங்கள** :
: பணிப்பாளர் - நிதி, அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களம்
: பணிப்பாளர் - தூதர கணக்குகள் - வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
: Head of Chancery and Chargé d'affaires - மியான்மரின் யாங்கோனில் உள்ள இலங்கை தூதரகம்
: பணிப்பாளர் (அமைச்சின் அவதானிப்பாளர்) - லங்கா ஹொஸ்பிடல்ஸ் லிமிடெட் மற்றும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் டயகொனொஸ்டிக்ஸ் லிமிடெட்
: பணிப்பாளர் - மலைநாட்டு மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச்சட்ட சபை
: பிரதம நிதி அலுவலர் - அரச தொழில்முயற்சியாண்மை, கண்டிய மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி
: பணிப்பாளர் நாயகம் (கணக்குகள் மற்றும் நிதி) - சுகாதார அமைச்சு
: பிரதம நிதி அலுவலர் - சுகாதார அமைச்சு
: பிரதம நிதி அலுவலர் – கல்வி அமைச்சு

**திரு ஜி.எம்.ஆர்.டீ. அபொன்சு** நியமனத் திகதி 11.12.2024



**ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் (நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள்)**
அபிவிருத்தி லொத்தர் சபை

**முழுப் பெயர்** : கோனியா மாலிமகே ரசல் டேவிட்சன் அபோன்சு

**தற்போதைய பதவிகள்** : ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் (நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள்)

## கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்

**கல்வி**

: சர்வதேச மற்றும் அபிவிருத்தி பொருளாதார இளமாணிப் பட்டம் – அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் 2008-2009 - ஒரு வருடம் - அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம்

: சர்வதேச மற்றும் அபிவிருத்தி பொருளியல் பற்றிய பட்டப்ப பின் படிப்பு 2007-2008 - அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம்

: அபிவிருத்தி கற்கைகள் பற்றிய பட்டப் பின் படிப்பு டிப்ளோமா 2004-2005 – அபிவிருத்தி பொருளியல் நிறுவன உயர் பாடசாலை, சீபா, ஜப்பான் 2004-2005

: பௌதீக விஞ்ஞான இளமாணிப் பட்டம் 2002-2004 கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை

: முதுமாணி (பௌதீக விஞ்ஞான சிறப்புப் பட்டம்) 1990-1994 ருகுணு பல்கலைக்கழகம், இலங்கை

## திறன்கள் மற்றும் அனுபவம்

**தொழில்முறை**

: ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர்) நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள்) ஜனாதிபதி செயலகம் 2024 செப்டெம்பர் முதல் இதுவரை

: மேலதிக பணிப்பாளர் நாயகம் -தேசிய திட்டமிடல் திணைக்களம் (NPD) | 2024 ஒகஸ்ட் முதல் 2024 செப்டெம்பர் வரை

: மேலதிக பணிப்பாளர் நாயகம் | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் (DPMM) | 2024 யூன் முதல் 2024 ஒகஸ்ட் வரை

: சிரேஷ்ட ஆலோசகர் 'இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) | 2024 ஜனவரி முதல் 2024 யூன் வரை

: பணிப்பாளர் (திட்டமிடல்) உயர் கல்வி அமைச்சு 2012 ஜனவரி முதல் 2024 ஜனவரி வரை

: கருத்திட்டப் பணிப்பாளர் (பதில் கடமையாற்றல்) இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதார பாதுகாப்பு விஞ்ஞான பீடத்தின் கட்டிட வளாக கருத்திட்டம் 2022 ஜனவரி முதல் 2024 ஜனவரி வரை

: பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (மாணவர்களுக்கான கடன் உதவித் திட்டம்) உயர் கல்வி அமைச்சு 2017 மே முதல் 2018 ஜனவரி வரை) பணிப்பாளர்) திட்டமிடல் பதவிக்கு மேலதிகமாக

: பிரதி கருத்திட்ட பணிப்பாளர்) திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் உதவி (உயர் கல்வி கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தை துரிதப்படுத்துதல் AHEAD-World Bank நிதியம் 2017 செப்டெம்பர் முதல் 2020 செப்டெம்பர் வரை பகுதிநேர அடிப்படையில் (பணிப்பாளர் (திட்டமிடல்) பதவிக்கு மேலதிகமாக

: உதவி) பிரதிப் பணிப்பாளர் / திட்டமிடல் (உயர் கல்வி அமைச்சு 2010 மே முதல் 2012 ஜனவரி வரை

: உதவிப் பணிப்பாளர் தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 2009 பெப்ரவரி – மே 2010

: உதவிப் பணிப்பாளர் தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 2006 ஒகஸ்ட் - 2009 பெப்ரவரி

: உதவிப் பணிப்பாளர் தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 2004 யூன் - 2006 ஒகஸ்ட

: உதவிப் பணிப்பாளர் தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 2004 ஜனவரி – 2004 யூன்

: வரி உத்தியோகத்தர் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 1998 நவம்பர் - 2002 ஜனவரி

**பிற நியமனங்கள் / பதவிகள் - இல்லை**

: பௌதீகவியல் விரிவுரையாளர் பௌதீகவியல் திணைக்களம் ருகுணு பல்கலைக்கழும், இலங்கை 1995- பெப்ரவரி – 1998 நவம்பர

: விரிவுரையாளர் பகுதிநேர (முகாமைத்துவம் மற்றும் கற்றைகள் நிறுவனம் (ஐஆளு)இ நுகேகொடை, இலங்கை 2005-2007 மற்றும் 2010

: விரிவுரையாளர் ) பகுதிநேர மனித வள அபிவிருத்தி நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை 2014 முதல்

: வெளிவாரி விரிவுரையாளர் (பகுதிநேர) மொறட்டுவை பல்கலைக்கழகம், இலங்கை 2006

: வெளிவாரி விரிவுரையாளர் ) பகுதிநேர) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்) (SLIDA) 2009, 2010, 2020

: சிரேஷ்ட ஆலோசகர் ) இணைத்தல் அடிப்படையில் ) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் (ளுடுஜனுயு) 2024 ஜனவரி முதல்

: வெளிநாரி விரிவுரையாளர் மதிப்பீட்டு நிலையம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் 2024 ஜனவரி முதல்.

**முந்தைய நியமனங்கள**

: பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (ர்யுசுவுஐ)இ இலங்கை 2006

: பணிப்பாளர் சபை அங்கத்தவர் அணுசக்தி அதிகாரசபைஇ இலங்கை 2009

: பணிப்பாளர் சபை அங்கத்தவர் விஞ்ஞா்ன பட்டப் பின் படிப்பு நிறுவனம்இ பேராதனைப் பல்கலைக்கழகம்இ இலங்கை 2013 முதல் 2022 வரை

: பணிப்பாளர் சபை அங்கத்தவர் இலங்கை நெசவுக் கைத்தொழில் நிறுவனம் 2014

: பணிப்பாளர் சபை அங்கத்தவர் கம்பஹா விக்ரமஆரச்சி ஆயர்வேத நிறுவனம், களனிப் பல்கலைக்கழகம், இலங்கை 2015 முதல் 2019 வரை

: இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உறுதிப்படுத்தல் சபையின் நிலையியல் குழு அங்கத்தவர் 2017 முதல் 2024 வரை

: பணிப்பாளர் சபை அங்கத்தவர், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் 2021 முதல் 2024 வரை

: நிருவாக சபை அங்கத்தவர் -இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் 2023 முதல் 2024 வரை

: முகாமைத்துவ குழு அங்கத்தவர், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலை தூரக் கற்றைகள் நிலையம் 2023 முதல் 2004 வரை

: தொழில்சார் அங்கத்துவம், இலங்கை மதிப்பீட்டு சங்கம் - 2021முதல்

: சபை அங்கத்தவர், களனி பல்கலைக்கழும் 2025 முதல்

## செல்வி. டி.சி.டபிள்யூ. ஹப்புகொட

நியமனத் திகதி -21.10.2024



**மேலதிக பணிப்பாளர் நாயகம்**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு. கொழும்பு 01

**முழுப் பெயர** : தீபிகா கிருஷாந்தி விக்ரமரத்ன ஹப்புகோட

**தற்போதைய பதவிகள்** : தற்போதைய பதவி மேலதிக பணிப்பாளர் நாயகம், பெருநிறுவன அலுவல்கள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### கல்வி மற்றும்

**கல்வி** :
- 2022: பொது பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் உயர்தர சான்றிதழ் மெட்ரோபொலிட்டன் வளாகம் (முன்னாள் மிலோடா நிதியியல் கற்கைகள் கல்லூரி)
- 2004: கலை முதுமானி (சர்வதேச அபிவிருத்தி) தெற்கு அவுஸ்திரேலியாவின் பிளிண்டர்ஸ் பல்கலைக்கழகம், அடிலெய்ட், அவுஸ்திரேலியா
- 2001: அபிவிருத்தி கற்கைகள் பற்றிய பட்டப் பின் படிப்பு டிப்ளோமா அபிவிருத்தி பொருளியல் உயர்தர கல்லூரி, டோக்கியோ ஜப்பான்
- 2000: பொருளாதார அபிவிருத்தி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு இலங்கை
- 1998: துணை தேசிய அளவிலான அபிவிருத்தி திட்டமிடல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு இலங்கை
- 1992: பி.எஸ்சி. பொது நிர்வாக (சிறப்பு) பட்டம், (2 ஆம் வகுப்பு கீழ் பிரிவு) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு, இலங்கை

**தொழில்சார் தகைமைகள்** : இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உரிமச் சான்றிதழ் மற்றும் தொழில்வாண்மை பகுதி 1 தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல்

### திறன்கள் மற்றும் அனுபவம்

**தொழில்சார் அனுபவம்-**

1994 மே 2 ஆம் திகதி இலங்கை திட்டமிடல் சேவையில் அரச சேவையில் இணைந்துகொண்டதுடன் தற்போது 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டவர்.

- 1994 மே - 1999 பெப்ருவரி: திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், மெதகும்பர, தெல்தெனிய மற்றும் கந்தகெட்டிய பிரதேச செயலகங்கள்.
- 1999 பெப்ருவரி - 2002 மே: உதவிப் பணிப்பாளர், நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிவளங்கள் திணைக்களம், நிதி திட்டமிடல் அமைச்சு.
- 2002 மே -2004 மே: பதிற்கடமையாற்றும் பிரதிப் பணிப்பாளர், நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிவளங்கள் திணைக்களம், நிதி திட்டமிடல் அமைச்சு.
- 2004 மே -2008 மார்ச்: பிரதிப் பணிப்பாளர், வெளிவளங்கள் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு
- 2008 மார்ச் -2010 டிசம்பர்: பணிப்பாளர், வெளிவளங்கள் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு
- 2011 சனவரி -2013 மே: பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு
- 2013 மே -2020 டிசம்பர்: மேலதிக பணிப்பாளர் நாயகம், அரசாங்க பொறுப்புமுயற்சிகள் திணைக்களம்
- 2021 ஜனவரி முதல் இற்றைவரை: மேலதிக பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சு

### பிற தொழில்சார் அனுபவம்

- 1989 ஜனவரி முதல் 1989 நவம்பர் வரை: பயிற்சிபெறும் கணக்கு எழுதுநர். சென்ட்றல் பினேன்ஸ் கம்பனி பிரைவெட் லிமிடெட்.
- 1989 டிசம்பர் முதல் 1991 நவம்பர் வரை: அமய கணக்கு எழுதுநர், இலங்கை மத்திய வங்கி.
- 1992 முதல் 1994 ஏப்ரல் வரை: கணக்காய்வு பயிற்சியாளர், Burah Hathy ) Co., பட்டய கணக்காளர்கள் (தற்போதைய BDO)

### பிற நியமனங்கள/பதவி

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, லங்கா நிலக்கரி நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு கம்பனி.
- முந்தைய நியமனங்கள் - விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவகம், தேசிய வணிக முகாமைத்துவ நிறுவகம், இலங்கை போக்குவரத்து சபை, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், ஜயா கொள்கலன் முனையம் லிமிடெட், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

**திரு. ஏ. சாணக்கிய லியனகே** நியமனத் திகதி - 07.10.2024



**பணிப்பாளர்**
அபிவிருத்தி லொத்தர் சபை

**முழுப் பெயர்** : அர்ஜன்மல் சாணக்கிய லியனகே

**தற்போதைய பதவிகள்** : பட்டயக் கட்டிடக் கலைஞர் / சக கருத்திட்ட முகாமையாளர

## கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்

**கல்வி**
- : பட்டப் பின் படிப்பு டிப்ளோமா (கட்டுமான கருத்திட்ட முகாமைத்துவம்), மொரட்டுவ பல்கலைக்கழகம், 1996
- : விஞ்ஞான முதுமானி (கட்டிடக் கலை) மொரட்டுவ பல்கலைக்கழகம், 1988
- : பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர்களின் ரோயல் நிறுவனம் பகுதி I, லண்டன், 1980
- : விஞ்ஞான இளமானி (பி.இ.) பட்டம், மொரட்டுவ பல்கலைக்கழகம், 1980
- : உயர் தொழில்நுட்ப விவசாய தொழில்முயற்சி உயர் டிப்ளோமா, 2023
- : பட்டய அளவீட்டாளர்களுக்கான றோயல் நிறுவனம் (RICS-UK) உறுப்பினர் - பதிவு எண்: 6753300-2017

**தொழில்சார் தகைமைகள்**
- : இலங்கை பசுமை கட்டிட கவுன்சில் (GBCSL) இன் இணை நிபுணர் -2013
- : இலங்கை கருத்திட்ட முகாமையாளர்கள் நிறுவனத்தின் IPM (SL) சக உறுப்பினர் -2012
- : இலங்கை கருத்திட்ட முகாமையாளர்கள் நிறுவனத்தின் (SLAPM) சங்க உறுப்பினர் -2012
- : இலங்கை சுற்றாடல் தொழில்வாண்மையாளர்கள் நிறுவனத்தின் IEP (SL) சங்க உறுப்பினர், -2011
- : தொழில்வாண்மையாளர்கள் சங்கங்களின் அமைப்பின் (OPA) மைய ஆயுட்கால உறுப்பினர் (பதிவு எண்: 724-1999)
- : பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர்களின் ரோயல் இன்ஸ்டிடியூட் (RIBA) இன் சங்க உறுப்பினர் (பதிவு எண்: 6862362)-1991
- : இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர். பட்டய கட்டிடக் கலைஞர், AIA (SL) -1990

## திறன்கள் மற்றும் அனுபவம்

**தொழில்சார் அனுபவம்:** 1990 முதல்: திகதி வரை

தொழில்தருனர் : M/S வடிவமைப்பு ஆலோசகர், பத்தரமுல்ல
வகித்த பதவி : முதன்மை கட்டிடக் கலைஞர் / கருத்திட்ட முகாமையாளர் / பசுமை ஆலோசகர் (தனி உரிமையாளர்)

ஜனவரி 2003 முதல் டிசம்பர் 2003 வரை
தொழில்தருனர் : டயர் கன்சல்ட்-துபாய (U.A.E)
வகித்த பதவி : கருத்திட்ட முகாமையாளர் (தலைமை அலுவலகம்)

நவம்பர் 1992 முதல் செப்டம்பர் 1997 வரை
தொழில்தருனர் : தொழில்தருநர்: வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD), கொழும்பு
வகித்த பதவி : வகித்த பதவி: உதவிப் பணிப்பாளர்

முதல்: மே 1989 - நவம்பர் 1992
தொழில்தருநர் : வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் வீடமைப்பு திட்டமிடல் மற்றம் கட்டுமான நிலையம், பெலவத்தை
பதவி : உதவிப் பணிப்பாளர்

அக்டோபர் 1983 முதல் - மே 1989 வரை
தொழில்தருநர் : மகாவலி பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனத்தின் மகாவலி கட்டிடக்கலை பிரிவு (MECA -MAU)
வகித்த பதவி : கருத்திட்டக் கட்டிடக் கலைஞர

செப்டம்பர் 2002 முதல் - நவம்பர் 2002 வரை
தொழில்தருநர : RMJM - - துபாய் - UAE
பதவி : கட்டிடக் கலைஞர

பெப்ருவரி 1983 முதல் - அக்டோபர் 1983 வரை
தொழில்தருநர் : சோமாஸ்கந்தராஜா கந்தையா
வகித்த பதவி : கருத்திட்டக் கட்டிடக் கலைஞர்

<u>ஜூன் 1980 முதல் - பெப்ருவரி 1983 வரை</u>
தொழல்தருநர் : பொறியியல் ஆலோசகர்கள் (பிரைவேட்) லிமிடெட்

<u>ஆகஸ்ட் 1979 முதல் - ஜூன் 1980 வரை</u>
தொழில்தருநர்: : தான்யா அன்ட் சுரேன் விக்ரமசிங்க கட்டிடக் கலைஞர்கள்
வகித்த பதவி : உதவி கட்டிடக் கலைஞர்

### பிற தொழில்சார் அனுபவம்

- : 2009 ஆம் ஆண்டு JABIC நிதியுதவியுடன் கண்டி கழிவு நீர் அகற்றும் கருத்திட்டத்திற்கான தேசிய கட்டிடக் கலைஞராகப் பணியாற்றியமை
- : ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் கருத்-திட்டத்திற்கான தேசிய கட்டிடக் கலைஞராகப் பணியாற்றியமை
- : சுற்றுலா பெருந்திட்டத்திற்கான (TMS) சுற்றுலா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், IFC தேர்வு எண் 1120495-2013 இற்கான தொழில்நுட்ப முன்மொழிவைத் தயாரிப்பதற்கான தேசிய கட்டிடக் கலைஞராகப் பணியாற்றியமை

### வெளிநாட்டுப் பயிற்சி

- : தென் கொரியாவின் இன்கானில் உள்ள கட்டுமான தொழில்நுட்ப நிறுவனத்தில் கட்டுமான தொழில்நுட்ப 3 மாத பாடநெறியைப் கற்றல்- 1984
- : ஜப்பானில் ஏழு நாட்கள் கற்கை சுற்றுலா -1984.
- : 1990 இல் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் நடைபெற்ற சர்வதேச HABINET கருத்தரங்கில் பங்கேற்றமை.
- : சிங்கப்பூரில் கற்கை சுற்றுலா 1990
- : 1992 இல் UK, Slough பல்கலைக்கழகத்தில் பயிற்சியளித்தல் முகாமைத்துவம் சார்ந்த் கணினி பயன்பாட்டு பாடநெறியை கற்றல் - 1990.
- : 2008 இல் இலங்கை கட்டுமான கைத்தொழில் சம்மேளனத்தினால் (CCI) ஏற்பாடு செய்யப்பட்ட கத்தார் ஒரு வார சுற்றுப்பயணத்தில் பங்கேற்றமை.
- : 1992 இல் UK, Slough பல்கலைக்கழகத்தில் 3 மாதகால பயிற்சியாளர் பயிற்சி முகாமையாளர் பாடநெறி
- : 2011 இல் மலேசியாவில் உள்ள "பெனசொனிக்" VRF எயார் கண்டிஷனிங (வளிச்சீராக்கி) உற்பத்தி தொழிற்சாலை மற்றும் பெனசொனிக் சுற்றுச்சூழல் தேசிய மையத்தைப் பார்வையிட்டமை
- : 2017 இல் இந்தியாவில் அகமதாபாத்தில் உள்ள குளிர் நிலை சேமிப்புக் களஞ்சியங்களைப் பார்வையிட்டமை.

### உள்ளூர் பயிற்சி:

- : ஒரு வார கட்டுமான முகாமைத்துவ பாடநெறியைக் கற்றல (M.E.C.A.)
- : 1989 இல் ILO/UNDP ஆல் நடத்தப்பட்ட பயிற்சி பட்டறைகளில் கலந்து கொண்டமை.
- : 2003 இல் TMC ஆல் ஐஎஸ்ஓ 9001:2000 விழிப்புணர்வு கருத்தரங்கை வெற்றிகரமாக நிறைவுசெய்தமை.
- : அடிப்படை கணினி மொழி பாடநெறி (கொழும்பு பல்கலைக்கழகம்)
- : தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் (NBRO) கணினி உதவி வடிவமைப்பு (ஊயுனு) பாடநெறி
- : மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இலங்கை சுற்றாடல் தொழில் வல்லுநர்கள் நிறுவனத்தால் நடத்தப்பட்ட IEE/EIA அறிக்கைகளைத் தயாரிப்பதில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டதில் பங்கேற்று கற்றல்.

### பிற நியமனங்கள்/பதவிகள்

- : வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் (LECO) ஸ்மார்ட் கிரிட் தரவு முகாமைத்துவ மைய-த்தின் வடிவமைப்பு மற்றும் ஒப்பந்த நிர்வாகத்திற்கான கருத்திட்ட ஆலோசகர்

### முந்தைய நியமனங்கள்/பதவிகள்

- : பெலவத்தயில் அமைந்துள்ள தேசிய பரீட்சைகள் மையத்திற்கான ஆலோசகர்களை பெற்றுக்கொள்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்.
| | திரு. ஐ.என். விக்கிரமசிங்க | ரோனியோ இயந்திரப் பொருப்பாளர் | | |
| | திரு. கே.பி.டபிள்யூ.எஸ். பர்னார்ட் | சீட்டிழுப்பு இயந்திரப் பொருப்பாளர் | | |
| | திரு. ஐ.கே.இளங்ககோன் | சீட்டிழுப்பு இயந்திரப் பொருப்பாளர் | | |
| | திரு. எம்.டி. சிந்தக | சீட்டிழுப்பு இயந்திரப் பொருப்பாளர் | | |
| | திரு. எம்.எச்.என்.பி.திசேரா | சீட்டிழுப்பு இயந்திரப் பொருப்பாளர் காப்பாளர் | | |
| | திரு டி.என்.எஸ்.ஏ.ராஜபக்ஷ | அலுவலக உதவியாளர் | | |
| | திரு. எஸ்.ஏ.டி.குணரத்ன | மின் தொழில்நுட்பவியலாளர் | | |
| | திரு.டி.எல்.லக்னாத் ரணசிங்க | அலுவலக உதவியாளர் | | |
| விடுமுறை எழுத்தர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள் குறித்த பயிற்சி செயலமர்வு | | | | |
| | திருமதி சமிலா தெவரப்பெரும | மனிதவள அதிகாரி | | |
| | திரு. திலின பெரேரா | பிரதேச விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | | |
| | திருமதி அச்சலா பியரத்ன | ஊடக மற்றும் மக்கள் தொடர்பு உதவியாளர் | | |
| | திருமதி சமிலா திசாநாயக்க | பிரதான முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி சம்மிகா விஜேசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி சுனேத்ரா சுதர்ஷனி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. A.E.R.W. டி சொய்சா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு ஜகத் முதன்நாயக்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி டி.எஸ்.டி. பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் | 1 நாள | SDFL |
| | திருமதி ஹிமாலி விதானகே | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி துஷானி பெர்னாண்டோ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.ருவன் பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு அர்ஜுன மித்ரானந்த | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி வருணி மல்காந்தி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி ஏன் ஜானகி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி சுசீமா சண்டிமாலி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | செல்வி நிசன்சலா காரியவசம | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. கே.கே.கே. மதுசங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி பியுமி கமகே | முகாமைத்துவ உதவியாளர் | | |

| பயிற்சி | பங்கேற்பாளர்களின் பெயர்கள் | பதவிகள் | பயிற்ச காலம் | நடத்துபவர் |
|---|---|---|---|---|
| | செல்வி. கிஹார ராமுதினி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | செல்வி. ஜே.கே.ஏ. சுரேகா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. ஏ.கே.கே.டி. விக்கிரமசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. எஸ்.கே. அமரகோன் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. சமோத்யா ஹன்சிகா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | | | | |
| | திரு.W.B.N.S. பெரேரா | தொலைபேசி இயக்குனர் | | |
| | திருமதி. A.E.R.W. டி சொய்சா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. கே.பி.டபிள்யூ.எஸ். பர்னார்ட் | சீட்டிழுப்பு இயந்திர பொறுப்பாளர் | | |
| | திரு. சுமித் எதிரிசிங்க | சாரதி | | |
| | திரு. P.W.N.D. ஷாமில் | சாரதி | | |
| | திரு. என்.பி. தில்ருக் விஜேந்திர | சாரதி | | |
| | திரு. டி.எப்.எம்.ஏ. அஜித் | சாரதி | | |
| | திருமதி. G.D.B.A. கொடகம்பல | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. ஈ.எம்.தமித் துஷார | கே.கே.எஸ் | | |
| | திரு.எப்.எஸ். நெதகமுவ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.ஆர்.சி. திலகசிறி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. எச்.ஏ.ஆர்.எஸ். பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. என். தரங்க சமரசேகர | தொடர்பாளர் | | |
| | திரு.கே.எச்.யு. மதுமல் | கே.கே.எஸ் | | |
| | திரு. டி.எம்.எல்.வாணகுரு | கே.கே.எஸ் | | |
| **திணைக்களங்களுக்கு இடையேயான மோதல்களைக் குறைத்தல்** | திரு.எஸ்.எச்.ஐ. ஆர். ஜயதிலக | கே.கே.எஸ் | 1 நாள | SDFL |
| | திரு. கே.ஜி.கே. சதுரங்க | கே.கே.எஸ் | | |
| | திரு. எச்.ஏ.டி.எஸ்.எம். பெரேரா | பிரதேச விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | | |
| | திருமதி. ஜி.எச்.ஜி. அமரதாச | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டி.என்.என். காரியவசம் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. தர்ஷி ரத்னசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.டி.வி.திசர இந்துசங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. எச்.ஏ.என். குணவர்தன | பாதுகாப்பு உதவியாளர் | | |
| | திரு.மகேஷ் சமீர சமரதுங்க | பாதுகாப்பு உதவியாளர் | | |
| | திருமதி.பி.ஏ.எச்.என். அதுகோரல | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. பி.சி.என். விஜேசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. டி.ஏ.டி.சி. அபேசேகர குணரத்ன | கே.கே.எஸ் | | |
| | திரு. ஏ.டி. கபில நிஷாந்த | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. டி.எஸ்.டி. பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டபிள்யூ.சி.பி. சேனாரத்ன | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | செல்வி. ஜி.ஆர். பூர்ணிமா நிரோஷா மதுவந்தி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. M.W.P.N. பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | | |

| பயிற்சி | பங்கேற்பாளர்களின் பெயர்கள் | பதவிகள் | பயிற்ச காலம் | நடத்துபவர் |
|---|---|---|---|---|
| **திணைக்களங்க-ளுக்கு இடையேயான மோதல்களைக் குறைத்தல்** | திருமதி. ஆர்.பி.டி. தர்மனி | முகாமைத்துவ உதவியாளர் | 1 நாள | SDFL |
| | திருமதி. ஜே.ஏ.எஸ்.எம். ஜயகொடி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. W.D. ரோஹான் சம்பத் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. என். ஹர்ஷனி ரணசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. கே.டி.டி. ருக்ஷிணி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஜி.ஏ.என். சம்மி கனேபொல | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. W.A.D. பெர்னாண்டோ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஜி.எம்.எஸ். குணரத்ன | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. கே.கே. லலிதா குமுதுனி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. W.M.B. கருணாசேன | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி டி.ஏ.எஸ். ஏ. ஜானகி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.கே.என். தர்ஷன | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. ஏ.ஏ. ரஞ்சன் சாலிய | கே.கே.எஸ் | | |
| **தாபனக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை விதிகளைப் பயன்படுத்துதல் பற்றிய பயிற்சி செயலமர்வு** | திரு. ஜே.ஏ.டி.கே. ஜயசூரிய | AGM (F) | 1 நாள | SDFL |
| | திரு. என்.வி. இந்திக உபுல் | நிதி அதிகாரி | | |
| | திருமதி. டபிள்யூ.கே.எல். சாகரி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஆர்.ஏ.டபிள்யூ.ஜி. ரூபசிங்க | நிதி உத்தியோகத்தர் | | |
| | திருமதி. பி.சி.என். விஜேசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டி.எஸ்.டி. பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. பி.எச்.ஏ.எஸ். பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. கே.ஜி.ஏ.சி. மித்ரானந்தா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஜே.பி.சி.சி. ஜயசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. டி.டி.சி. தம்மிந்த | பிரதி பொது முகாமையாளர் | | |
| | டாக்டர். ஏ.எஸ். குணசிங்க | உதவி பொது முகாமையாளர் | | |
| | திருமதி. சி.சி. ஜலப்பெரும | உதவி பொது முகாமையாளர் | | |
| | திருமதி. பி.எம்.என்.கே. பலகல்ல | உதவி பொது முகாமையாளர் | | |
| | திருமதி. ஜி.டி.எஸ். பிரேமதிலக | சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர அதிகாரி | | |
| | திரு. எச்.ஏ.டி.எஸ்.எம். பெரேரா | விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | | |
| | திரு. எம்.ஏ.ஜே.பி. முதன்நாயக்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. எச்.ஜி. விதானகே | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ீர்மிளா ஜயசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.எப்.எஸ்.நெதகமுவ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டி.என்.ஜி.ஏ. ீகா தில்ானி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஏ.எஸ்.ஜி.எஸ். ராதிகா | மனிதவள அதிகாரி | | |
| | திருமதி. சி.என். தெவரப்பெரும | மனிதவள அதிகாரி | | |
| | திருமதி. ஆர்.ஏ.சி.பி. ராஜபக்ச | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | ிருமதி. யு.றூ.வு.னு.ே. வணிகசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |

| பயிற்சி | பங்கேற்பாளர்களின் பெயர்கள் | பதவிகள் | பயிற்ச காலம் | நடத்துபவர் |
|---|---|---|---|---|
| தாபனக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை விதிகளைப் பயன்படுத்துதல் பற்றிய பயிற்சி செயலமர்வு | திருமதி. ஜே.கே. அவந்தி சுரேகா | முகாமைத்துவ உதவியாளர் | 1 நாள | SDFL |
| | திருமதி. சமோத்யா சமரசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டபிள்யூ.கே.எல். சுசீமா சண்டிமால் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டி.எம். சந்தரணி ஹேமமாலா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஜே.பி.எஸ். செல்வி சத்சரா ஜயமஹா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. டி.எச்.கோட்டகே | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. யு.ஜி. இலேபெரும | முறைமை பகுப்பாய்வாளர் | | |
| | திருமதி ஏ.சி.மஹாநாம | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | | |
| | திரு. பி.பி. கோகுல பெர்னாண்டோ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. A.E.R.W. டி சொய்சா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஜி.எச்.ஜி. அமரதாச | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. ஜே.சி.ஜி. புஞ்சிஹேவா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டி.என்.என். காரியவசம | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. தர்ரீ ரத்னசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.டி.வி.திசர இந்துசங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| நீகுஇ நுவுகுஇ பணிக்கொடை சட்டத்தின் நன்மைகள் மற்றும் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் விதிகளைப் பயன்படுத்துவது குறித்த பயிற்சிப் பட்டறை. | | | 1 நாள | SDFL |
| | திருமதி. சமிலா தெவரப்பெரும | மனிதவள அதிகாரி | | |
| | திருமதி.சமிலா திஸாநாயக்க | பிரதம முகாமைத்துவ உதவியாளர் | | |
| | ஜே.கே. அவந்தி சுரேகா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. டபிள்யூ.கே.எல். சுசீமா சண்டிமாலி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. சாமோத்யா சமரசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | செல்வி.சஞ்சலீ சத்சரா ஜயமஹ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி.ஆர்.ஏ.என்.ஜி. ரூபசிங்க | நிதி அதிகாரி | | |
| | திரு. என்.வி. இந்திக உபுல் | நிதி அதிகாரி | | |
| | திருமதி. சந்திரா ராஜபக்' | நிதி அதிகாரி | | |
| | திருமதி. டி.எஸ்.டி. பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. தினுஷா ராஜபக்ஷ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. எஸ்.எஸ்.டி.எஸ். ஜயசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஜே.பி.சி.சி. ஜயசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. புத்திக கருணாசேன | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. அர்ஜுன மித்ரானந்தா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.மதி கே.டி.டி. ருக்சீனி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. அயந்தி சாரங்கா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. கல்ஹாரி விஜேசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. சம்மிகா விஜேசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. எச்.ஏ.டி.எம். வீரசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | செல்வி.ஐ.என். அபேசிறிவர்தன | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. பி.ஏ.சி.ஜே. கருணாரத்ன | பெறுகை அதிகாரி | | |

| பயிற்சி | பங்கேற்பாளர்களின் பெயர்கள் | பதவிகள் | பயிற்ச காலம் | நடத்துபவர் |
|---|---|---|---|---|
| **நுகர்வோர் பணிக்கொடை சட்டத்தின் நன்மைகள் மற்றும் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் விதிகளைப் பயன்படுத்துவது குறித்த பயிற்சிப் பட்டறை.** | திருமதி. தர்ரீ ரத்னசேகர | முகாமைத்துவ உதவியாளர் | 1 நாள | SDFL |
| | திருமதி. சேபாலிகா பிரேமதிலக | சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர உத்தியோகத்தர் | | |
| | திரு. திலின பெரேரா | பிரதேச விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | | |
| | திரு. ஜகத் முதன்நாயக்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஹிமாலி விதானகே | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. 'ர்மிளா ஜயசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. எச்.ஆர்.ஆர்.எஸ். பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. 'சிகா தில்'ானி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. மலிந்த நிகமுனி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.இசுரு சந்தருவன் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. பி.பி. கோகுல பெர்னாண்டோ | போக்குவரத்து அதிகாரி | | |
| | திருமதி. ஏ.ஈ.ஆர்.டபிள்யூ டி சொய்சா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| **ஆவணங்களை அகற்றுதல் பற்றிய செயலமர்வு** | திரு. ஆஷலே லாசரஸ் | முகாமைத்துவ உதவியாளர் | 1 நாள | SDFL |
| | திருமதி. சி.என். தெவரப்பெரும | மனிதவள அதிகாரி | | |
| | திருமதி. சமிலா திஸாநாயக்க | பிரதம முகாமைத்துவ உதவியாளர் | | |
| | செல்வி. பிரியங்கனி ராஜபகஷ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. எம்.சி. வருணி மல்காந்தி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. எம்.எல்.எஸ். சுதர்ஷனி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. சந்தியா அமரகோன் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. அவந்தி சுரேகா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. சமோத்யா சமரசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி..சந்தராணி ஹேமமாலா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஜே.பி.சஞ்சலி ஜயமஹ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. யுநெ ஜானகி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஹசிதா புஷ்பகுமாரி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. நாமல் பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஸ்ரீமாலி ஜயகொடி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. அர்ஜுன மித்ரானந்தா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. கே.டி.டி. ருக்ஷினி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. ஆயிஷா சமன்மலி | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. கனிஷ்க குருகம | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.ஜே.சி.ஜி. புஞ்சிஹேவா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி டி.என்.என்.காரியவசம் | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி. துஷானி பெர்னாண்டோ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.பி.ஏ.சி.ஜே.கருணாரத்ன | பெறுகை அதிகாரி | | |
| | திருமதி. தர்ரீ ரத்னசேகர | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. நி'ாந்த ரணவக்க | விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | | |
| | திரு. ஜகத் முதன்நாயக்க | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு.சுதர்சன நெடகமுவ | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. பீ.பீ கோகுல பெர்னாண்டோ | போக்குவரத்து உத்தியோகத்தர் | | |
| | திருமதி. ஏ.ஈ.ஆர்.டபிள்யூ.டி சொய்சா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திருமதி என்.எஸ்.சி.பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | | |
| | திரு. எச்.ஏ்.சி.டி. ஹெட்டியாராச்சி | முகாமைத்துவ உதவியாளர் | | |

# 2024.12.31 திகதியில் ஊழியர் எண்ணிக்கை

| பதவி | | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|---|
| தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | | 1 | 1 | | |
| பொதுமுகாமையாளர் | H.M - 2.1 | 1 | 1 | | |
| பிரதி பொதுமுகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | H.M - 1.1 | 1 | 1 | | |
| பிரதி பொதுமுகாமையாளர் (நிதி) | H.M - 1.1 | 1 | | 1 | |
| உதவி பொதுமுகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | M.M-1.1 | 2 | 1 | 1 | |
| உதவி பொதுமுகாமையாள் (நிதி) | M.M-1.1 | 3 | 2 | 1 | |
| உதவி பொதுமுகாமையாளர் (விற்பனை) | M.M-1.1 | 2 | 2 | | |
| உதவி பொதுமுகாமையாளரர்(மனித வள அபிவிருத்தி / நிர்வாகம்) | M.M-1.1 | 1 | 1 | | |
| உதவி பொதுமுகாமையாளர் (பெறுகைகள்) | M.M-1.1 | 1 | 1 | | |
| உதவி பொதுமுகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | M.M-1.1 | 1 | 0 | 1 | |
| உள்ளக கணக்காய்வாளர் | M.M-1.1 | 1 | 1 | | |
| நிர்வாக உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| போக்குவரத்து உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| வலய முகாமையாளர் | J.M- 1.1 | 10 | 8 | 2 | |
| நிதி உத்தியோகத்தர் | J.M- 1.1 | 4 | 4 | | |
| முறைமை / நிகழ்ச்சித்திட்ட பகுப்பாய்வாளர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| பெறுகைகள் உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| மனித வளங்கள் உத்தியோகத்தர | J.M- 1.1 | 1 | 1 | | |
| சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| கனிஷ்ட முகாமையாளர் (IT-INF) | J.M- 1.1 | 1 | 0 | 1 | |
| விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | MA - 3 | 22 | 18 | 4 | |
| தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் | MA - 3 | 1 | 0 | 1 | |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA - 3 | 6 | 3 | 3 | |
| ஊடக மற்றும் மக்கள் தொடர்பு உதவியாளர் | MA - 3 | 1 | 1 | | |
| பெறுகை உதவியாளர் | MA - 3 | 1 | 0 | 1 | |
| முகாமைத்துவ உதவியாளர் (Tech- IT) | MA-2-2 | 4 | 0 | 4 | |
| நிதி உதவியாளர் | M.A-2.2 | 2 | 0 | 2 | |
| பிரதம முகாமைத்துவ உதவியாளர் | MA-1.2 | 1 | 1 | | |
| முகாமைத்துவ உதவியாளர் - 131 மற்றும் தனிப்பட்ட உதவியாளர் - 01 | MA-1.2 | 132 | 130 | 2 | |
| விற்பனை ஒருங்கிணைப்பாளர் | MA-1.1 | 5 | 4 | 1 | |
| சாரதி | P.L - 3 | 43 | 40 | 3 | |
| மின் தொழில்நுட்பவியலாளர் | P.L -3 | 2 | 1 | 1 | |
| காரியாலய காரிய சகாயர் | P.L -1 | 65 | 62 | 3 | |
| கள ஊக்குவிப்பாளர் | P.L -1 | 10 | 8 | 2 | |
| கள நடமாடும் வண்டி அறிவிப்பாளர் | P.L -1 | 6 | 0 | 6 | |
| பாதுகாப்பு உதவியாளர் | P.L -1 | 3 | 14 | | *11 |
| **மொத்தம்** | | **341** | ****312** | **40** | |

* 11 பேர் (பாதுகாப்பு உதவியாளர்கள்) தனிப்பட்ட உத்தியோகத்தர்களாக அங்கீரிக்கப்பட்டுள்ளனர

** தற்போதுள்ள பணியாளர்கள் ஸ்ரீ நிரந்தர பதவிகள் 306 + ஒப்பந்த பதவி 06)

| ஓவ்வொரு வகுதிக்கும் அமைவாக ஊழியர்கள் | |
|---|---|
| தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி | 1 |
| பொதுமுகாமையாளர் | 1 |
| பிரதி பொதுமுகாமையாளர் | 1 |
| உதவிப் பொதுமுகாமையாளர் | 7 |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 |
| பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் | 1 |
| வலய முகாமையாளர் | 8 |
| நிதி உத்தியோகத்தர் | 4 |
| முறைமை பகுப்பாய்வாளர் | 1 |
| மனித வளங்கள் உத்தியோகத்தர் | 1 |
| பெறுகைகள் உத்தியோகத்தர் | 1 |
| போக்குவரத்து உத்தியோகத்தர் | 1 |
| சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர உத்தியோகத்தர் | 1 |
| பிரதேச விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர் | 18 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 3 |
| ஊடக மற்றும் மக்கள் தொடர்பு உதவியாளர் | 1 |
| பிரதம முகாமைத்துவ உதவியாளர் | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் | 130 |
| விற்பனை ஒருங்கிணைப்பாளர் | 4 |
| சாரதி | 40 |
| மின் தொழில்நுட்பவியலாளர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 62 |
| கள ஊக்குவிப்பாளர் | 8 |
| பாதுகாப்பு உதவியாளர் | 14 |
| **மொத்தம்** | **312** |

| அடிப்படையில் | |
|---|---|
| ஆண் ஊழியர்கள் | 214 |
| பெண் ஊழியர்கள் | 98 |
| **மொத்தம்** | **312** |

| ஆண் ஊழியர்கள் | |
|---|---|
| 21 - 30 | 41 |
| 31 - 40 | 94 |
| 41 - 50 | 119 |
| 51 - 60 | 57 |
| 60+ | 1 |
| **மொத்தம்** | **312** |

# நிறுவனத்தின் ஆளுகை

நிறுவனத்தின் ஆளுகை முறையானது லொத்தர் சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவபதற்கான வழக்கங்கள் மற்றும் வழிகாட்டல் கொள்கைகளை வரையறுத்துத் தருவதுடன் சபையின் நீண்ட கால குறிக்கோள்களுக்கும் மூலோபாயங்களுக்கும் வழிகாட்டல்களை வழங்குகின்றது. நிறுவனத்தின் ஆளுகை மாதிரியின் ஊடாக அபிவிருத்தி லொத்தர் சபையின் பல்வேறு மட்டங்களுக்கிடையில் குறிப்பாக நிர்வாக மட்டங்களுக்கிடையில் அதாவது பணிப்பாளர் சபை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ மட்டங்கள் ஆகியவற்றுக்கு இடையில் அதிகாரங்களும் பொறுப்புகளும் பிரிந்து செல்லும் முறை சுருக்கமாக காட்டப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை நிறுவனத்தின் தாபன ரீதியிலான கொள்கைகளை நிறுவுவதுடன் இம்முயற்சியின் சிறந்த செயற்பாட்டிற்கு பொறுப்பு கூறுவேண்டிய உத்தியோகத்தர்களாகிய பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு மூலோபாய ரீதியிலான வழிகாட்டுதல்களை வழங்குகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது. சபையின் கட்டமைப்பு சட்டத்தின் பிரிவு 3(ஏ) இன் கீழ் பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளது.

**அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்:**

- **i.** மஹாபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி.
- **ii.** சனாதிபதியின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி.
- **iii.** சம்பந்தப்பட்ட அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி.

**ஆ) அமைச்சரால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்.**

அமைச்சரினால் ஒரு தலைவர் நியமிக்கப்படுவதுடன் அவர் சபையின் பிரதம நிறைவேற்று உத்தியாகத்தராக செயற்படுவதுடன் அத்தகைய தலைவர் சபையின் நிர்வாக அல்லது முகாமைத்துவ அலுவல்களின் மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மாற்றப்படலாம்.

### பணிப்பாளர் சபையின் கடமைகள்

அரசின் கொள்கைகளுக்கு இசைந்தொழுகும் வகையில் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் தொடர்பாக பொறுப்புக் கூறுதல் வேண்டும். அனைத்து சட்ட ரீதியிலான மற்றும் ஏனைய முகாமைத்துவ தேவைப்பாடுகளுக்கு அமைவாகவும் வளங்களை பாதுகாத்தல் உரிய முறையில் கணக்குகளைப் பேணி வருதல் மற்றும் சரியான அறிக்கைகளை தயாரித்தல் போன்றவற்றை உறுதிசெய்து மேற்படி கடமையினை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஆகவே பணிப்பாளர் சபை பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்துதல் வேண்டும்

- அமைப்பின் மூலோபாய குறிக்கோள்கள் இயங்கு நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துதல்
- மூலோபாய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தலைமைத்துவத்தை வழங்குதல
- பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் வரும் நிலை முகாமைத்துவம் முறைமையொன்று இயங்கு நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துதல
- நிறுவனத்தின் முகாமைத்துவ பணிகளை பயனுறுதி மிக்க வகையில் மேற்பார்வை செய்தல
- தினசரி அடிப்படைகள் தேவைப்படுகின்ற நிதிசார் அம்சங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக போதிய அளவு பங்குடமையாளர்களுக்கு அறிக்கையிடுதல
- வளங்களையும் சொத்துக்களையும் பொறுப்புடன் பயன்படுத்துதல்
- சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகள் வழிகாட்டுதல்கள் மட்டும் சுற்றுநிருபங்கள் போன்றவற்றிக்கு அமைவாக அவர்களின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பொறுப்புக் கூறுதல்

### பணிப்பாளர் சபை கூட்டங்கள்

நிறுவனத்தின் தொழிற்படுத்தல்கள் மற்றும் பணிப்பாளர் சபை கூட்டங்களின் பெறுபேறுகள் நிறுவனத்தின் பாதீடு மற்றும் சம்பந்தப்பட்ட தர நியமங்களுக்கு அமைவாக உள்ளதா என்பதை உன்னிப்பாகவும் தொடர்ச்சியாகவும் மேற்பார்வை செய்தல். பணிப்பாளர் சபையின் கவனம் விரிவான முறையில் தேவைப்படுகின்ற ஏனைய விடயங்கள் சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிகழ்ச்சிநிரல் பின்பற்றப்படுகின்றது. பணிப்பாளர் சபை மாதத்திற்கு ஒரு முறை கூடுவதுடன் தேவையான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விசேட பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

### அபிவிருத்தி லொத்தர் சபையின் குழுக்கள்

1. முகாமைத்துவக் குழு
2. கணக்காய்வுக் குழு
3. கேள்விக்கோரல்கள் குழு
4. ஊழியர் நலன்புரிக் குழு
5. விளம்பரக் குழு
6. DLB இன் கலாச்சார மற்றும் கலை சங்கம்

### முகாமைத்துவம்

சபையின் அன்றாட நடவடிக்கைகள் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரியின் உயர் முகாமைத்துவ மற்றும் சிரேட்ட முகாமைத்துவக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இடர்வரு நிலைகள் மற்றும் வாய்ப்புகள் அடையாளம் காணப்படுவதையும், சரியான நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும், இலக்குகளை அடைய வரவு செலவு திட்டங்கள் நிர்ணயிக்கப்படுவதையும் குழுக்கள் உறுதி செய்கின்றன.

# 2024 இல் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

| கூட்டத் திகதி | சபைக் கூட்ட இலக்கம் | பணிப்பாளர் பெயர் | பதவி | பங்கேற்பு |
|---|---|---|---|---|
| 05.01.2024 | 289 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 18.01.2024 | 290 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 08.02.2024 | 291 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 21.02.2024 | 292 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 05.04.2024 | 293 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | தீரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர | ☑ |
| 20.05.2024 | 294 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | தீரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர | ☑ |
| 14.06.2024 | 295 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | தீரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர | ☑ |

| | | | | |
|---|---|---|---|---|
| 27.06.2024 | 296 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர | ☑ |
| 10.07.2024 | 297 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 23.07.2024 | 298 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 13.08.2024 | 299 | திரு. அஜித் குணரத்த நாரகல | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | பணிப்பாளர் | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 13.09.2024 | 300 | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | பணிப்பாளர் | ☑ |
| | | திருமதி. ஜெனட் ஜயவர்தன | பணிப்பாளர் | ☑ |
| 14.10.2024 | 301 | திரு.எம்.ஆர்.எச்.ஸ்வர்ணதிலக்க | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி | பணிப்பாளர் | Ab |
| | | திரு.ஏ.சாணக்கிய லியனகே | பணிப்பாளர் | ☑ |
| 22.10.2024 | 302 | திரு.எம்.ஆர்.எச்.ஸ்வர்ணதிலக்க | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | செல்வி. டி.சீ.டபிள்யூ.ஹபுகொட | பணிப்பாளர் | ☑ |
| | | திரு.ஏ.சாணக்கிய லியனகே | பணிப்பாளர் | ☑ |
| 04.11.2024 | 303 | திரு.எம்.ஆர்.எச்.ஸ்வர்ணதிலக்க | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | செல்வி. டி.சீ.டபிள்யூ.ஹபுகொட | பணிப்பாளர் | ☑ |
| | | திரு.ஏ.சாணக்கிய லியனகே | பணிப்பாளர் | ☑ |
| 11.12.2024 | 304 | திரு.எம்.ஆர்.எச்.ஸ்வர்ணதிலக்க | தலைவர்/பி.நி.அதிகாரி | ☑ |
| | | செல்வி. டி.சீ.டபிள்யூ.ஹபுகொட | பணிப்பாளர் | ☑ |
| | | திரு.ஏ.சாணக்கிய லியனகே | பணிப்பாளர் | ☑ |

# இடர்வரு நிலை முகாமைத்துவம் பற்றிய அறிக்கை

பயனுறுதி மிக்க இடர்வரு நிலை முகாமைத்துவம் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழில் முயற்சி செயன்முறையின் பிரதான அம்சமாகும். எமது தொழில் முயற்சியில் இடர்வரு நிலைகள் மற்றும் பெறுபேறுகளுக்கு இடையில் பொருத்தமான சமநிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலுக்குள் எமது வளர்ச்சிக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் உதவி அளிக்கும் பொருட்டு இடர் வரும் நிலை சார்ந்த முகாமைத்துவ ஆற்றல்கள் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்வதற்கு முயன்று வருகின்றோம். இடர்வரு நிலை முகாமைத்துவம் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்படுத்தல் கட்டமைப்பின் பிரதான அம்சமாகும். முகம் கொடுக்க தயார் நிலையில் இருக்கின்ற இடர் வரும் நிலை மட்டத்திற்குள் இடர் வரும் நிலைக்கு இலக்காகக் கூடிய விடயங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக ஈட்டிக் கொள்ளுகின்ற வருமானம் மற்றும் மூலதனத்தின் பாதகமான அசைவுகளை கட்டுப்படுத்திக்கொள்வதற்கு நாம் முயன்று வருகின்றோம்.

இடர் வரும் நிலைகளை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் அவற்றை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கு பொறுப்புமிக்க அணுகுமுறையொன்று அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர்வரு நிலை முகாமைத்துவ முறைமையில் உள்ளடங்குகின்றது. இடர் வரும் நிலையினை பற்றி விழிப்புணர்வூட்டும் நடத்தைகளுக்கு உதவி வழங்கும் உறுதியான இடர் வரும் நிலை முகாமைத்துவ கலாசாரம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதன்மூலம் இடர்வரு நிலைகளின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உந்து சக்தியை வழங்குதல் தொடர்பாக எமது கவனம் பிரதானமாக செலுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தி லொத்தர் சபையின் நீண்டகால நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு நாம் எமது இடர் வரும் நிலை தொடர்பான மூலோபாயங்களை மேலும் விருத்தி செய்கின்றோம்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர் வரும் நிலை முகாமைத்துவ மூலோபாயமானது விசேட தரப்புகள், முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கான பின்னூட்டல் முறைமையாக செயற்படுகின்றது. சபையின் தொழில் முயற்சி தொழிற்படுத்தல்கள் முறைமை மற்றும் சேவைகள் சார்ந்ததாக விழிப்புணர்வுடன் தீர்மானம் மேற்கொள்ளும் மூலோபாய புள்ளியாக அதற்கு கிடைக்கும் அந்தஸ்த்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது பின்வரும் விடயங்கள் ஊடாக தொழில் முயற்சி இடர் வரும் நிலைகளுக்கு பதில் அளிப்பதற்கு மூலோபாய மற்றும் தொழில்முயற்சி, திட்டமிடல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில் முயற்சி செயன்முறை ஆகியவற்றுக்கு நிலையானதொரு அணுகுமுறையை வழங்குகின்றது.

- வணிக செயற்பாடுகள் மற்றும் அலகுகள் ஆகியவற்றில் காணப்படும் இடர் வரும் நிலை தொடர்பாக பொதுவான புரிதலை வழங்குதல்.
- முன்னேற்றம் அடைந்துள்ள முன்னுரிமைகளை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கு வசதி அளிக்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு தொடர்ச்சியாக இடர்பாடு நிலை தொடர்பான மதிப்பீடு ஒன்றை வழங்குதல்.
- ஊழியர்களின் விழிப்புணர்வு மற்றும் முகாமைத்துவ பொறுப்புக்களை அதிகரித்தல்.

**அபிவிருத்தி லொத்தர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனித்துவமான சில இடர் வரும் நிலைகளுக்கு உள்ளாகின்றது.**

### பரிசுகளை வழங்குவதில் இடர் வரும் நிலை

அனைத்து மொத்த மட்டத்திலும் பரிசுகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விகிதமொன்றை பேணிக் கொள்ளுதல் வேண்டும். இவ்விடயத்தில் காசுப் பாய்வுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய சம்பவங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காரணமாக அதிக விலை விகிதமொன்று காணப்படுவதற்கான இடர் வரும் நிலை தோன்றக்கூடும். மேற்படி இடர் வரும் நிலையினை கையாளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை அச்சகங்களில் இருந்து காப்புறுதி ஒன்றையும் பெற்றுக் கொள்ளுகின்றது.

### பொருளாதார இடர் வரும் நிலை

அபிவிருத்தி லொத்தர் சபையின் வாடிக்கையாளர்களின் கொள்வனவு போக்குகள் நாட்டில் காணப்படும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களினால் ஏற்படுத்தப்படும் உந்துசக்தியின் மீது தங்கியிருக்கின்றது.

### நிதிசார் இடர் வரும் நிலை

வினைத் திறனற்ற காசு பாய்வு முகாமைத்துவம் மற்றும் நிதி தகவல்கள் ஆகியவற்றின் இடர் வரு நிலை ஊடாக நிறுவனத்தின் இலாபத்தன்மை மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றிற்கு குந்தகமான நிலைமை ஏற்படுத்தக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை உரிய காப்புறுதி ஏற்பாடுகளை உறுதி செய்வதன் ஊடாக நிறுவனம் முழுவதிலும் கிரயத்தை கட்டுப்படுத்தும் மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல் போன்ற சம்பிரதாயமான நிதி இடர் வரும் நிலை முகாமைத்துவ நடைமுறைகளை பயன்படுத்துகின்றது.

### திரவத் தன்மை சார்ந்த இடர் வரும் நிலைகள்

உயர் மட்டத்திலான பரிசுகளை முன்கூட்டியே ஈட்டிக் கொள்வதன் ஊடாக நிதி திரவநிலை தொடர்பான இடர் வரும் நிலைகள் ஏற்படக்கூடும். இவ்வாறான இடர் வரும் நிலைகளை இயன்றளவு குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை நிதி சொத்துக்களை உயர்மட்டத்தில் பேணி வருகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தீர்க்கவேண்டிய வேண்டியவைகளை தீர்ப்பதற்கான ஆற்றலை கொண்டு இருந்தபோதிலும் சபையினால் செலுத்தப்படுவதற்கு கடப்பாடு கொண்டுள்ள கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது அவற்றை செலுத்தி தீர்ப்பதற்கு போதியளவு நிதி வளங்களை பேணி வருவதற்கு அல்லது உருவாக்கிக் கொள்வதற்கு இயலாதவிடத்து அல்லது கணிசமானளவு பாதகமான நிலையின் கீழ் அவற்றைச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் போது மாத்திரம் திரவ நிலை தொடர்பான இடர் வரும் நிலைமை தோன்றுகின்றது.

### தொழிற்படுத்தல் இடர் வரும் நிலை

முறைமைகள் செயலிழந்து போகுதல் தனி நபர்களினால் ஏற்படக்கூடிய தவறுகள் குற்றவியல் சார்ந்த செயற்பாடுகள் அல்லது உள்ளக முறைமைகள் செயலிழப்புக்கு உள்ளாகுதல் ஆகியவை காரணமாக ஏற்படக்கூடிய நட்டங்கள் தொழிற் படுத்தல் இடர் வரும் நிலையின் கீழ் வருகின்றது. அவ்வாறான நிலைமைகளின் காரணமாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கும் நிறுவனத்தின் நன் மதிப்பிற்கும் பாதகமான நிலைமைகள் ஏற்படக்கூடும். தொழிற்படுத்தல் இடர் வரும் நிலையினை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ச்சியாக உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்துகின்றது. நிறுவன ரீதியிலான இடர் வரும் நிலைகளில் ஊடாக ஏற்படும் அச்சுறுத்தல்களை இயன்றளவு குறைப்பதற்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் முகாமைத்துவத்தினால் தொழிற்படுத்தல் கூறுகள், வணிக செயன்முறைகள் மற்றும் பாரிய அளவிலான கூறுகள் தொடர்பாக தொடர்ச்சியாக இடர் வருநிலை தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது.

### வணிக இடர் வரும் நிலை

வணிக இடர் வரும் நிலை மூலோபாய மற்றும்.்.அல்லது நற்பெயர் சார்ந்த காரணங்களினால் விளையும் கிரயத்தின் அடிப்படையுடன் ஒப்பிடுகையில் ஏற்படக்கூடிய வருமான பற்றாக்குறைக்கு ஏதுவானதாகும். ஏனைய மேலதிக விடயங்களை நோக்குகையில் வெளி வாரியான பேரண்ட பொருளாதார சூழல் அபிவிருத்தி லொத்தர் சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற மூலோபாயம் மற்றும் சபையானது தொழிற்படும் சந்தைக்குள் அதற்கு காணப்படும் நற்பெயர் என்பவை சபையின் வருமானத்தை ஈட்டும் ஆற்றலின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

### நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலை

பங்குதாரர்கள் மத்தியில் அபிவிருத்தி லொத்தர் சபையின் நற்பெயருக்கு பாதகமான நிலை ஏற்படுதல் காரணமாக நற்பெயருக்கு இடர் வரும் நிலை ஏற்படக்கூடும் என்பதுடன் அதன்மூலம் வணிகத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் உள்ள ஆற்றல் பாதிக்கப்படுகின்றது. நம்பகத்தன்மை புரிதல் மற்றும் வணிக ரீதியிலான தொடர்புகள் வீழ்ச்சி அடைவதன் ஊடாக அவ்வாறானதொரு பாதக நிலைமை ஏற்படக்கூடும்.

அபிவிருத்தி லொத்தர் சபை கட்புல ஊடகங்கள் மற்றும் பொது நலன் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்து செயற்படுவதன் காரணமாக சபை கணிசமானளவு நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலைக்கு உள்ளாகின்றது. இந்த இடர் வரும் நிலையை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை பொது நலனை தக்கவைத்துக் கொள்வதற்காக பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் சணிகங்களை நடைமுறைப்படுத்துவதுடன் பெருமளவில் முறைமை சார்ந்த வெளிப்படைத்தன்மையை பின்பற்றி செய்யப்படுகின்றது.

### சட்டம் சார்ந்த இடர் வரு நிலைகள்

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக மேற்கொள்ளப்படக் கூடிய எதிர்கால சட்ட நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் சட்டம் சார்ந்த பாதக நிலைமைகள் ஏற்படக்கூடிய இடர் வரும் நிலை அதிகரிக்கக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை அங்கீகாரமுடைய சட்ட தொழில்வாண்மையாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அவ்வாறான நடவடிக்கைகளை குறைத்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடர்வரு நிலைகள்

தகவல் தொழில்நுட்ப முறைமைகள் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற திட்டவட்டமான தும் காலோசிதமானதுமான தகவல்கள் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்பாட்டு செயல்முறைகளின் அடிப்படை அம்சமாகத் திகழ்கின்றது.

# கணக்காய்வு குழு அறிக்கை

2024 டிசம்பர் 31ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிதி ஆண்டிற்கான எமது அறிக்கையினை மகிழ்ச்சியுடன் நாம் சமர்ப்பிக்கின்றோம்.

### கணக்காய்வுக் குழுவினர்

2024 ஆம் ஆண்டு கணக்காய்வுக் குழு பின்வரும் ஆறு (06) நிறைவேற்று பதவியல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது

| | | |
|---|---|---|
| 1. | செல்வி டி.சி.டபிள்யூ. ஹபுகொட (21.10.2024 முதல் இன்று வரை) | கணக்காய்வு குழு தலைவர் |
| 2. | திரு. ஏ. சாணக்கிய லியனகே (30.09.2024 முதல் இன்று வரை) | கணக்காய்வு குழு அங்கத்தவர் |
| 3. | திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார (01.01.2024 முதல் 30.09.2024 வரை) | கணக்காய்வுக் குழுவின் முன்னாள் தலைவர் அங்கத்தவர் |
| 4. | திரு. ஏ.எம்.பி.எம்.பி. அதபத்து (01.01.2024 முதல் 24.09.2024 வரை) | கணக்காய்வுக் குழு அங்கத்தவர |
| 5. | திருமதி ஜெனட் ஜயவர்தன (01.01.2024 முதல் 21.09.2024 வரை) | கணக்காய்வுக் குழு அங்கத்தவர |
| 6. | செல்வி கே.ஏ.எச். புபுதுசிறி (01.01.2024 முதல் 20.10.2024 வரை) | கணக்காய்வுக் குழு அங்கத்தவர |

பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் - பிரதிப் பொது முகாமையாளர் - நிதி உள்ளகக் கணக்காய்வாளர், உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் கட்டாயமானதாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் இக்குழுவில் அவதானிப்பாளராக இக்கூட்டங்களில் பங்கேற்பார். மேலும், நிதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுத் தலைவர் இக்குழுவில் அவதானிப்பாளாராக இக்கூட்டங்களில் பங்கேற்பார்.

### கணக்காய்வு குழுவின் வகிபாகம்

பங்கீடுபாட்டாளர்களின் கரிசனைகளையும் சபைக்கு சொந்தமான சொத்துக்களையும் பாதுகாத்து கொள்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை பேணி வருதல் வேண்டும். நிதி அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் விடுக்கப்படும் வழிகாட்டுதல்களையும் குழு பின்பற்றுகின்றது. 2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் கணக்காய்வு குழுவினால் அதன் பிரதான பொறுப்புகளுக்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

1. ஆண்டுக்கான நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்கு முன்னர் கூற்றுகளின் இசைந்தொழுகும் தன்மையையும் முழுமையையும் ஆராய்ந்தறிதல் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள முக்கியமான நிதி அறிக்கையிடல்களை மீளாய்வு செய்தல். கணக்கீட்டு நியமங்கள் குறிப்புகள் வழக்கங்கள் தீர்மானங்கள் தேவைப்படுகின்ற பிரதான துறைகள் மற்றும் சட்ட அத்துடன் ஒழுங்குறுத்தல் தேவைகளுக்கு இசைந்தொழுகுவதை மீளாய்வு செய்தல் இதில் உள்ளடங்குகின்றன. நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதனூடாக கண்டறியப்பட்ட விடயங்களை மீளாய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தது.

2. அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு உள்ளக கணக்காய்வு தொடர்பான காலத்துக்குரிய கணக்காய்வு அறிக்கைகள் உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் வாயிலாக சபையின் இயங்கு நிலையில் காணப்படும் முறைமைகள் மற்றும் நடவடிக்கை முறைகளில் உள்ள குறைபாடுகள் வலியுறுத்தப்பட்டு சுட்டிக்காட்டப் படுவதுடன் விதப்புகைளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் தேவையான சந்தர்ப்பங்களில் தற்போது உள்ள நடைமுறைகள் மற்றும் செயல் ஒழுங்குகளை மேம்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு குழுவுக்கு முன்னேற்றம் அறிக்கை இடப்படுகின்றது. கணக்காய்வு குழுவிற்கு உள்ளக கணக்காய்வு மூலம் தொடர்ச்சியாக அறிக்கைகள் கிடைப்பதுடன் அக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வின் மூலமும் கண்டறியப்பட்ட பிரதான விடயங்கள் தொடர்பான ஒரு சாராம்சமும் மேற்படி அறிக்கையில் உள்ளடங்குகின்றது. முகாமைத்துவத்தின் கருத்துக்களும் அதில் ஒரு பகுதியாக அமைவது உடன் கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ள நிலைமைகளுக்கு காரணமாக அமையும் அடிப்படை விடயங்கள் மட்டும் அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளும் குழுவினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

3. உள்ளக கணக்காய்வினதும் அரச கணக்காய்வினதும் உதவியுடன் குழு சபையின் தொழிற்படுத்தல் மற்றும் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறைகளின் பயனுறுதியை மதிப்பீடு செய்வதுடன் அவற்றின் செலவு, வருமான செயன்முறைகள் மூலதன செலவினத்திற்காக அனுமதி வழங்கும் வரம்புகள், கையொப்பமிடும் அதிகாரிகள், தகவல் தொழில்நுட்ப உள்ளீடுகளின் கட்டுப்பாடு மற்றும் விருத்தி செய்தல், தாபனத்தின் கட்டமைப்பு, கொள்கைகள் கடமைகளை ஒதுக்கிக் கொடுத்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுகள் உள்ளடங்குகின்றன. சபையின் நிதி நிலை கூற்றில் திரவத் தன்மை தொடர்பாக தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது. அங்கு இனங்காணப்பட்ட குறைபாடுகள் தேவையான மேம்படுத்த லுக்கான பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை இடப்படுகின்றது. அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினால் கொடுக்கப்படுகின்ற பணிப்புரைகள் மீது குழு விசேட கவனத்தைச் செலுத்துகின்றது.

### நடாத்தப்பட்ட கணக்காய்வு குழு கூட்டங்களின் எண்ணிக்கை

2024 ஆம் ஆண்டில் 04 கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதற்கு வருகை தந்தவர்கள் பின்வருமாறு.

| பணிப்பாளரின் பெயர் | வருகை | வருகை தராமைக்கான அனுமதி |
|---|---|---|
| செல்வி. டி.சீ.டபிள்யூ.ஹபுகொட | 02/02 | இல்லை |
| திரு.ஏ.சாணக்கிய லியனகே | 02/02 | இல்லை |
| திருமதி. ஜெனட் ஜயவர்தன | 02/02 | இல்லை |
| திரு.ஏ.எம்.பீ.எம்.பீ. அதபத்து | 01/01 | இல்லை |
| திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார | 01/01 | இல்லை |
| செல்வி. கே.ஏ.எச். புபுதுசிறி | 02/02 | இல்லை |



**செல்வி. டி.சீ.டபிள்யூ. ஹபுகொட**
தலைவர் - கணக்காய்வுக் குழு




# நிதியியல் அறிக்கை


| | |
|---|---|
| சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை | 59 |
| கணக்காய்வு அறிக்கை - 2024 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் | 67 |
| விரிவான வருமானக் கூற்று | 85 |
| நிதி நிலைக் கூற்று | 86 |
| காசுப் பாய்வுக் கூற்று | 87 |
| உரிமைப் பங்குகளின் மாற்றம் பற்றிய கூற்று | 88 |
| கணக்கீட்டு கொள்கைகள | 89 |
| பிரிவுசார் அறிக்கை | 95 |
| இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புகள | 96 |
| பத்தாண்டு கால பொழிப்பு | 109 |

# சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

தலைவர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிதிநிலை கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றம் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று ஆகியவற்றுக்கு ஏதுவான குறிப்புகள், பொழிப்புக்குட்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கிட்டுக் கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971ம் ஆண்டின் 38 இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழும் தாக்கத்தை தவிரந்த சபையின் 2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிதிநிலை மற்றும் அத்தினத்தில் நிறைவடைந்த ஆண்டுக்கான அதன் நிதி செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்வுகள் அரச கணக்கீட்டு நியமங்களின் தரநியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைகளை வெளிப்படுத்துகின்றதென்பதே எனது அபிப்பிராயமாக அமைகின்றது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை**

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07இற்கு அமைவாக மறைமுகமான வழியில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமாக காசுப் பாய்ச்சல் கணிப்பீட்டின்போது முதலீட்டு வட்டி வருமான வரியை முன்னைய இலாபத்துடன் மீண்டும் சேர்த்து வருடத்தினுள் உண்மையான பணமாக பெறப்பட்ட வட்டித் தொகையாக முதலீட்டு செயற்பாட்டின் கீழ் கிடைக்கப்பெற்ற தொகையாக காண்பிக்க வேண்டிய போதிலும், 2024ஆம் ஆண்டின் முதலீட்டு வட்டி வருமானமாக முன்னைய வருடத்தின் இலாபத்துடன் மீண்டும் சேர்க்கப்பட்ட ரூ. 177,922,791 பணத்தொகை முழுவதும் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழான முதலீட்டு வட்டித்தொகை பெறுகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்த போதிலும், வருடத்தினுள் உண்மையான பணமாக பெறப்பட்ட முதலீட்டு வட்டித்தொகை ரூ. 284,754,828 ஆகும். அதற்கமைய முதலீட்டு வட்டித் தொகையானது ரூ. 106,832,037ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07இற்கு அமைவாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் வருடத்தில் முதலீட்டுப் பணம் வெளிப்பாய்ச்சல் மற்றும் முதலீட்டுப் பணம் உட்பாய்ச்சல் என்பன வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வு வருடத்தில் முதிர்ச்சியின் பின்னர் மீள் முதலீடு செய்யாமல் நிலையான வைப்புக் கணக்குகள் இரண்டிலிருந்து பெறப்பட்ட ரூ. 377,732,522 தொகை மற்றும் மீளாய்வு வருடத்தில் நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூ. 9,791,292 தொகைகள் காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் என்ற வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருக்காத அதேவேளை, நிலையான வைப்புக்களில் இருந்து பெறப்பட்ட தொகையாக ரூ. 474,773,267 சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய நிலையான வைப்புக்களில் இருந்து பெறப்பட்ட ரூ. 106,832,037 தொகையானது கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16இன் 07ஆவது பந்திக்கு அமைவாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஒவ்வொரு வரும்படியிலிருந்து பெறக்கூடிய பொருளாதார நன்மை நிறுவகத்திற்கு கிடைக்குமாயின் மற்றும் அதன் செலவினை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் மாத்திரம் அவற்றை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும் பொருளாதார நன்மைகள் நிறுவகத்திற்கு கிடைக்கும் என்ற நிபந்தனையினை நிறைவேற்ற முடியாத பௌதீக ரீதியாக சபையிடம் இல்லாத ரூ. 8,095,000 பெறுமதியைக் கொண்ட கெப் வண்டி மற்றும் தற்பொழுது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ள ரூ. 7,641,159 பெறுமதியைக் கொண்ட 07 சீட்டிழுப்பு இயந்திரங்கள் மீளாய்வு வருடத்தினுள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஈ) அபிவிருத்தி லொத்தர் சபையின் உணவறை, களஞ்சிய அறை மற்றும் எல்லைச்சுவர் திருத்தங்களுக்காக 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ரூ. 1,728,884 செலவினை இடம்பெற்றுவரும் வேலைகளாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வு வருட நிறைவின் போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு 07 வருடங்களைத் தாண்டியுள்ள போதிலும் அசியமான கணக்கீட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகளாக தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சிராக்கல் எண்ணக்கருவின் (ஆயவஉாபெ ஊழஉெநிவ) அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கணிப்பின் போது வருமானத்திற்கு எதிராக அந்த வருமானத்தை ஈட்டிக்கொள்ள செய்யப்பட்ட செலவுகள் அனைத்தும் வெட்டி அகற்றப்படுதல் வேண்டுமென்ற போதிலும் அந்த எண்ணக்கருவிற்கு எதிரான வகையில் மீளாய்வு வருடத்தினுள் 08 வகையான லொத்தர் சீட்டுக்களின் பரிசுகளுக்கான செலவுகளாக பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய செய்யப்பட்ட செலவாக ரூ. 15,094,967,030 அடையாளம் காணப்பட்டிருந்தது. எனினும் அந்த லொத்தர் சீட்டுகளுக்குரியதான வெற்றிப் பரிசுகளின் செலவு 14,945,564,011 எனும் தொகையாக காணப்பட்டதனால் மீளாய்வு வருடத்தில் பரிசுகளுக்கான செலவுகளாக 149,403,019 எனும் தொகை அதிகமாக கணக்குகளில் வைக்கப்பட்டிருந்து. அதற்கமைய மீளாய்வு வருடத்தின் இலாபம் மேற்குறிப்பிட்ட தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2024 ஜனவரி 01 முதல் பெப்ரவரி 28 வரையிலான காலகட்டத்தில், சனிக்கிழமை அதிஸ்டம், லக்ன வாசனா, ஜயோதா, சூப்பர்போல், அத கோடிபதி, சுபிரி தன சம்பத ஆகிய 06 வகையான லொத்தர் சீட்டுகளுக்கு தெவன வரம (இரண்டாவது அதிஸ்டம்) என்ற பெயரில் வழங்கப்பட்ட சிறப்புப் பரிசுகளுக்காக ஏற்பட்ட மொத்த பரிசுச் செலவுகள் ரூ. 64,100,000 ஆகும், இது அந்த ஆண்டிற்கான பரிசுச் செலவாகக் கணக்கிடப்படாமல் பரிசு இருப்பு நிதியில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, சீராக்கல் எண்ணக்கருவிற்கு முரணாக பரிசுச் செலவை அங்கீகரித்ததன் காரணமாக மீளாய்வு ஆண்டிற்கான லாபம் ரூ. 64,100,000 ஆல் அதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

(எ) அட்டுரு எண்ணக்கருவின்படி, அட்டுரு செலவுகளை அடையாளம் காணும்போது பின்வரும் தற்போதைய தொடர்பு காணப்பட வேண்டும் என்பதுடன் அந்த் செலவைத் தீர்க்கின்ற போது வளங்கள் வெளிச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளமையும் அதன் மதிப்பு நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடியதாக இருக்க வேண்டுமென்பதுமான காரணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். 2021 ஆம் ஆண்டு முதல் அட்டுரு செலவுகளை அடையாளம் காணும் முறைமையில் நிலவும் பலவீனங்கள் காரணமாக, சில அட்டுரு செலவுகள் அட்டுரு எண்ணக்கருவிற்கு முரணான வகையில் இருப்பது அடையாளம் காணப்பட்டிருந்த அதேவேளை, செலவுகள் அடையாளம் காணப்பட்ட ஆண்டிற்கு அடுத்த ஆண்டில் செலவுகள் ஏற்படாததால், அது வருமானமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் அவை அட்டுரு செலவுகளாக அடையாளம் காணப்பட்டிருந்தாலும், செலவுகள் செய்யப்படாத காரணத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூ. 12,848,010 மீண்டும் இலாபத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஏ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 10(ஆ)வின் படி, எதிர்கால மதிப்பீட்டு ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செலவுகள் அல்லது இழப்புகளுக்காக இருப்பு அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட தொகையிலிருந்து வரி விதிக்கக்கூடிய வருமானத்தைக் கணக்கிடும் போது அதனைக் குறைப்பதற்கு அனுமதிக்கப்படாது. எனவே, விரிவான வருமான அறிக்கையில் செலவாகப் பற்று வைக்கப்பட்ட அத்தகைய ஏற்பாடுகள் வரி விதிக்கக்கூடிய வருமானத்தைக் கணக்கிடுகின்ற போது இலாபத்தில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும். 2024 டிசம்பர் 31ஆம் திகதியில் பணியாளர் பணிக்கொடை பொறுப்பை மறுமதிப்பீடு செய்தபோது பற்றாக்குறை ஏற்பாடாக விரிவான வருமான அறிக்கையில் பற்று வைக்கப்பட்டிருந்த ரூ. 4,570,469 பணிக்கொடை ஒதுக்கீடு மற்றும் 2003 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் ஒரு கட்டிடத்தைப் பெறுவதற்காக திரும்பப்பெறக்கூடிய அடிப்படையில் செலுத்தப்பட்ட ரூ. 723,780 வைப்புத்தொகை திரும்பப் பெறுவது நிச்சயமற்றதாக இருந்தது, எனவே 2024 ஆம் ஆண்டில் நிச்சயமற்ற பெறுகைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.723,780 வரி விதிக்கக்கூடிய வருமானத்தைக் கணக்கிடும்போது இலாபத்தில் சேர்க்கப்படவில்லை. எனவே மீளாய்வு ஆண்டிற்கான வருமான வரி ரூ.1,159,274 ஆல் குறைவாகக் கணக்கிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்து.

(ஐ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16(4) ஆம் பிரிவின் 02 உபஅட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய முழுமையான மூலதன கொடுப்பனவாக பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை அகற்றுகின்ற போது ஏற்படக்கூடிய நட்டங்கள் வரி இலாபங்கள் கணிப்பிடப்படுகின்ற போது வாய்ப்பளிக்கப்படாத செலவுகள் என்ற காரணத்தினால் மீண்டும் கணக்கீட்டு இலாபத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டும். மீளாய்வு வருடத்தில் சபையினால் முழுமையான மூலதனக் கொடுப்பனவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 502,595 அலுவலக உபகரணங்களுக்கான செலவு, ரூ. 289,791 மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்துதல் செலவு மற்றும் ரூ. 12,570 கணினிகள் செலவு என்பன மீளாய்வு வருடத்தில் அகற்றப்பட்டதன் காரணமாக மொத்தமாக ஏற்பட்ட ரூ. 467,974 என்ற நட்டத்தொகை மீளாய்வு வருடத்தின் செலவாக கணக்கீட்டு இலாபத்திலிருந்து குறைக்கப்பட்டிருந்த போதிலும் விதிக்கத்தக்க வரிக் கணிப்பீட்டின் போது அந்த இலாபம் மீண்டும் வருமானத்துடன் சேர்க்கப்பட்டிருக்காத காரணத்தினால் மீளாய்வு வருடத்தின் வருமானம் வரி ரூ. 140,392 ஆல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மூலதனக் கொடுப்பனவுகள் கணிப்பீடு செய்யப்பட்டு விதிக்கத்தக்க வரி வருமானம் கணிப்பீடு செய்யப்படுகின்ற போது அவை குறைக்கப்பட வேண்டுமென்றுள்ள போதிலும் சபையினால் விதிக்கத்தக்க வரி வருமானக் கணப்பீட்டின் போது மூலதனக் கொடுப்பனவு சரியாக கணிப்பீடு செய்யப்பட்டிருக்காத அதேவேளை மீளாய்வு வருடத்தின் தேய்மானச் செலவாகிய ரூ. 109,667,357 இல் நூற்றுக்கு 60 வீதமாகிய ரூ. 65,800,414 மூலதனக் கொடுப்பனவாக குறைக்கப்பட்டிருந்தது.

(ஓ) அசையாச் சொத்துக்களுக்குரியதான 06 பேரேட்டுக் கணக்குகளில் 2024ஆம் ஆண்டில் தேய்மானச் செலவாக ரூ. 34,116,012 கணக்கு வைக்கப்பட்டிருந்த அதேவேளை, அந்த சொத்துக் கணக்குகளுக்குரியதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் அட்டவணைக்கமைய தேய்மானச் செலவு ரூ. 33,367,046 ஆக காணப்பட்டது. அதன்படி, மீளாய்வு வருடத்தில் ரூ. 748,966 தேய்மானச் செலவாக கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் எசோசியேட்டட் நியுஸ்பேபர்ஸ் லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளபடியாக சபையின் அறிக்கைகளுக்கு அமைய செலுத்த வேண்டிய தொகை முறையே ரூ. 62,960,000 மற்றும் ரூ. 3,875,113 ஆன போதிலும் அவ்விரண்டு நிறுவனங்களும் கணக்காய்விற்கு நேரடியாக உறுதிப்படுத்திய தொகை முறையே ரூ. 77,079,512 மற்றும் ரூ. 6,343,788 என்றிருந்தமையால் அந்நிலுவைகளுக்கிடையில் வேறுபாடு காணப்பட்டது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது பொறுப்பானது, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் பொருட்டு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானதும் பொருத்தமானதாகவும் அமைகின்றது என்பதே எனது நம்பிக்கையாகும்.

### 1.3 சபையின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, ஆயினும், அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படுகின்றன. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பாக முகாமைத்துவமே பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயத்தின் ஊடாக மேற்படி ஏனைய தகவல்கள் உள்வாங்கப்படுவதில்லை என்பதுடன் அது தொடர்பாக எவ்விதத்திலும் உறுதிகூறுதல் அல்லது அபிப்பிராயம் தெரிவித்தல் என்னால் மேற்கொள்ளப்படுவதில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கு ஏதுவாக, எனது கடப்பாடு யாதெனில், மேற்படி இனங்காணப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும் போது அதனை வாசித்தலும் அவ்வாறு வாசிக்கும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு முறையில் பெற்றக்கொண்ட எனது அறிவுக்கு எட்டிய வரையிலும் பொறுண்மையில் பொருந்தாதுள்ளதா என்பதை பரிசீலனை செய்வதாகும்.

சபையின் 2024 ஆம் ஆண்டறிக்கையினை வாசிக்கும் போது, அதில் பொறுண்மையில் பிறழ் கூற்றுக்கள் உள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து திருத்துவதற்காக நிர்வகிக்கும் தரப்புகளுக்கு அவ்விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அதனையடுத்தும், திருத்தப்படாமல் தவறாக காட்டப்பட்டிருக்குமாயின் அவற்றை அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்புகள் கொண்டுள்ள பொறுப்பு

இந்த நிதிக் கூற்று இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் அத்துடன் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையில் பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு ஆற்றல் கிட்டுவதற்காக தேவையாக அமையும் உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் ஆகியவை முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது நிறுவனத்தை இடையறாமல் பேணி வருவதற்கான ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன் நிறுவனத்தை கலைப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத போது தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் தவிர இடையறாத இருப்பின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுதல் மற்றும் நிறுவனத்தின் இடையறாத இருப்புக்கு ஏதுவான விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு கட்டுப்படுத்தும் தரப்புகளினால் வகிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவுக்கு அமைவாக நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலத்துக்கு ஏதுவான நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் தங்களது சொந்த வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரியவாறு பதிவேடுகளையும் அறிக்கைகளையும் பேணி வருதல் வேண்டும்.

**1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடிகள் மற்றும் தவறுகளினால் ஏற்படக்கூடிய பொருண்மையில் பிறழ் கூற்றுக்களற்றதாக இருக்கின்றதென நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது குறிக்கோளாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றதெனினும் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொருண்மையில் குறைவான வெளிப்படுத்தல்களை வெளிக்கொணர்கிறது என்பதை உறுதிப்படுத்துவதாக அமைவதில்லை. மோசடிகள் அல்லது தவறுகள் தனியான அல்லது கூட்டான வகையில் தாக்கம் விளைவிப்பதால் பொருண்மையில் குறைவான வெளிப்படுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதுடன் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு இதன் பயன்படுத்துனர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கங்கள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்வாண்மை ரீதியிலான தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்வாண்மை ரீதியிலான ஐயப்பாடுகளுடன் கூடியதாக இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு என்னால் மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையில் தவறான கூற்றுக்களின் இடர்வரு நிலையை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் மதிப்பீடு செய்தலின் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்கீட்டு நடைமுறைகளை திட்டமிடுவதன் ஊடாக மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற இடர்வரு நிலைகளை தவிர்த்துக் கொள்ளுதல், போதுமான வகையிலும் பொருத்தமான வகையிலும் கணக்காய்வு ஆதாரங்களை பெற்றுக் கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. பொருண்மையில் தவறான கூற்றுக்களின் மூலம் ஏற்படக் கூடிய தாக்கங்களை பார்க்கிலும் மோசடியின் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கம் பாரதூரமாக இருப்பதுடன் மறை சூழ்ச்சி, போலி ஆவணங்களைத் புனைதல், கருத்தொன்றிய கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளின் கைவிடல்கள் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கான நோக்கத்தினாலன்றி, சந்தர்ப்பத்துக்கேற்றாற்போல், கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுதலின் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பாக புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் ஏற்புடையமை கணக்கிட்டு மதிப்பீடுகளினதும் நியாயம் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்களின் பாராட்டப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் இடையறாத இருப்பு தொடர்பாக பொருண்மையின் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா எனும் விடயம் தொடர்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கிட்டு ஆதாரங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத இருப்பு தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்திக் கொள்வதின் ஏற்புடையத் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதென என்னால் தீர்மானிக்கப்படுமாயின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக காணப்படும் வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக அமையாத போது எனது கருத்தினை சிறிது மாற்றியமைத்துக் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் இடையறாத இருப்பு முடிவுக்கு வரக்கூடும்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான வகையிலும் நீதியான முறையிலும உள்ளடங்கியுள்ளதென வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் பாராட்டப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாடுகளின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் தரப்புகள் விழிப்புணர்வூட்டுகின்றேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை**

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் அழுத்தத்தினைத் தவிர, கணக்காய்வுக்கு தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது சோதனைகளின் மூலம் காணக்கூடிய வகையில் உரியவாறு நிதி அறிக்கைகள் நிறுவனத்தினால் பேணிவரப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் (6) (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இசைந்தொழுகுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (ஊ)ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக முன்னைய வருடத்தில் என்னால் விதப்புரை செய்யப்பட்டுள்ள விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையிலும் பின்வரும் கூற்றுக்களை முன்வைப்பதற்கு நேர்ந்திடும் வகையிலான எதுவும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் எவரேனும் அங்கத்தவருடன் சபை தொடர்புகளை பேணி எவ்வித ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் நேரடியாகவோ வேறு வழிமுறைகளின் ஊடாகவோ பொதுவான தொழில் முயற்சி நிலைகளுக்கு புறம்பாக தொடர்பு காணப்படுகின்றது எனும் விடயம்,

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்பை தவிர்ந்த ஏதேனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான சட்டம் அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் விடுக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகாத வகையில் நடந்து கொண்டுள்ளதாக,

| **சட்டங்கள், விதிகள்/ஏற்பாடுகளுடனான தொடர்புகள்** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) 1997இன் 20ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 19ஆவது பிரிவு | லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட வேண்டிய விலை, அதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள், சீட்டு விற்பனை செய்யப்பட வேண்டிய அல்லது விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதம், விற்பனைப் பிரதிநிதிகளை சேவையில் ஈடுபடுத்துதல், அவர்களுக்கு செலுத்த வேண்டிய உழைப்புக் கொடுப்பனவுகள், சீட்டின் வெற்றி இலக்கங்கள் மற்றும் வெற்றியாளர்களை பிரசித்தப்படுத்தல் மற்றும் அவசியமான ஏனைய விடயங்கள் தொடர்பில் விதிகளைத் தயாரிக்க வேண்டுமென்ற போதிலும் 2024 வருட இறுதி வரையிலும் சட்டத்தின் பிரகாரம் விதிகளை ஆக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) (i) 1997இன் 20ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 11ஆவது பிரிவு<br>(ii) தேசிய வரவுசெலவுத் திணைக்களத்தின் 2024 ஜனவரி 10 ஆம் திகதிய, 01/2024ஆம் இலக்க அரசாங்க செலவுக் கட்டுப்பாடு தொடர்பான தேசிய வரவுசெலவுச் சுற்றறிக்கையின் 12.3 ஆம் பிரிவு<br>(iii) பகிரங்க முயற்சியாண்மை திணைக்களத்தின் 2024 பெப்ரவரி 28ஆம் திகதிய, 01/2024ஆம் இலக்க பகிரங்க முயற்சியாளர்களின் செலவு முகாமைத்துவ மற்றும் நிலைபேரான முயற்சியாண்மை பற்றிய சுற்றறிக்கையின் 14.1 ஆம் பிரிவு, | சட்டத்தினதும் சுற்றறிக்கையினதும் ஏற்பாடுகளுக்கு முரணாக 2024 ஜுன் 19 முதல் ஜுலை 24 வரையான காலப்பகுதியினுள் ஜனாதிபதி<br>நிதியத்தினால் நாட்டில் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் தரம் 01 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் கல்வி பயிலும் 100,000 மாணவர்களுக்கு மற்றும் க.பொ.த (உயர் தரம்) பயிலும் தெரிவு செய்யப்பட்ட 6000 மாணவர்களுக்கு வழங்கும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் விழா ஏற்பாடுகளுக்காக சபையினால் மொத்தமாக ரூ. 73,266,631 மீளாய்வு வருடத்தில் செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவை<br>(i) 4.3.1 பிரிவு<br>(ii) 4.2.3 பிரிவின் 31ஆவது துணைப்பகுதி<br>(iii) 2.12 பிரிவு | பெறுகை நடவடிக்கைகளுக்காக சகல தொடர்புடைய செலவுகளும் உள்ளடங்கிய செலவு மதிப்பீடொன்று நிறுவகத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென்ற போதிலும் ரூ. 185 மில்லியன்களைக் கொண்ட மதிப்பீடொன்று இரண்டு லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் பெறுகைக்காக முழுமையான செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| சட்டங்கள், விதிகள்/ஏற்பாடுகளுடனான தொடர்புகள் | இணக்கமின்மை |
|---|---|
| | இரண்டு லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் பெறுகைக்கான செயற்பாடு ஆகக் கூடுதலாக 06 வாரங்களுக்குள் நிறைவு செய்யப்படுதல் வேண்டுமென்ற போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்ட 2023 ஏப்ரல் 27ஆம் திகதியிலிருந்து பெறுகைச் செயற்பாடுகளை நிறைவு செய்து தெரிவு செய்யப்பட்ட வழங்குநருடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது, 2024 பெப்ரவரி 20ஆம் திகதி வரையான 42 வாரங்கள் நிறைவடைந்த பின்னராகும்.<br><br>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களில் இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பிலான வணிக ரீதியான இரகசியங்கள் தொடர்பில் மதிப்பதாகவும் தமது பக்கச்சார்பின்மை, உண்மைத்தன்மை, தனிப்பட்ட தொடர்புகளைப் பேணாமை ஆகியவை தொடர்பில் உறுதியளித்து பெறப்பட வேண்டிய உறுதிமொழிக் கூற்றுக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடமிருந்து பெறப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) முகாமைதத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16ஆம் திகதிய செயற்பாட்டுப் பணிகள் கோவையின் 3.2(v) பந்தி | முகாமைதத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒழுங்குவிதிக்கமைய ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதாக பணிப்பாளர் சபை உறுதியளிக்க வேண்டுமென்ற போதிலும் முகாமைதத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கான ஒழுங்குவிதி எதுவுமின்றி மீளாய்வு வருடத்தில் ரூ. 121,772,415 ஊக்குவிப்புக் கொடுப்பனவாக பணியாட் டொகுதியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) 2015 மே 25ஆம் திகதிய, PED 01/2015 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம்<br>(i) 2ஆம் பந்தி<br><br>(ii) 3.1ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறுவதற்கான தகைமையற்ற MM 1-1 தரத்தின் உதவிப் பொது முகாமையாளர் பதவிகளை வகித்த ஆறு அலுவலர்களுக்காக 2024 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து நவம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>எரிபொருள் கொடுப்பனவைப் பெறுவதற்கான தகைமையற்ற எனினும் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த MM 1-1 தரத்தின் உதவிப் பொது முகாமையாளர் பதவிகளை வகித்த எட்டு அலுவலர்களுக்காக 2024 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து நவம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு எரிபொருள் செலவினை ஈடு செய்வதற்காக ரூ. 3,274,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) 2016 மே 30ஆம் திகதிய, 04/2016 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறுவதற்கான தகைமையற்ற MM 1-1 தரத்தில் பதவி வகிக்கும் அலுவலர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதென்ற போதிலும் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் MM 1-1 தரத்தில் உதவிப் பொது முகாமையாளராக (விற்பனை) பதவி வகித்த பெண்அலுவலர் ஒருவருக்கு செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட மோட்டார் வாகனமொன்று 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 31 வரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்படி மோட்டார் வாகனத்திற்கென அக்காலப்பகுதியில் செயற்பாட்டுக்குத்தகை வாடகையாக ரூ. 1,564,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (எ) 2022 ஜனவரி 14ஆம் திகதிய, PED 01/2015 (ii) ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் | சபையின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்(நிதி), பிரதிப் பொது முகாமையாளர்(விற்பனை) பதவிகளைக் கொண்ட அலுவலர்களுக்கு சுற்றுநிருபத்தின் படி அனுமதிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் அளவினை விஞ்சி 2024 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்கு ரூ. 125,483 கூடுதலாக எரிபொருள் செலவாக ஈடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஏ) அரச முயற்சியாண்மை திணைக்களத்தின் 2021 நவம்பர் 16ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க அரச முயற்சியாண்மை செயற்பாட்டுக் கையேட்டின் 3.5 ஆவது பந்தி | அமைச்சரவையின் அனுமதியின்றி அபிவிருத்தி லொத்தர் சபையின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் இருவருக்கு நிதி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதியில் கடமையாற்ற விடுவிப்பதற்கு பணிப்பாளர் சபை அனுமதி அளித்திருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இசைந்தொழுகாத வகையில் பணியாற்றியுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்புகளை தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும், பயனுறுதிமிக்க வகையிலும், வினைத்திறன்மிக்க வகையிலும் சம்பந்தப்பட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக பெறுகைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படாமை.

(அ) 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி தொடக்கம் 2025 ஜுலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சபையால் 07 வகையான லொதத்தர் சீட்டுக்களின் உருவாக்கம், மேம்பாடு, அச்சிடல் மற்றும் வழங்கல் ஆகிய விடயங்களுக்கான பெறுகையின் போது ஜயோதா மற்றும் சுப்பர் போல் ஆகிய சீட்டுக்களுக்கு ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்திருந்த விலைமனு, விலைமனுப் பட்டியலில் 2.ஊ பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுதாரர்களால் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளை நிறைவேற்றாதிருந்ததாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்து அடிப்படை விலைமனு மதிப்பீட்டின் போது அதனை அகற்றியிருந்தது. மேற்படி இரண்டு வகையான லொத்தர் சீட்டுக்கள் உட்பட மூன்று வகையான லொத்தர் சீட்டுக்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் விலைமனுப் பட்டியலில் 2.ஊ பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுதாரர்களால் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளை நிறைவேற்றியிருக்கவில்லை. அதற்கமைய விலைமனுதாரர்களால் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை எனத் தெரிவித்து ஆகக் குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்த விலைமனுதாரரை அடிப்படை விலைமனு மதிப்பீட்டின் போது நிராகரித்துவிட்டு அதே தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாதிருந்த விலைமனுதாரருக்கு ஒப்பந்தத்தை ஒப்படைந்திருந்த காரணத்தால் ஜயோதா மற்றுமு் சுப்பர் போல் ஆகிய இரண்டு லொத்தர் சீட்டுக்களை அச்சிடுகின்ற போது சபைக்கு ரூ. 8,140,000 தொகைக்குரிய பொருளாதார ரீதியான நன்மையை பெற முடியாமல் போயிருந்தது.

(ஆ) விலைமனு ஆவணத்தில் ஏலதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளின் பந்தி 06 இன் படி, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை ஏலதாரர்கள் வழங்க வேண்டியிருந்தாலும், இரண்டு ஆண்டுகளுக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டன, மேலும் ஏலதாரர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒத்த விநியோகங்களின் விவரங்களையும், ஏலதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளின் பத்தி 16.னை இன் படி அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் வழங்க வேண்டியிருந்தாலும், அத்தகைய தகவல்கள் வழங்கப்படவில்லை, அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்காமல் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநருக்கு இரண்டு வகையான லக்ன வாசனா மற்றும் கப்ருக லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் ஒப்பந்தம் ஒரு நிலையான தொகையாகிய ரூ. 234,460,000 க்கு வழங்கப்பட்டிருந்தது.

**2.3 பிற கணக்காய்வு அவதானிப்புகள்**

(அ) ஒரு சீட்டிழுப்பு இயந்திரத்தை வாங்கும் வரை, சூப்பர் தன சம்பத சீட்டிழுப்பு செயல்முறை சபையினால் உருவாக்கப்பட்ட ஒரு லொத்தர் மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்பட்டது, மேலும் அந்த மென்பொருளின் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு கணக்காய்விற்கு ஒரு தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு ரூ. 1,160,613 செலுத்தப்பட்டது, மேலும் சீட்டிழுப்பு முடிவுகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்கின்ற போது சீட்டிழுப்பு மேற்கொள்ளப்படும் இயந்தரத்தினூடாக பந்துகள் கலக்கப்பட்டு அதிலிருந்து எழுமாறாக ஒரு பந்தை தெரிவுசெய்யும் விதமாக ஒளிபரப்பு செய்வதற்கான நேரடி வீடியோ மென்பொருளை (புயஅந யுெைஅயவழைெ ளுழகவறயசந) வடிவமைப்பதற்காக ரூ. 3,350,000 ஒரு தனியார் மென்பொருள் வடிவமைப்பு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது, இருப்பினும், மீளாய்வு வருடத்தில் ஒரு சீட்டிழுப்பு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு சூப்பர் தன சம்பத சீட்டிழுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டதால், மேற்கூறிய மென்பொருள் சீட்டிழுப்பு செயல்முறையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. சீட்டிழுப்பு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் செயல்முறை முறையாக திட்டமிடப்பட்டு செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ளப்பட்டு, புதிய லொத்தர் சீட்டை சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னதாக சீட்டிழுப்பு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், சீட்டிழுப்பு மென்பொருள் வடிவமைப்பு மற்றும் அதன் கட்டமைப்பு கணக்காய்விற்காக செய்யப்பட்ட ரூ. 4,510,613 தொகையைச் சேமித்திருக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஜனாதிபதி நிதியத்திற்கு நிதியனுப்புவதற்கும் சபையின் அன்றாட கொடுக்கல் வாங்கல்களுக்கும் இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கிற்கும் நிதி அனுப்புவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் பராமரிக்கப்படும் சேமிப்புக் கணக்கில் சராசரியாக மாதாந்த இருப்பாக ரூ. 565,797,125 பேணப்பட்டு வந்தது. மக்கள் வங்கியினால் சேமிப்புக் கணக்குகளுக்கு ஆண்டுக்கு 2.2 சதவீத வட்டி விகிதத்தை வழங்கிய அதேவேளை அதனூடாக 2024 ஆம் ஆண்டில் ரூ. 17,966,768 வட்டி வருமானம் பெறப்பட்டிருந்தது. சேமிப்புக் கணக்கில் வைத்திருக்கும் இந்தப் பணத்தை அதே வங்கியின் 7 நாள் குறுகிய கால வைப்பில் முதலீடு செய்திருந்தால், அதனூடாக சுமார் ரூ. 36,486,529 வட்டி வருமானத்தைப் பெற்றிருக்க முடியும். மேலும், சுமார் 8 சதவீத வட்டி விகிதத்தை செலுத்தும் மாதாந்த நிலையான வைப்புத்தொகையில் முதலீடு செய்திருந்தால், அதன் மூலமாக சுமார் ரூ. 55,864,543 வட்டி வருமானத்தைப் பெற்றிருக்கும் வாய்ப்பு இருந்தது. அதன்படி, சபையானது செயற்றிறன்மிக்க வகையில் முதலீடு செய்

(இ) 2023 நவம்பர் 09 ஆம் திகதி சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட சூப்பிரி தன சம்பத லொத்தர் சீட்டின் நாளாந்த விற்பனையை 245,000 வரையிலும் ஞாயிறு தினத்தில் 220,000 வரையிலும் அதிகரிக்க 2024 ஆம் ஆண்டில் ரூ. 14,002,480 செலவில் மூன்று விற்பனை ஊக்குவிப்பு திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போதிலும், மீளாய்வு வருடத்தில் நாளாந்த சராசரி விற்பனை 164,419 சீட்டுக்களும் ஞாயிற்றுக்கிழமை சராசரி விற்பனை 133,051 சீட்டுகளும் மட்டுமே. அதன்படி, இந்த விற்பனை ஊக்குவிப்பு உத்திகள் வெற்றியளித்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு வருடத்தில் 08 வகையான லொத்தர் சீட்டுக்களுக்குரியதாக 98 விநியோக முகவர்களுக்கு 811,002,580 லொத்தர் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டிருந்த அதேவேளை அவற்றில் 67,091,560 சீட்டுக்கள், அதாவது சுமார் 8 சதவீதமானவை விற்பனையாகவில்லை என தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு விற்கப்படாத லொத்தர் சீட்டுகளை சபைக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தாலும், மீளாய்வு வருடத்தில் 60,350 லொத்தர் சீட்டுகள் சபைக்கு திருப்பி ஒப்படைக்கப்

(உ) தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களுடன் எதிர்காலத்தில் அனைத்து வணிக நடவடிக்கைகளும் பௌதீக சந்தைகளிலிருந்து விலகி, இணையவழி முறைக்கு மாற்றப்படும் போக்கு காணப்படும் நிலைமையில், சபையானது மீளாய்வு வருடத்தில் விற்பனை செய்த 745,645,051 லொத்தர் சீட்டுகளில் 1,119,059 மின்னணு லொத்தர் சீட்டுகளை மட்டுமே விற்பனை செய்திருந்தது. அது மொத்த விற்பனையில் 0.15 சதவீதத்தை விட மிகக் குறைந்த சதவீதமாகும்.

(ஊ) 2023 நவம்பர் 09 முதல் சந்தைக்கு அறிமுகப்படுத்தியிருந்த சுப்பிரி தன சம்பத லொத்தர் சீட்டு 2024 நவம்பர் 20ஆம் திகதி வரையிலான ஒரு வருடத்திற்கும் அதிகமான காலப்பகுதியில் இணையவழி முறையில் சந்தைக்கு அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2024 நவம்பர் 21 முதல் மீளாய்வு வருட இறுதி வரையில் 82,000 லொத்தர் சீட்டுகள் விற்பனை முகவர்களுக்கு இணையவழியில் விநியோகிக்கப்பட்டிருந்த அதேவேளை, அவற்றில் 18,225 லொத்தர் சீட்டுகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருந்தது, 63,775 லொத்தர் சீட்டுகள் அதாவதுது 78 சதவீத சீட்டுக்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன.

(எ) அபிவிருத்தி லொத்தர் சபையில் இடம்பெறும் லொத்தர் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ செயன்முறை வெளிப்புற சேவை வழங்குநர் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதால், அவ் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் சபையின் ஊழியர்கள் மூலம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதற்கமைய, லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் கட்டமைப்பொன்றினை கொள்வனவு செய்வதற்காக 2019 ஒக்டோபர் 25ஆம் திகதி தேசிய போட்டி விலைமனு முறையைப் பயன்படுத்தி விலைமனுக்களைக் கோரப்பட்டு, விலைமனு மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வு வருட நிறைவில் அதாவது, 05 வருடங்களுக்கு அதிகமாக கழிந்துள்ள நிலைமையிலும் அந்நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாதிருந்த காரணத்தினால் 2020 தொடக்கம் 2024 வரையில் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் கட்டமைப்பு சேவைக்காக ரூ. 92,541,077 வெளிப்புற சேவை வழங்குநர் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டியிருந்தது.

(ஏ) சபையானது வொக்ஷோல் வீதியில் இலக்கம் 234இல் உள்ள கட்டிடத்தை வாடகை அடிப்படையில் 2006 ஒக்டோபர் மாதத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு செய்திருந்த ஒப்பந்தம் ஒருதலைப்பட்சமாக மீறப்பட்டதால், வைப்புத் தொகையாக செலுத்திய ரூ. 723,780 தொகை மற்றும் அந்த வருடங்களுக்கென செலுத்திய வாடகைப் பணத்தில் ஒரு பகுதியாகிய ரூ.4,976,220 ஆகிய தொகைகளின் மொத்தமாகிய ரூ. 5,700,000 ஐ 18 வருடங்களாக அறவிட்டுக் கொள்வதை சபை தவறவிட்டிருந்தது.

(ஐ) 1990 ஆம் ஆண்டு வோர்ட் பிளேஸில் உள்ள ஒரு நபருடன் செய்து கொண்ட வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ. 2,520,000 கட்டிட வாடகை வைப்புத்தொகையை மீட்டெடுப்பதற்காக 23 ஆண்டுகளுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2016 ஜனவரி 11ஆம் திகதி கிடைக்கப்பெற்றது. குறித்த தொகையை அறவிட்டுக்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டு சுமார் 09 ஆண்டுகள் கடந்திருந்தாலும், மீளாய்வு வருட இறுதியிலும் சபையானது அந்தத் தொகையை அறவிட்டுக்கொள்ளத் தவறியிருந்தது.

(ஒ) மீளாய்வு வருடத்தில் செய்யப்பட்ட 07 வரும்படி செலவுகளில் திருத்தப்பட்ட ஒதுக்கீட்டை மீறிய செலவின் மொத்தப்பெறுமதி ரூ. 5,735,563 ஆகும். ஒவ்வொரு வரும்படியையும் கருத்திற் கொள்கின்ற போது வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டு எல்லையை மீறிய செலவு 13 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான இடைவெளியில் இருந்தது.

**பீ.எச்.டி. தர்மபால**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில் கடமை)

# கணக்காய்வு அறிக்கை - 2024 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07இற்கு அமைவாக மறைமுகமான வழியில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமாக காசுப் பாய்ச்சல் கணிப்பீட்டின்போது முதலீட்டு வட்டி வருமான வரியை முன்னைய இலாபத்துடன் மீண்டும் சேர்த்து வருடத்தினுள் உண்மையான பணமாக பெறப்பட்ட வட்டித் தொகையாக முதலீட்டு செயற்பாட்டின் கீழ் கிடைக்கப்பெற்ற தொகையாக காண்பிக்க வேண்டிய போதிலும், 2024ஆம் ஆண்டின் முதலீட்டு வட்டி வருமானமாக முன்னைய வருடத்தின் இலாபத்துடன் மீண்டும் சேர்க்கப்பட்ட ரூ. 177,922,791 பணத்தொகை முழுவதும் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழான முதலீட்டு வட்டித்தொகை பெறுகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்த போதிலும், வருடத்தினுள் உண்மையான பணமாக பெறப்பட்ட முதலீட்டு வட்டித்தொகை ரூ. 284,754,828 ஆகும். அதற்கமைய முதலீட்டு வட்டித் தொகையானது ரூ. 106,832,037ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, பணமாகப் பெறப்பட்ட முதலீட்டு வட்டி வருமானத்தின் மொத்தத் தொகை காசுப் பாய்வுக் கூற்றில் முதலீட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த ரூ. 106,832,037 தொகையானது, 2024 ஆம் ஆண்டில் காசாகப் பெறப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான வட்டி வருமானத்திற்கும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பெறப்பட வேண்டிய வட்டி வருமானத்திற்கும் உள்ள வித்தியாசமாகும். இந்தத் தொகை, காசுப் பாய்வு கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, முதலீட்டு வட்டி வருமானத்தில் காட்டப்பட வேண்டிய ரூ. 106,832,037 காசுப்பாய்வு, முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தாலும், முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்வுக்கு இதனால் பாதிப்பு ஏற்படுவதில்லை.<br><br>இருப்பினும், கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, இந்த ஆண்டு முதல் சம்பந்தப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07இற்கு அமைவாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் வருடத்தில் முதலீட்டுப் பணம் வெளிப்பாய்ச்சல் மற்றும் முதலீட்டுப் பணம் உட்பாய்ச்சல் என்பன வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வு வருடத்தில் முதிர்ச்சியின் பின்னர் மீள் முதலீடு செய்யாமல் நிலையான வைப்புக் கணக்குகள் இரண்டிலிருந்து பெறப்பட்ட ரூ. 377,732,522 தொகை மற்றும் மீளாய்வு வருடத்தில் நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூ. 9,791,292 தொகைகள் காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் என்ற வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருக்காத அதேவேளை, நிலையான வைப்புக்களில் இருந்து பெறப்பட்ட தொகையாக ரூ. 474,773,267 சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய நிலையான வைப்புக்களில் இருந்து பெறப்பட்ட ரூ. 106,832,037 தொகையானது கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த ரூ. 106,832,037 தொகை மேலே விளக்கப்பட்டுள்ளபடி, 2024 ஆம் ஆண்டில் காசாகவும் 2023 ஆம் ஆண்டிற்கான பெறத்தக்க வட்டி வருமானத்திற்கும் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பெறத்தக்க வட்டி வருமானத்திற்கும் இடையிலான வித்தியாசமாகும். கணக்காய்வில் சுட்டிக்காட்டியபடி, முதலீட்டு வட்டி வருமானத்தில் காட்டப்பட வேண்டிய ரூ. 106,832,037 காசுப் பாய்வு, முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தாலும், முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்வுகளில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.<br><br>இருப்பினும், கணக்காய்வில் சுட்டிக்காட்டியபடி, சம்பந்தப்பட்ட மாற்றங்கள் இந்த ஆண்டு முதல் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16இன் 07ஆவது பந்திக்கு அமைவாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஒவ்வொரு வரும்படியிலிருந்து பெறக்கூடிய பொருளாதார நன்மை நிறுவகத்திற்கு கிடைக்குமாயின் மற்றும் அதன் செலவினை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் மாத்திரம் அவற்றை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும் பொருளாதார நன்மைகள் நிறுவகத்திற்கு கிடைக்கும் என்ற நிபந்தனையினை நிறைவேற்ற முடியாத பௌதீக ரீதியாக சபையிடம் இல்லாத ரூ. 8,095,000 பெறுமதியைக் கொண்ட கெப் வண்டி மற்றும் தற்பொழுது பயன்பாட்டிலிருந்து | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.8,095,000/- பெறுமதியுடைய டபள் கெப் வாகனம் சபை வசம் இல்லை என்ற கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகிறது. இந்த கெப் வண்டி தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், இது ஒரு நிலையான சொத்தாகக் கணக்கிடப்பட்டுள்ளது.<br><br>இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ரூ.7,641,119/- பெறுமதியுடைய் 4 சீட்டிழுப்பு இயந்திரங்கள், 1 காற்று அழுத்தி மற்றும் சீட்டிழுப்புக்கு பயன்படுத்தப்படும் பந்துகள் ஆகியவை அடங்கும். இந்தப் பொருட்கள் சீட்டிழுப்புக்காக ஆரம்ப |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| அகற்றப்பட்டுள்ள ரூ. 7,641,159 பெறுமதியைக் கொண்ட 07 சீட்டிழுப்பு இயந்திரங்கள் மீளாய்வு வருடத்தினுள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன. | கட்டத்தில் சபையால் பயன்படுத்தப்பட்ட பொருட்களாக இருப்பதுடன் இவை சபையின் சொத்துக்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பொருட்கள் சீட்டிழுப்புக்காக பயன்படுத்தப்பட்ட சிறப்பு இயந்திரங்கள் என்பதால், இந்த இயந்திரங்களை கழித்தொதுக்குவதில் சிக்கல் உள்ளது. அவற்றின் தனித்தன்மை மற்றும் பயன்பாட்டிற்கு உதவாத நிலை காரணமாக, அவற்றை வெளி தரப்பினருக்கு அப்புறப்படுத்துவது கடினமாக இருக்கின்றது. தற்போது வரை, இந்த இயந்திரங்கள் அப்புறப்படுத்தப்படாததால் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. |
| (ஈ) அபிவிருத்தி லொத்தர் சபையின் உணவறை, களஞ்சிய அறை மற்றும் எல்லைச்சுவர் திருத்தங்களுக்காக 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ரூ. 1,728,884 செலவினை இடம்பெற்றுவரும் வேலைகளாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வு வருட நிறைவின் போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு 07 வருடங்களைத் தாண்டியுள்ள போதிலும் அசியமான கணக்கீட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகளாக தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள உணவு அறை, களஞ்சிய அறை மற்றும் எல்லைச் சுவர் ஆகியவற்றின் புதுப்பித்தல் பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை. ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படுவதற்கு, சம்பந்தப்பட்ட சொத்து நன்மையளிக்கும் அளவிற்கு முடிக்கப்பட வேண்டும். எனவே, மேற்கண்ட கட்டுமானம் டிசம்பர் 31, 2024 க்குள் முடிக்கப்படாததால், கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மூலதனமாக்கப்பட்டு தேய்மானம் செய்யப்படவில்லை. |
| (உ) சிராக்கல் எண்ணக்கருவின் (Matching Concept) அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கணிப்பின் போது வருமானத்திற்கு எதிராக அந்த வருமானத்தை ஈட்டிக்கொள்ள செய்யப்பட்ட செலவுகள் அனைத்தும் வெட்டி அகற்றப்படுதல் வேண்டுமென்ற போதிலும் அந்த எண்ணக்கருவிற்கு எதிரான வகையில் மீளாய்வு வருடத்தினுள் 08 வகையான லொத்தர் சீட்டுக்களின் பரிசுகளுக்கான செலவுகளாக பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய செய்யப்பட்ட செலவாக ரூ. 15,094,967,030 அடையாளம் காணப்பட்டிருந்தது. எனினும் அந்த லொத்தர் சீட்டுகளுக்குரியதான வெற்றிப் பரிசுகளின் செலவு 14,945,564,011 எனும் தொகையாக காணப்பட்டதனால் மீளாய்வு வருடத்தில் பரிசுகளுக்கான செலவுகளாக 149,403,019 எனும் தொகை அதிகமாக கணக்குகளில் வைக்கப்பட்டிருந்து. அதற்கமைய மீளாய்வு வருடத்தின் இலாபம் மேற்குறிப்பிட்ட தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரிவு 18 (3) இன் படி, ஒரு அபிவிருத்தி லொத்தரில் எந்தவொரு பரிசுத் தொகையும் யாரும் வெல்லவில்லை என்றால், அந்தப் பரிசுத் தொகை பரிசு ஒதுக்கக் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் அந்தக் கணக்கில் திரட்டப்பட்ட தொகை அடுத்தடுத்த அபிவிருத்தி லொத்தர்களில் பரிசுகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும். அதன்படி, சட்டத்தின் மேற்படி பிரிவுக்கு இணங்க, 2024 ஆம் ஆண்டில் பரிசுத் ஒதுக்கக் கணக்கில் திரட்டப்பட்ட நிதியிலிருந்து கூடுதல் பரிசுகளை வழங்குவதற்காக ரூ. 64,100,000 மீண்டும் செலவிடப்பட்டுள்ளது. அதன்படி, அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின்படி கூடுதல் பரிசுகளை வழங்க சபை பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தியுள்ளது, மேலும் பரிசுத் ஒதுக்கக் கணக்கில் திரட்டப்பட்ட நிதியின் அளவிற்கு முந்தைய ஆண்டுகளில் வருமான அறிக்கைகளில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதால், அதை நடப்பு ஆண்டில் மீண்டும் ஒரு செலவாகக் காட்ட முடியாது.<br><br>அதன்படி, கணக்கீட்டு சீராக்கல் எண்ணக்கரு வேண்டுமென்றே விடுபட்டிருக்கவில்லை என்பதுடன் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் விதிகளுக்கு இணங்குவதற்காக மேற்படி கணககீட்டு முறை நீண்ட காலமாக ஒரு கணக்கீட்டு நடைமுறையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. |
| (ஊ) 2024 ஜனவரி 01 முதல் பெப்ரவரி 28 வரையிலான காலகட்டத்தில், சனிக்கிழமை அதிஸ்டம், லக்ன வாசனா, ஜயோதா, சூப்பர்போல், அத கோடிபதி, சுபிரி தன சம்பத ஆகிய 06 வகையான லொத்தர் சீட்டுகளுக்கு தெவன வரம (இரண்டாவது அதிஸ்டம்) என்ற பெயரில் வழங்கப்பட்ட சிறப்புப் பரிசுகளுக்காக ஏற்பட்ட மொத்த பரிசுச் செலவுகள் ரூ. 64,100,000 ஆகும், இது அந்த ஆண்டிற்கான பரிசுச் செலவாகக் கணக்கிடப்படாமல் பரிசு இருப்பு நிதியில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, சீராக்கல் எண்ணக்கருவிற்கு முரணாக பரிசுச் செலவை அங்கீகரித்ததன் காரணமாக மீளாய்வு ஆண்டிற்கான லாபம் ரூ. 64,100,000 ஆல் அதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரிவு 18 (3), "எவரும் ஒரு பரிசை வெல்லவில்லை என்றால், பரிசுத் தொகை பரிசு ஒதுக்கக் கணக்கில் வரவு வைக்கப்படும்" என்று கூறுகிறது. சட்டத்தின் இந்தப் பிரிவிற்கு இணங்கியொழுகுவதற்காக முன் அங்கீகரிக்கப்பட்ட பரிசு சதவீதத்தின்படி வருமான அறிக்கையில் பரிசுத் தொகை ஒரு செலவாக இனங்காணப்பட்டு உண்மையான பரிசுச் செலவுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பரிசுச் செலவுக்கும் இடையிலான வேறுபாடு பரிசு ஒதுக்கக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின்படி நாங்கள் செயலாற்றியுள்ளதுடன் இது குறிப்பு 3.3.3 இல் உள்ள கணக்கீட்டு கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| | அதன்படி, கணக்கீட்டு சீராக்கல் எண்ணக்கருவினை வேண்டுமென்றே புறக்கணித்தல் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் விதிகளுக்கு இணங்குவதற்காக மேற்படி கணக்கீட்டு முறை நீண்ட காலமாக ஒரு கணக்கீட்டு நடைமுறையாகப் பின்பற்றப்படுகிறது.<br><br>அதன்படி, கணக்கீட்டு சீராக்கல் எண்ணக்கருவினை வேண்டுமென்றே புறக்கணித்தல் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் விதிகளுக்கு இணங்குவதற்காக மேற்படி கணக்கீட்டு முறை நீண்ட காலமாக ஒரு கணக்கீட்டு நடைமுறையாகப் பின்பற்றப்படுகிறது. |
| (எ) அட்டுரு எண்ணக்கருவின்படி, அட்டுரு செலவுகளை அடையாளம் காணும்போது பின்வரும் தற்போதைய தொடர்பு காணப்பட வேண்டும் என்பதுடன் அந்த் செலவைத் தீர்க்கின்ற போது வளங்கள் வெளிச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளமையும் அதன் மதிப்பு நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடியதாக இருக்க வேண்டுமென்பதுமான காரணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். 2021 ஆம் ஆண்டு முதல் அட்டுரு செலவுகளை அடையாளம் காணும் முறைமையில் நிலவும் பலவீனங்கள் காரணமாக, சில அட்டுரு செலவுகள் அட்டுரு எண்ணக்கருவிற்கு முரணான வகையில் இருப்பது அடையாளம் காணப்பட்டிருந்த அதேவேளை, செலவுகள் அடையாளம் காணப்பட்ட ஆண்டிற்கு அடுத்த ஆண்டில் செலவுகள் ஏற்படாததால், அது வருமானமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் அவை அட்டுரு செலவுகளாக அடையாளம் காணப்பட்டிருந்தாலும், செலவுகள் செய்யப்படாத காரணத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூ. 12,848,010 மீண்டும் இலாபத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு வினவுதலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட அட்டுறு செலவினங்களுக்கான மதிப்பீடுகளில செய்யப்பட்ட மாற்றங்களுக்கு இது ஒரு திருத்தமாகும். எனவே, LKAS-8 நியமம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த கணக்கீட்டு நியமம் (LKAS-8) சுட்டிக்காட்டியுள்ளபடி, முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட அட்டுறு செலவினங்களின் திருத்தங்கள் நடப்பு ஆண்டிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது (வருங்கால அங்கீகாரம்). |
| (ஏ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 10(ஆ)வின் படி, எதிர்கால மதிப்பீட்டு ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செலவுகள் அல்லது இழப்புகளுக்காக இருப்பு அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட தொகையிலிருந்து வரி விதிக்கக்கூடிய வருமானத்தைக் கணக்கிடும் போது அதனைக் குறைப்பதற்கு அனுமதிக்கப்படாது. எனவே, விரிவான வருமான அறிக்கையில் செலவாகப் பற்று வைக்கப்பட்ட அத்தகைய ஏற்பாடுகள் வரி விதிக்கக்கூடிய வருமானத்தைக் கணக்கிடுகின்ற போது இலாபத்தில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும். 2024 டிசம்பர் 31ஆம் திகதியில் பணியாளர் பணிக்கொடை பொறுப்பை மறுமதிப்பீடு செய்தபோது பற்றாக்குறை ஏற்பாடாக விரிவான வருமான அறிக்கையில் பற்று வைக்கப்பட்டிருந்த ரூ. 4,570,469 பணிக்கொடை ஒதுக்கீடு மற்றும் 2003 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் ஒரு கட்டிடத்தைப் பெறுவதற்காக திரும்பப்பெறக்கூடிய அடிப்படையில் செலுத்தப்பட்ட ரூ. 723,780 வைப்புத்தொகை திரும்பப் பெறுவது நிச்சயமற்றதாக இருந்தது, எனவே 2024 ஆம் ஆண்டில் நிச்சயமற்ற பெறுகைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.723,780 வரி விதிக்கக்கூடிய வருமானத்தைக் கணக்கிடும்போது இலாபத்தில் சேர்க்கப்படவில்லை. எனவே மீளாய்வு ஆண்டிற்கான வருமான வரி ரூ. 1,159,274 ஆல் குறைவாகக் கணக்கிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்து. | ஆண்டு வருமான வரியைக் கணக்கிடும் போது, இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 12 இன் படி ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு ஒதுக்கீடு மட்டுமே செய்யப்படுகிறது. இது ஒரு நீண்ட செயல்முறை என்பதால், உள்நாட்டு இறைவரி திணைக்களம் அடுத்த நிதியாண்டின் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை வருடாந்த வருமான வரியைக் கணக்கிட்டு துல்லியமாக செலுத்த கால அவகாசம் அளித்துள்ளது.<br><br>அதன்படி, 2024 ஆம் ஆண்டிற்கான உண்மையான வருமான வரியைக் கணக்கிட்டு, 2025, செப்டம்பர் 30, இற்கு முன் உரியவாறு சம்பந்தப்பட்ட வரி செலுத்துதல்களைச் செய்வோம். |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| (ஐ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16(4) ஆம் பிரிவின் 02 உபஅட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய முழுமையான மூலதன கொடுப்பனவாக பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை அகற்றுகின்ற போது ஏற்படக்கூடிய நட்டங்கள் வரி இலாபங்கள் கணிப்பிடப்படுகின்ற போது வாய்ப்பளிக்கப்படாத செலவுகள் என்ற காரணத்தினால் மீண்டும் கணக்கீட்டு இலாபத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டும். மீளாய்வு வருடத்தில் சபையினால் முழுமையான மூலதனக் கொடுப்பனவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 502,595 அலுவலக உபகரணங்களுக்கான செலவு, ரூ. 289,791 மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்துதல் செலவு மற்றும் ரூ. 12,570 கணினிகள் செலவு என்பன மீளாய்வு வருடத்தில் அகற்றப்பட்டதன் காரணமாக மொத்தமாக ஏற்பட்ட ரூ. 467,974 என்ற நட்டத்தொகை மீளாய்வு வருடத்தின் செலவாக கணக்கீட்டு இலாபத்திலிருந்து குறைக்கப்பட்டிருந்த போதிலும் விதிக்கத்தக்க வரிக் கணிப்பீட்டின் போது அந்த இலாபம் மீண்டும் வருமானத்துடன் சேர்க்கப்பட்டிருக்காத காரணத்தினால் மீளாய்வு வருடத்தின் வருமானம் வரி ரூ. 140,392 ஆல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வருடாந்த வருமான வரி கணக்கீடு, நிதி அறிக்கைகள் தயாரிக்கும் போது துல்லியமாக கணக்கிட இயலாததால் இலங்கை கணக்கீட்டு நியமம் (டுமுயுளு) 12 இன் படி ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு ஒதுக்கீடு மட்டுமே செய்யப்படுகிறது.<br><br>நிதி கூற்றுகளுக்கான கணக்கீட்டு அடிப்படையில் சொத்துக்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் கணக்கியல் இலாபம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், வருமான வரி அடிப்படையில் சம்பந்தப்பட்ட வரி அளவுகோல்களின் அடிப்படையில் சொத்துக்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் இலாபத்தைக் கணக்கிட சிறிது காலம் எடுக்கும் என்பதால், கணக்கியல் நோக்கங்களுக்காக 2024 ஆம் ஆண்டிற்கான நிதி கூற்றுகளை தயாரிக்கும் நேரத்தில் ஆரம்ப வரி கணக்கீடுகளைக் கருத்தில் கொண்டு இந்த வரி ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உண்மையான வருமான வரியைக் கணக்கிடுவதில், அனைத்து சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப காரணிகளையும் கவனத்திற் கொண்டு ஒரு விரிவான வரி கணக்கீடு செய்யப்படுவதுடன் உரிய தேதியில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. |
| (ஒ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மூலதனக் கொடுப்பனவுகள் கணிப்பீடு செய்யப்பட்டு விதிக்கத்தக்க வரி வருமானம் கணிப்பீடு செய்யப்படுகின்ற போது அவை குறைக்கப்பட வேண்டுமென்றுள்ள போதிலும் சபையினால் விதிக்கத்தக்க வரி வருமானக் கணப்பீட்டின் போது மூலதனக் கொடுப்பனவு சரியாக கணிப்பீடு செய்யப்பட்டிருக்காத அதேவேளை மீளாய்வு வருடத்தின் தேய்மானச் செலவாகிய ரூ. 109,667,357 இல் நூற்றுக்கு 60 வீதமாகிய ரூ. 65,800,414 மூலதனக் கொடுப்பனவாக குறைக்கப்பட்டிருந்தது. | வருடாந்த வருமான வரி கணக்கீடு, நிதி அறிக்கைகள் தயாரிக்கும் போது துல்லியமாக கணக்கிட இயலாததால் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 12 இன் படி ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு ஒதுக்கீடு மட்டுமே செய்யப்படுகிறது.<br><br>நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது மூலதன கொடுப்பனவுகளைக் கணக்கிட காலம் இல்லாததால், வருடாந்த தேய்மானத்தின் அடிப்படையில் மூலதன கொடுப்பனவுகள் ஒரு மதிப்பீடாகப் பயன்படுத்தப்படுகின்றன.<br><br>வருடாந்த வருமான வரியை துல்லியமாக கணக்கிட்டு செலுத்த, உள்நாட்டு இறைவரி திணைக்களம் அடுத்த நிதியாண்டின் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது. அதன்படி, 2024 ஆம் ஆண்டிற்கான உண்மையான வருமான வரியைக் கணக்கிட்டு, 2025செப்டம்பர் 30, இற்கு முன் உரிய சம்பந்தப்பட்ட வரி செலுத்துதல்களைச் செய்வோம். |
| (ஓ) அசையாச் சொத்துக்களுக்குரியதான 06 பேரேட்டுக் கணக்குகளில் 2024ஆம் ஆண்டில் தேய்மானச் செலவாக ரூ. 34,116,012 கணக்கு வைக்கப்பட்டிருந்த அதேவேளை, அந்த சொத்துக் கணக்குகளுக்குரியதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் அட்டவணைக்கமைய தேய்மானச் செலவு ரூ. 33,367,046 ஆக காணப்பட்டது. அதன்படி, மீளாய்வு வருடத்தில் ரூ. 748,966 தேய்மானச் செலவாக கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டிற்கான தேய்மானச் செலவு, பெயரேட்டுக் கணக்குகளின்படி சரியானதாகும். சொத்து அட்டவணை 31/12/2024 அன்று உள்ள சொத்துக்களைக் குறிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட சொத்துக்கள் அட்டவணையில் காட்டப்படாததால், அவற்றுடன் தொடர்புடைய தேய்மானமும் அதே ஆவணத்தில் காட்டப்படவில்லை. எனவே, அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் மற்றும் கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் ஆகிய வகைகளின் பெயரேட்டுக் கணக்குகளின்படி தேய்மானத்தையும், சொத்து அட்டவணையின்படி தேய்மானத்தையும் ஒப்பிட முடியாது என்பதை தயவுசெய்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், கணக்காய்வு வினவுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணினி மென்பொருள் பிரிவில் ரூ. 299,797 தேய்மானத்தில் ஏற்பட்ட வித்தியாசத்தை ஏற்றுக்கொள்வதுடன் அந்த வித்தியாசங்கள் 2025 ஆம் ஆண்டில் திருத்தப்படும். |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| (ஔ) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் எசோசியேட்டட் நியுஸ்பேபர்ஸ் லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளபடியாக சபையின் அறிக்கைகளுக்கு அமைய செலுத்த வேண்டிய தொகை முறையே ரூ. 62,960,000 மற்றும் ரூ. 3,875,113 ஆன போதிலும் அவ்விரண்டு நிறுவனங்களும் கணக்காய்விற்கு நேரடியாக உறுதிப்படுத்திய தொகை முறையே ரூ. 77,079,512 மற்றும் ரூ. 6,343,788 என்றிருந்தமையால் அந்நிலுவைகளுக்கிடையில் வேறுபாடு காணப்பட்டது. | இந்த கணக்காய்வு வினவுதல்களில் சுட்டிக்காட்டப்பட்ட மாறுபாட்டை அடையாளம் காண பொருத்தமான விவரங்களை வழங்குமாறு இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் மற்றும் யுனைடெட் நியூஸ்பேப்பர்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனங்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 20.05.2025 அன்று மின்னஞ்சல் மூலம் சபையின் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை சரியானது என்றும், அந்தத் தொகை செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.<br><br>மேலும், யுனைடெட் நியூஸ்பேப்பர்ஸ் கம்பெனி லிமிடெட்டிடமிருந்து விவரங்களைப் பெற்ற பிறகு, நாங்கள் ஒரு கணக்கிணக்க மீதியை சரிபாரத்து, இந்த வேறுபாட்டிற்கான காரணங்களை முன்வைக்க மேலும் நடவடிக்கைகளை எடுப்போம். |

## 2. வேறு சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்பை தவிர்ந்த ஏதேனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான சட்டம் அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் விடுக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகாத வகையில் நடந்து கொண்டுள்ளதாக,**

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்புகள் | இணக்கமின்மை | |
| (அ) 1997இன் 20ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 19ஆவது பிரிவு | லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட வேண்டிய விலை, அதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள், சீட்டு விற்பனை செய்யப்பட வேண்டிய அல்லது விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதம், விற்பனைப் பிரதிநிதிகளை சேவையில் ஈடுபடுத்துதல், அவர்களுக்கு செலுத்த வேண்டிய உழைப்புக் கொடுப்பனவுகள், சீட்டின் வெற்றி இலக்கங்கள் மற்றும் வெற்றியாளர்களை பிரசித்தப்படுத்தல் மற்றும் அவசியமான ஏனைய விடயங்கள் தொடர்பில் விதிகளைத் தயாரிக்க வேண்டுமென்ற போதிலும் 2024 வருட இறுதி வரையிலும் சட்டத்தின் பிரகாரம் விதிகளை ஆக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரிவு 19 இன் படி தயாரிக்கப்பட்ட விதிகள் 2022.09.28 ஆம் திகதியன்று நடைபெற்ற 295வது பணிப்பாளர் சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அப்போது, பணிப்பாளர் சபை இந்த விடயத்தை துறை சார்ந்த நிபுணர் குழுவிடம் ஆற்றுப்படுத்தி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியது. அதன்படி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி கற்கைப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தி பரிந்துரைகளைப் பெற்ற பின்னர், அது மீண்டும் 296வது பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது, நிதி அமைச்சின் சட்ட அலுவல்கள் பிரிவின் ஒரு உறுப்பினரையும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி கற்கைகள் பிரிவின் ஒரு உறுப்பினரையும் உள்ளடக்கிய குழுவொன்றின் ஊடாக அதை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களைப் பெறுமாறு பணிப்பாளர் சபை தெரிவித்தது. இருப்பினும், இந்தக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், நிதி அமைச்சின் சட்டப் பிரிவிலிருந்து சாதகமான பதில் கிடைக்காததால், தயாரிக்கப்பட்ட வரைவு அறிக்கை சட்ட ஆலோசனைக்காக 2024.09.03 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| **சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்புகள்** | **இணக்கமின்மை** | |
| (ஆ)<br>(i) 1997 இன் 20ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 11ஆவது பிரிவு<br><br>(ii) தேசிய வரவுசெலவுத் திணைக்களத்தின் 2024 ஜனவரி 10 ஆம் திகதிய, 01.˙.2024ஆம் இலக்க அரசாங்க செலவுக் கட்டுப்பாடு தொடர்பான தேசிய வரவுசெலவுச் சுற்றறிக்கையின் 12.3 ஆம் பிரிவு<br><br>(iii) பகிரங்க முயற்சியாண்மை திணைக்களத்தின் 2024 பெப்ரவரி 28ஆம் திகதிய, 01/2024ஆம் இலக்க பகிரங்க முயற்சியாளர்களின் செலவு முகாமைத்துவ மற்றும் நிலைபேரான முயற்சியாண்மை பற்றிய சுற்றறிக்கையின் 14.1 ஆம் பிரிவு,<br><br>(இ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவை | 2024 ஜுன் 19 முதல் ஜுலை 24 வரையான காலப்பகுதியினுள் ஜனாதிபதி நிதியத்தினால் நாட்டில் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் தரம் 01 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் கல்வி பயிலும் 100,000 மாணவர்களுக்கு மற்றும் க.பொ.த (உயர் தரம்) பயிலும் தெரிவு செய்யப்பட்ட 6000 மாணவர்களுக்கு வழங்கும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் விழா ஏற்பாடுகளுக்காக சபையினால் மொத்தமாக ரூ. 73,266,631 மீளாய்வு வருடத்தில் செலவு செய்யப்பட்டிருந்தது. | அப்போதைய சனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் சனாதிபதியின் செயலாளரால் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்தப் பணி, பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டது. |
| (ை) 4.3.1 பிரிவு | பெறுகை நடவடிக்கைகளுக்காக சகல தொடர்புடைய செலவுகளும் உள்ளடங்கிய செலவு மதிப்பீடொன்று நிறுவகத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென்ற போதிலும் ரூ. 185 மில்லியன்களைக் கொண்ட மதிப்பீடொன்று இரண்டு லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் பெறுகைக்காக முழுமையான செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் பெறுகை (கொள்வனவு) தொடர்பாக, 2023 வரவுசெலவுத் திட்டத்தில் ரூ. 50 மில்லியனும், 2024 வரவுசெலவுத் திட்டத்தில் ரூ. 160 மில்லியனும் ஒதுக்கப்பட்டன. குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளைக் கருத்தில் கொள்ளும் போது இதுபோன்ற 04 இயந்திரத் தொகுப்புகள் மட்டுமே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதுடன் இந்தப் பொருட்கள் பெருமளவு போட்டி நிலவாத குறைந்த தேவை கொண்ட பொருட்களாகும்.<br><br>மேலும், மூன்று சந்தர்ப்பங்களிலும், இந்த இயந்திரங்கள் ஒரு உள்ளூர் வழங்குனரினாலேயே வழங்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு பந்தியில் கூறப்பட்டுள்ளவாறு பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முனனர் மதிப்பிடப்பட்ட செலவு குறித்த கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்படி உற்பத்தியின் தாய் நிறுவனத்திடமிருந்து மட்டுமே விலைகளைக் கோருதல் பெறுகையின் வெளிப்படைத்தன்மையை மீறுவதற்கு வழிவகுப்பதால் இது செய்யப்படவில்லை.<br><br>அந்த சூழ்நிலையில், மற்ற பொருட்களுடன் ஒப்பிடும்போது மதிப்பீட்டைத் தயாரிப்பது கடினமாக இருந்தது.<br><br>எனவே, பெறப்பட்ட கேட்பு விலை பெறுமதியை கருத்தில் கொண்டு, இது தொடர்பாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்புகள் | இணக்கமின்மை | |
| (ii) 4.2.3 பிரிவின் 31ஆவது துணைப்பகுதி | இரண்டு லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் பெறுகைக்கான செயற்பாடு ஆகக் கூடுதலாக 06 வாரங்களுக்குள் நிறைவு செய்யப்படுதல் வேண்டுமென்ற போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்ட 2023 ஏப்ரல் 27ஆம் திகதியிலிருந்து பெறுகைச் செயற்பாடுகளை நிறைவு செய்து தெரிவு செய்யப்பட்ட வழங்குநருடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது, 2024 பெப்ரவரி 20ஆம் திகதி வரையான 42 வாரங்கள் நிறைவடைந்த பின்னராகும | இந்தக் பெறுகை தொடர்பான விலைகேட்பு ஆவணங்களின் பரிந்துரை 2023.10.11 அன்று செய்யப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவின் தீர்மமானம் 2023.10.17 அன்று பெறப்பட்டது. கேட்பு விலைக்கான அழைப்பு அறிவிப்பு 2023.10.19 அன்று செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டதுடன் மேற்படி கேட்பு விலைகள் 2023.11.24 அன்று திறக்கப்பட்டன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பெறப்பட்ட கேட்பு விலைகளை மதிப்பிட்டு 2024.12.15 தேதியிட்ட தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அதன்படி, கேட்பு விலை திறக்கப்பட்ட நாளிலிருந்து 03 வாரங்களுக்குள், சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவின் முடிவு 2024.01.02 அன்று பெறப்பட்டது, மேலும் மேற்படி பெறுகைக் குழுவின் முடிவு 2024.01.03 அன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>பெறப்பட்ட விலைகள் மேலும் மீளாய்வு செய்யப்பட்டு அவை நடைமுறை சாத்தியமானவையா என்பது தொடர்பாக மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெறுகை மற்றும் மதிப்பீட்டுக் குழு அறிக்கையொன்றை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டுமென பணிப்பாளர் சபை முடிவு செய்தது. அதன்படி, மீளாய்வுகளை மேற்கொண்டு அது தொடர்பான அவதானிப்புகளைக் கருத்தில் கொண்டு கேட்பு விலையை வழங்குவதற்கான பணிப்பாளர் சபையின் தீர்வு 2024.01.18 அன்று கிடைத்ததுடன் 2024.01.19 அன்று சம்பந்தப்பட்ட கேட்பு விலை வழங்கப்பட்டன. அதன்படி, பெறுகைக் குழுவின் முடிவு கேட்பு விலை ஆவணங்கள் பரிந்துரைக்கப்பட்ட நாளிலிருந்து 12 வாரங்களுக்குள் வழங்கப்பட்டதுடன் முதற்கட்ட பணிகள் நிறைவடைந்தன. அதன்படி, கேட்பு விலைகளின் செல்லுபடியாகும் காலத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்திற்கு உட்பட்டதாக பெறுகை மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br><br>இந்த கணக்காய்வு பந்தியுடன் தொடர்புடையதாக பெறுகை 06 வாரங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ள போதிலும் அந்தக் கூற்று சரியானதல்ல. பெறுகை வழிகாட்டியின் 4.2.3 இன் 31 ஆம் மேலதிக குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில் ஏலதாரர்களால் கேட்பு விலைகள் சமர்ப்பிப்பதற்கான ஆகக்கூடிய காலம் 06 வாரங்களாக இருக்க வேண்டும் என்றே தவிர முழு பெறுகையும் 06 வாரங்களுக்குள் முடிக்க வேண்டும் என்றல்ல. பெறுகைகள்தொடர்பாக ஒவ்வொரு பெறுகை கட்டத்தையும் நிறைவு செய்வதற்கு செலவிட வேண்டிய அதிகபட்ச காலம் பெறுகை வழிகாட்டுதல்கள் 4.2.3 (பக்கம் 88) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதற்கமைவாக, பெறுகை வழிகாட்டுதல்கள் 4.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்புகளுக்குள் இந்த பெறுகை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| (iii) 2.12 பிரிவு | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களில் இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பிலான வணிக ரீதியான இரகசியங்கள் தொடர்பில் மதிப்பதாகவும் தமது பக்கச்சார்பின்மை, உண்மைத்தன்மை, தனிப்பட்ட தொடர்புகளைப் பேணாமை | முக்கிய பெறுகை தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களால் இந்த இரகசிய ஆவணம் கையொப்பமிடப்பட்டாலும் இந்த பெறுகை தொடர்பாக இந்த ஆவணம் தவிர்க்கப்பட்டது. தற்போது மேற்கொள்ளப்படும் பெறுகை நடவடிக்கைகளில் மேற்படி கூற்றில் கையொப்பமிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்புகள் | இணக்கமின்மை | |
| | ஆகியவை தொடர்பில் உறுதியளித்து பெறப்பட வேண்டிய உறுதிமொழிக் கூற்றுக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடமிருந்து பெறப்பட்டிருக்க வில்லை. | |
| (ஈ) முகாமைதத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16ஆம் திகதிய செயற்பாட்டுப் பணிகள் கோவையின் 3.2(v) பந்தி | முகாமைதத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒழுங்குவிதிக்கமைய ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதாக பணிப்பாளர் சபை உறுதியளித்த போதிலும் முகாமைதத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கான ஒழுங்குவிதி எதுவுமின்றி மீளாய்வு வருடத்தில் ரூ. 121,772,415 ஊக்குவிப்புக் கொடுப்பனவாக பணியாட்டொகுதியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சபையின் ஊக்கத்தொகை கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ஒரு முறையான வழிமுறை தயாரிக்கப்படவில்லை என்பதுடன் 2024 ஆம் ஆண்டில், இதற்கான ஒரு வழிமுறை தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையிடம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில், நிதி அமைச்சிடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தேவையான தகவல்கள் இப்போது நிதி அமைச்சின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |
| (உ) 2015 மே 25ஆம் திகதிய, PED 01/2015 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் | | |
| (i) 2 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறுவதற்கான தகைமையற்ற MM 1-1 தரத்தின் உதவிப் பொது முகாமையாளர் பதவிகளை வகித்த ஆறு அலுவலர்களுக்காக 2024 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து நவம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உதவி பொது முகாமையாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பாக 2023.07.24 அன்று அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது, மேலும் அந்தக் கடிதத்திற்கான பதில் கடிதம் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் 15.08.2023 அன்று அனுப்பப்பட்டதுடன் இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி உதவி பொது முகாமையார்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தயாரிக்கப்பட்ட வழிமுறை 20.05.2024 அன்று நடைபெற்ற 294வது பணிப்பாளர் சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, பணிப்பாளர் சபை அதை அங்கீகரித்தது. அதன் பிறகு, அப்போது பணியாற்றிய அனைத்து உதவி பொது முகாமையாளர்களுக்கும் 2024 நவம்பர் 30 வரை இணைக்கப்பட்ட வாகன வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ii) 3.1 ஆம் பந்தி | எரிபொருள் கொடுப்பனவைப் பெறுவதற்கான தகைமையற்ற எனினும் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த MM 1-1 தரத்தின் உதவிப் | அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட 2023.08.15 தேதியிட்ட கடிதத்தில் உள்ள அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட வழிமுறை 2024.05.20 அன்று நடைபெற்ற 294வது பணிப்பாளர் சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் இணைக்கப்பட்ட வாகன வசதி அச்சந்தர்ப்பத்தில் பணியாற்றிய அனைத்து உதவி பொது |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்புகள் | இணக்கமின்மை | |
| | பொது முகாமையாளர் பதவிகளை வகித்த எட்டு அலுவலர்களுக்காக 2024 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து நவம்பர் 30ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு எரிபொருள் செலவினை ஈடு செய்வதற்காக ரூ. 3,274,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. | முகாமையாளர்களுக்கும் 2024, நவம்பர் 30 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக எரிபொருள் செலவாக ரூ. 3,274,000 செலவிடப்பட்டுள்ளது |
| (ஊ) 2016 மே 30ஆம் திகதிய, 04/2016 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறுவதற்கான தகைமையற்ற MM 1-1 தரத்தில் பதவி வகிக்கும் அலுவலர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதென்ற போதிலும் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் MM 1-1 தரத்தில் உதவிப் பொது முகாமையாளராக (விற்பனை) பதவி வகித்த பெண்அலுவர் ஒருவருக்கு செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட மோட்டார் வாகனமொன்று 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 31 வரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்படி மோட்டார் வாகனத்திற்கென அக்காலப்பகுதியில் செயற்பாட்டுக்குத்தகை வாடகையாக ரூ. 1,564,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சபையில் வாகனப் பற்றாக்குறை காரணமாக, 03 கார்கள் குத்தகை முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அந்த் 02 மோட்டார் வண்டிகள் (கார்கள்) பொது முகாமையாளர் மற்றும் ஒரு துணை பொது முகாமையாளருக்கு ஒதுக்கப்பட்டன. மற்றைய மோட்டார் வண்டி தற்காலிகமாக ஒரு உதவி பொது முகாமையாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதனடிப்படையில் 2024 ஆகஸ்ட் 01 முதல் துணை பொது முகாமையாருக்கு (நிதி) ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், குத்தகை முறையின் கீழ் பெறப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் டிசம்பர் 09, 2024 அன்று சம்பந்தப்பட்ட வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. எனவே, சபையின் வாகன ஒதுக்கத்தில் போதுமான மோட்டார் வாகனங்கள் இல்லாததால், குத்தகை முறையின் கீழ் பெறப்பட்ட மோட்டார் வாகனத்திற்கு ரூ. 1,564,000 செலுத்தப்பட்டு உதவி பொது முகாமையாளருக்கு (விற்பனை) ஒதுக்கப்பட்டுள்ளது. |
| (எ) 2022 ஜனவரி 14ஆம் திகதிய, PED 01/2015 (ii) ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் | சபையின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி), பிரதிப் பொது முகாமையாளர்(விற்பனை) பதவிகளைக் கொண்ட அலுவலர்களுக்கு சுற்றுநிருபத்தின் படி அனுமதிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் அளவினை விஞ்சி 2024 ஜனவரி முதல் ஒக்டோபர் | PED 1/2015 (ii) சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, தலைவர், பொது முகாமையாளர் மற்றும் துணை பொது முகாமையாளர் (நிதி), துணை பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களின் எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும், அதன்படி 2024 ஆம் ஆண்டில் அதிகமாக செலுத்தப்பட்ட ரூ. 125,483 தொகை கணக்கிடப்பட்டு, ஒவ்வொரு உத்தியோகத்தரின் சார்பாகவும் செலுத்தப்பட்ட அதிகப்படியான தொகையை மீட்டு, அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| **சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்புகள்** | **இணக்கமின்மை** | |
| | வரையான காலப்பகுதிக்கு ரூ. 125,483 கூடுதலாக எரிபொருள் செலவாக ஈடு செய்யப்பட்டிருந்தது. | |
| (ஏ) அரச முயற்சியாண்மை திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க அரச முயற்சியாண்மை செயற்பாட்டுக் கையேட்டின் 3.5 ஆவது பந்தி | ஆமைச்சரவை அனுமதியின்றி அரசாங்க தொழில்முயற்சிகளின் பணியாளர்களை அமைச்சிற்கு அல்லது வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கக் கூடாதெனினும் அமைச்சரவையின் அனுமதியின்றி அபிவிருத்தி லொத்தர் சபையின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் இருவருக்கு நிதி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதியில் கடமையாற்ற விடுவிப்பதற்கு பணிப்பார் சபை அனுமதி அளித்திருந்தது. | 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரிவு 15, இலக்கம். 01 இன் கீழ் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் கீழ் சபையின் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இரண்டு ஊழியர்கள் நிதி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் அமைச்சரின் தனிப்பட்ட பணியாளர்களுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டனர். இருப்பினும், இந்த ஊழியர்களின் சம்பளம் அபிவிருத்தி லொத்தர் சபையினால் வழங்கப்பட்டாலும், செலுத்தப்பட்ட சம்பளம் நிதி அமைச்சினால் முழுமையாக மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, சபைக்கு எந்த நிதி இழப்பும் ஏற்படவில்லை. |
| **2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்புகளை தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும், பயனுறுதிமிக்க வகையிலும், வினைத்திறன்மிக்க வகையிலும் சம்பந்தப்பட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக பெறுகைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படாமை.** | | |
| (அ) 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி தொடக்கம் 2025 ஜுலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சபையால் 07 வகையான லொதத்தர் சீட்டுக்களின் உருவாக்கம், மேம்பாடு, அச்சிடல் மற்றும் வழங்கல் ஆகிய விடயங்களுக்கான பெறுகையின் போது ஜயோதா மற்றும் சுப்பர் போல் ஆகிய சீட்டுக்களுக்கு ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்திருந்த விலைமனு, விலைமனுப் பட்டியலில் 2.C பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுதாரர்களால் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளை நிறைவேற்றாதிருந்ததாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்து அடிப்படை விலைமனு மதிப்பீட்டின் போது அதனை அகற்றியிருந்தது. மேற்படி இரண்டு வகையான லொத்தர் சீட்டுக்கள் உட்பட மூன்று வகையான லொத்தர் சீட்டுக்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் விலைமனுப் பட்டியலில் 2.C பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுதாரர்களால் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளை நிறைவேற்றியிருக்கவில்லை. அதற்கமைய விலைமனுதாரர்களால் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை எனத் தெரிவித்து ஆகக் குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்த விலைமனுதாரரை அடிப்படை விலைமனு மதிப்பீட்டின் போது நிராகரித்துவிட்டு அதே தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாதிருந்த விலைமனுதாரருக்கு ஒப்பந்தத்தை ஒப்படைந்திருந்த காரணத்தால் ஜயோதா மற்றும் சுப்பர் போல் ஆகிய இரண்டு லொத்தர் சீட்டுக்களை அச்சிடுகின்ற போது சபைக்கு ரூ. 8,140,000 தொகைக்குரிய பொருளாதார ரீதியான நன்மையை பெற முடியாமல் போயிருந்தது. | | பிரிண்ட்கேர் செக்யூர் லிமிடெட் நிறுவனத்தின் கேட்பு விலைகள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள் லொத்தர் அச்சிடும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் நிரந்தர உத்தியோகத்தர்கள் என உறுதிப்படுத்தப்படாமையும், பிரிண்ட்கேர் செக்யூர் லிமிடெட் பரிந்துரைத்த உத்தியோகத்தர்கள் லொத்தர் வழங்கல் தொடர்பான தகவல் தொழில்நுட்ப கடமைகளில் ஈடுபடாத பிற குழுக்கள் என்பதாலும், பிரிண்ட்கேர் செக்யூர் லிமிடெட்டின் லொத்தர் அச்சிடுதல் தொடர்பான தகவல் தொழில்நுட்ப கடமைகள் மூன்றாம் தரப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்றன என்பதும் உறுதிப்படுத்தப்படாததன் அடிப்படையில் மட்டுமே எனும் விடயம் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.<br><br>லொத்தர் அச்சிடும் செயல்பாடு தொடர்பான அனைத்து தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகளிலும் நீண்டகால அனுபவமும் அறிவும் அவசியம் என்பதையும், எந்தவொரு கேட்பு விலை முன்வைத்தவரின் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களிலும் அத்தகைய அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இருப்பது எந்தவொரு தடையும் ஆபத்தும் இல்லாமல் சபையின் விநியோக செயல்முறையின் சீரான ஓட்டத்திற்கு அவசியமான காரணியாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எனவே, கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டபடி, அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யாத கேட்பு விலைதாரியின் விலைகளின் அடிப்படையில் சபை எந்த இழப்பையும் சந்திக்கவில்லை. மதிப்பீட்டுச் செயல்பாட்டின் போது அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யாத கேட்பு விலைகள் நிராகரிக்கப்பட்ட பின்னர் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட செல்லுபடியாகும் விலைகளை |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| | ஒப்பீட்டு நோக்கங்களுக்காக மீண்டும் பயன்படுத்துவது நடைமுறைக்கு மாறானது, மேலும் மதிப்பீட்டிலிருந்து விலக்கப்பட்ட கேட்பு விலையின் பெறுமதி கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. எனவே, இந்தப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சபை எந்த பொருளாதார நன்மையையும் இழக்கவில்லை. |
| (ஆ) விலைமனு ஆவணத்தில் ஏலதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளின் பந்தி 06 இன் படி, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை ஏலதாரர்கள் வழங்க வேண்டியிருந்தாலும், இரண்டு ஆண்டுகளுக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டன, மேலும் ஏலதாரர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒத்த விநியோகங்களின் விவரங்களையும், ஏலதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளின் பத்தி 16.iii இன் படி அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் வழங்க வேண்டியிருந்தாலும், அத்தகைய தகவல்கள் வழங்கப்படவில்லை, அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்காமல் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநருக்கு இரண்டு வகையான லக்ன வாசனா மற்றும் கப்ருக லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் ஒப்பந்தம் ஒரு நிலையான தொகையாகிய ரூ. 234,460,000 க்கு வழங்கப்பட்டிருந்தது | கேட்பு விலை மதிப்பீட்டைப் பொறுத்தவரை, Toppan Forms (Colombo) Ltd தகுதி அளவுகோல்களில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய மற்றும் அடிப்படை கட்டாய கேட்பு விலை நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் பந்தி 8.1 இன் படி, அச்சிடல் நிறுவனம் நிறுவனத்தில் உள்ள அச்சிடும் இயந்திரங்கள் தொடர்பாகவும் மாறி தரவு அச்சிடலில் தொடர்பாகவும் அனுபவம் வாய்ந்தவை என்பதை மதிப்பீட்டுக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.<br><br>கேட்பு விலை நிபந்தனைகளின்படி, இந்த நிறுவனம் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிதி அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதுடன் 2023 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்படாத நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது கணக்காய்வின் போது தெரியவந்தது. மேலும், பந்தி 16 கேட்பு விலை முன்வைப்பவர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய எழுத்துப்பூர்வ தகவலின் வரிசைமுறையை குறிப்பிடுவதாக அமைவதுடன் 16(III) கடந்த 3 ஆண்டுகளாக மாறி தரவு அச்சிடலில் அனுபவத்தை உறுதிப்படுத்த சமர்ப்பிக்க வேண்டிய தகவலைக் குறிப்பிடுகிறது.<br><br>அதன்படி, கேட்பு விலைதாரர் போதுமான தகவல்களைச் சமர்ப்பித்துள்ளதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை தொடர்பாக நிறுவனத்தின் மாறி தரவு அச்சிடும் திறன் மற்றும் ஆற்றல் பௌதீக் ரீதியாகக் கவனிக்கப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>மேலும், இந்த கேட்பு விலைதாரர் இந்த பெறுகை தொடர்பில் லக்கின அதிர்ஷ்டம் மற்றும் கப்ருக லொத்தர் சீட்டுகளுக்கு மிகக் குறைந்த விலையை சமர்ப்பித்த வெற்றிகரமான விலைதாரர் என்பதால், இந்த விலைதாரர் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. |

## 2.3 பிற கணக்காய்வு அவதானிப்புகள்

| | |
|---|---|
| (அ) ஒரு சீட்டிழுப்பு இயந்திரத்தை வாங்கும் வரை, சூப்பர் தன சம்பத சீட்டிழுப்பு செயல்முறை சபையினால் உருவாக்கப்பட்ட ஒரு லொத்தர் மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்பட்டது, மேலும் அந்த மென்பொருளின் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு கணக்காய்விற்கு ஒரு தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு ரூ. 1,160,613 செலுத்தப்பட்டது, மேலும் சீட்டிழுப்பு முடிவுகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்கின்ற போது சீட்டிழுப்பு மேற்கொள்ளப்படும் இயந்தரத்தினூடாக பந்துகள் கலக்கப்பட்டு அதிலிருந்து எழுமாறாக ஒரு பந்தை தெரிவுசெய்யும் விதமாக ஒளிபரப்பு செய்வதற்கான நேரடி வீடியோ மென்பொருளை (Game Animation Software) வடிவமைப்பதற்காக ரூ. 3,350,000 ஒரு தனியார் மென்பொருள் வடிவமைப்பு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது, இருப்பினும், மீளாய்வு வருடத்தில் ஒரு சீட்டிழுப்பு இயந்திரம் | ஆரம்பத்தில் கேம் அனிமேஷன் மென்பொருளைப் பயன்படுத்தி சுப்பிரி தன சம்பத லொத்தர் சீட்டிழுப்பை நடத்த முடிவு செய்யப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட மென்பொருள் அமைப்புகள் தயாரிக்கப்பட்டன. லொத்தர் சீட்டிழுப்புகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தும் போது, அவற்றுக்கான Backup இயந்திரங்கள் இருக்க வேண்டும் என்பதுடன் சுப்பிர தன சம்பத சீட்டிழுப்புக்கு புதிய இயந்திரங்கள் வாங்கப்பட்டாலும், அதற்கும் டீயஉமரி இயந்திரம் இருக்க வேண்டும். எனவே, சுப்பிர தன சம்பத சீட்டிழுப்புக்கான இயந்திரங்கள் வாங்கப்படும் வரை கேம் அனிமேஷன் மென்பொருள் தயாரிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட இயந்திரங்களைப் பெற்ற பின்னர் புதிய இயந்திரத் தொகுப்பிற்கான காப்பு பிரதியாக கேம் அனிமேஷன் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த மென்பொருள் அமைப்பு 2023.11.09 முதல் 2024.04.30 வரை சுப்பிர தன சம்பத சீட்டிழுப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, மேலும் அந்தக் காலகட்டத்தில் இந்த லொத்தர் சீட்டின் மொத்த |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| கொள்வனவு செய்யப்பட்டு சூப்பர் தன சம்பத சீட்டிழுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டதால், மேற்கூறிய மென்பொருள் சீட்டிழுப்பு செயல்முறையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. சீட்டிழுப்பு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் செயல்முறை முறையாக திட்டமிடப்பட்டு செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ளப்பட்டு, புதிய லொத்தர் சீட்டை சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னதாக சீட்டிழுப்பு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், சீட்டிழுப்பு மென்பொருள் வடிவமைப்பு மற்றும் அதன் கட்டமைப்பு கணக்காய்விற்காக செய்யப்பட்ட ரூ. 4,510,613 தொகையைச் சேமித்திருக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது. | வருமானம் ரூ. 1,391,206,000.00 ஆகும். அனைத்து லொத்தர் சீட்டுகளினதும் சீட்டிழுப்பு தினமும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதி செய்வது சபையின் கடமை என்பதால், அதன்படி செயல்பட வேண்டியது அவசியமாகும்.<br><br>எனவே, இந்த கணக்காய்வினால் கணக்காய்வு பத்தியில் கூறப்பட்டுள்ளபடி கேம் அனிமேஷன் மென்பொருளானது புதிய லொத்தர் இயந்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து செயல்முறையிலிருந்து அகற்றப்படவில்லை என்பதுடன் அதனை Backup வசதியாக வைத்துக்கொண்டு சீட்டிழுப்பின் இடையறாத தன்மையை உறுதிப்படுத்தி தினசரி சீட்டிழுப்பு நடாத்தப்படுகின்றது.<br><br>கணக்காய்வின் இந்தப் பத்தியில் கூறப்பட்டுள்ளவாறு சபை ரூ. 4,510,613.00 தொகையை இழக்கவில்லை. இந்தத் தொகை சுப்பர் தன சம்பத லொத்தர் சீட்டின் விற்பனை செயல்முறையை தொடர்ந்து நடத்துவதற்கு சபையால் செய்யப்பட்ட முதலீடாகும். புதிய சீட்டிழுப்பு இயந்திரத்திற்கான Backup இயந்திரத்தை வாங்குவதற்கு செலவிடக்கூடிய பெரிய அளவிலான பணத்தை சேமிப்பதற்கு இது சபைக்கு வாய்ப்பளித்துள்ளது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>மேலும், புதிய சீட்டிழுப்பு இயந்திரம் வாங்கப்படும் வரை கேம் அனிமேஷன் மென்பொருளைப் பயன்படுத்தி சீட்டிழுப்பு நடத்தப்படாவிட்டால், சபைக்கு ரூ. 1,391,206,000.00 புரள்வினை இழக்க நேரிட்டிருக்கலாம்.<br><br>மேலும், நவம்பர் 2023 முதல் ஏப்ரல் 2024 வரை ஒரு மென்பொருள் அமைப்பு மூலம் சுப்பர் தன சம்பத சீட்டிழுப்பு நடாத்தப்பட்டமை மூலம் சபை ரூ. 4,316,831.00 நிகர இலாபத்தைப் பெற்றுள்ளது. |
| (ஆ) ஜனாதிபதி நிதியத்திற்கு நிதியனுப்புவதற்கும் சபையின் அன்றாட கொடுக்கல் வாங்கல்களுக்கும் இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கிற்கும் நிதி அனுப்புவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் பராமரிக்கப்படும் சேமிப்புக் கணக்கில் சராசரியாக மாதாந்த இருப்பாக ரூ. 565,797,125 பேணப்பட்டு வந்தது. மக்கள் வங்கியினால் சேமிப்புக் கணக்குகளுக்கு ஆண்டுக்கு 2.2 சதவீத வட்டி விகிதத்தை வழங்கிய அதேவேளை அதனூடாக 2024 ஆம் ஆண்டில் ரூ. 17,966,768 வட்டி வருமானம் பெறப்பட்டிருந்தது. சேமிப்புக் கணக்கில் வைத்திருக்கும் இந்தப் பணத்தை அதே வங்கியின் 7 நாள் குறுகிய கால வைப்பில் முதலீடு செய்திருந்தால், அதனூடாக சுமார் ரூ. 36,486,529 வட்டி வருமானத்தைப் பெற்றிருக்க முடியும். மேலும், சுமார் 8 சதவீத வட்டி விகிதத்தை செலுத்தும் மாதாந்த நிலையான வைப்புத்தொகையில் முதலீடு செய்திருந்தால், அதன் மூலமாக சுமார் ரூ. 55,864,543 வட்டி வருமானத்தைப் பெற்றிருக்கும் வாய்ப்பு இருந்தது. அதன்படி, சபையானது செயற்றிறன்மிக்க வகையில் முதலீடு செய்து அதிக வட்டி வருமானத்தைப் பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சபையின் பிரதான காசு திரட்டுதல் கணக்குகள் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியில் பராமரிக்கப்படுவதுடன் பெரும்பாலான விநியோக விற்பனை முகவர்கள் மக்கள் வங்கி ஊடாக பணத்தை வைப்பீடு செய்வதால், எங்கள் மக்கள் வங்கிக் கணக்கில் தினமும் அதிக அளவு பணம் குவிகிறது.<br>இந்த வழியில் சேகரிக்கப்பட்ட பணத்தை எங்கள் நடைமுறைக் கணக்குகளில் வைத்திருப்பதற்குப் பதிலாக மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைக்க நிலையான உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>இதன் மூலம், 2024 ஆம் ஆண்டில் ரூ. 17,966,769 வட்டி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.<br><br>கணக்காய்வு வினவுதலில் கூறப்பட்டபடி, 2024 ஆம் ஆண்டில் இந்தக் கணக்கில் ஒரு குறிப்பிடத்தக்க தொகை இருப்பாகப் பராமரிக்கப்பட்டுள்ளதுடன் சபையின் குறுகிய கால பணப்புழக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், திடீரென்று ஏற்படக்கூடிய சுப்பர் ஜாக்பாட் பரிசுகள் மற்றும் பிற பரிசுப் பணங்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் இந்தக் கணக்கில் ஒரு காசு மீதி பராமரிக்கப்படுகிறது.<br><br>வெற்றியாளர்கள் 06 மாதங்களுக்குள் தங்கள் லொத்தர் வெற்றிகளைப் பெற முன்வர வேண்டும் என்பதுடன் லொத்தர் பரிசுகளின் பெறுமதி மாதாந்திர சராசரியாக 700 மில்லியன் ரூபாய் தொகையாக இருப்பதுடன் சீட்டிழுப்புக்கு |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
| --- | --- |
| | உட்படுத்தப்படுகின்ற லொத்தர் சீட்டுகளின் சுப்பர் ஜாக்பாட் பரிசுகளின் மொத்த பெறுமதி சுமார் 800 மில்லியன் ரூபாய் ஆகும்.<br><br>மேலும், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்திலும் சனாதிபதி நிதியத்திற்கு ரூ. 200 மில்லியன் முன்பணமாக செலுத்திய பிறகு, செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையை சனாதிபதி நிதியம் அவ்வப்போ அதன் நிதித் தேவைகளுக்காக கோரும் போது செலுத்துவதற்காக நாம் காசு மீதியை வைத்திருக்க வேண்டும்.<br><br>மேற்படி தேவைகள் காரணமாக, கணக்காய்வு வினவுதலில் கூறப்பட்டுள்ளபடி, நிதி நடவடிக்கைகளின் நெகிழ்வுத்தன்மைக்காக மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கில் சபை மாதாந்த சராசரி காசு மீதியை பேணி வருகின்றது.<br><br>மேலும், கணக்காய்வு வினவுதலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 7 நாள் அழைப்பு வைப்புத்தொகையில் பணம் வைப்பிலிடப்பட்டால், RTGS மூலம் இலங்கை வங்கியில் பராமரிக்கப்படும் பிற கணக்குகளுக்கு பணத்தை வரவு வைக்க இயலாத நிலையும் ஏற்படும்.<br><br>விநியோக முகவர்கள் தங்கள் வசதியைக் கருத்தில் கொண்டு, தினசரி பணத்தில் பெரும் பகுதியை மக்கள் வங்கியில் வைப்பீடு செய்வது பொதுவான நடைமுறையாகும்.<br><br>2024.12.31 ஆம் திகதிய நிலவரப்படி, சபையிடம் ரூ. 1,265 மில்லியன் நிலையான வைப்புத்தொகை இருந்ததுடன் சபை ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை சபையின் நிதி நிலை குறித்த நிதி பகுப்பாய்வை நடத்தி, அதிகப்படியான பணத்தை நிலையான வைப்புத்தொகைகளில் முதலீடு செய்கிறது.<br><br>இருப்பினும், கணக்காய்வு வினவுதலில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி மீதி மேலே குறிப்பிடப்பட்ட சபையின் குறுகிய கால பணப்புழக்கத் தேவைகளுக்காக பேணிவரப்பட்டதென்பதையும் நிதி நடவடிக்கைகளில் பராமரிக்கப்பட வேண்டிய நெகிழ்வுத்தன்மையைக் கருத்தில் கொண்டு, அந்த மீதியை நீண்ட கால முதலீடுகளில் முதலீடு செய்வது சாத்தியமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>மேலும், கணக்காய்வு வினவுதலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 7 நாள் குறுகிய கால வைப்புத்தொகையில் (7 நாள் அழைப்பு வைப்புத்தொகை) பணம் வைப்பிடப்பட்டால், இலங்கை வங்கியில் பராமரிக்கப்படும் பிற கணக்குகளுக்கு RTGS மூலம் பணத்தை வரவு வைப்பதும் சாத்தியமற்றது. இது சபையின் அன்றாட நடவடிக்கைகளில் சிக்கலை ஏற்படுத்தக்கூடும் என்று அறியத்தருகின்றேன். |
| (இ) 2023 நவம்பர் 09 ஆம் திகதி சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட சூப்பிரி தன சம்பத லொத்தர் சீட்டின் நாளாந்த விற்பனையை 245,000 வரையிலும் ஞாயிறு தினத்தில் 220,000 வரையிலும் அதிகரிக்க 2024 ஆம் ஆண்டில் ரூ. 14,002,480 செலவில் மூன்று விற்பனை ஊக்குவிப்பு திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போதிலும், மீளாய்வு வருடத்தில் நாளாந்த சராசரி விற்பனை 164,419 சீட்டுக்களும் ஞாயிற்றுக்கிழமை சராசரி விற்பனை 133,051 சீட்டுகளும் மட்டுமே. அதன்படி, இந்த விற்பனை ஊக்குவிப்பு உத்திகள் வெற்றியளித்திருக்கவில்லை. | கடுமையான போட்டி காரணமாக, சந்தையில் இந்தப் புதிய லொத்தரை இடம்பெறச் செய்வதற்காக பல்வேறு விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இருப்பினும், அந்த விளம்பர நடவடிக்கைகள் இப்போது நிறுத்தப்பட்டுள்ளன, மேலும் பரிசு சதவீதத்தைக் குறைப்பதன் மூலம் இலாபத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஏப்ரல் 2025 நிலவரப்படி விற்பனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் இது ஒரு வார நாளில் 177,077 ஆகவும், ஞாயிற்றுக்கிழமைகளில் 146,171 ஆகவும் காணப்படுகின்றது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| (ஈ) மீளாய்வு வருடத்தில் 08 வகையான லொத்தர் சீட்டுக்களுக்குரியதாக 98 விநியோக முகவர்களுக்கு 811,002,580 லொத்தர் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டிருந்த அதேவேளை அவற்றில் 67,091,560 சீட்டுக்கள், அதாவது சுமார் 8 சதவீதமானவை விற்பனையாகவில்லை என தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு விற்கப்படாத லொத்தர் சீட்டுகளை சபைக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தாலும், மீளாய்வு வருடத்தில் 60,350 லொத்தர் சீட்டுகள் சபைக்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மாவட்ட விநியோக விற்பனை முகவர்களுக்கு சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள லொத்தர் சீட்டுகளை 14 நாட்களுக்குள் சபையிடம் ஒப்படைக்க வேண்டும். இது செய்யப்படாவிட்டால், விநியோக விற்பனை முகவர்கள் லொத்தர் சீட்டுகளை விற்றதாகக் கருதி, விற்பனை பெறுமதி மற்றும் சீட்டிழுப்பு தொடர்பான அவரது கமிஷன் தொகையை அபராதமாக கருதி வசூலிப்பதற்கு நடவடிக்கை மேறகொள்ளப்படும்.<br><br>சுற்றறிக்கைகளின்படி இந்தப் புத்தகங்களுக்காகவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்பதுடன் வெள்ளம், சூறாவளி மற்றும் இயற்கை பேரழிவுகள் போன்ற நியாயமான காரணங்களுக்காக செய்யப்பட்ட கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, உயர் நிர்வாகத்தின் ஒப்புதலுடன் பல சந்தர்ப்பங்களில் அபராதங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன |
| (உ) தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களுடன் எதிர்காலத்தில் அனைத்து வணிக நடவடிக்கைகளும் பௌதீக சந்தைகளிலிருந்து விலகி, இணையவழி முறைக்கு மாற்றப்படும் போக்கு காணப்படும் நிலைமையில், சபையானது மீளாய்வு வருடத்தில் விற்பனை செய்த 745,645,051 லொத்தர் சீட்டுகளில் 1,119,059 மின்னணு லொத்தர் சீட்டுகளை மட்டுமே விற்பனை செய்திருந்தது. அது மொத்த விற்பனையில் 0.15 சதவீதத்தை விட மிகக் குறைந்த சதவீதமாகும். | இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டபோது மத்திய வங்கி விதித்த நடைமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டதுடன் அதன் காரணமாக அதை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதுடன் பயன்படுத்துவது கடினமாக இருந்தது. எனவே, 2024 ஆம் ஆண்டில் மின்னணு லொத்தர் சீட்டுகளின் விற்பனை 1,118,871 ஆக இருந்தது.<br><br>இருப்பினும், 2024 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவு திட்டத்தின் மூலம் நாங்கள் எதிர்பார்த்த மின்னணு லொத்தர் விற்பனை இலக்கு 1,201,241 ஆகும். அதன்படி, நாங்கள் எதிர்பார்த்த இலக்கு 93.14□ ஆக இருந்தது. |
| (ஊ) 2023 நவம்பர் 09 முதல் சந்தைக்கு அறிமுகப்படுத்தியிருந்த சுப்பிரி தன சம்பத லொத்தர் சீட்டு 2024 நவம்பர் 20ஆம் திகதி வரையிலான ஒரு வருடத்திற்கும் அதிகமான காலப்பகுதியில் இணையவழி முறையில் சந்தைக்கு அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2024 நவம்பர் 21 முதல் மீளாய்வு வருட இறுதி வரையில் 82,000 லொத்தர் சீட்டுகள் விற்பனை முகவர்களுக்கு இணையவழியில் விநியோகிக்கப்பட்டிருந்த அதேவேளை, அவற்றில் 18,225 லொத்தர் சீட்டுகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருந்தது, 63,775 லொத்தர் சீட்டுகள் அதாவதுது 78 சதவீத சீட்டுக்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. | சபையால் செயல்படுத்தப்பட்ட ஸ்வீப் செயலி மொபைல் போன் பயன்பாடு தற்போது குறைவான லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்து வருகிறது. இந்த செயலியை பொதுமக்களிடம் கொண்டு செல்வதற்கு விளம்பரத் திட்டங்கள் செய்யப்பட்டிருந்தாலும், செயலியுள்ள உள்ள நடைமுறை தொழில்நுட்ப சிக்கல்கள் தீர்க்கப்படும் வரை விளம்பர நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. இருப்பினும், தற்போது சம்பந்தப்பட்ட செயலியை நிர்வகிக்கும் எபிக் நிறுவனம் அதைப் பயன்படுத்துவதை எளிதாக்கும் வகையில் அதைத் தயாரித்து வருகிறது. |
| (எ) அபிவிருத்தி லொத்தர் சபையில் இடம்பெறும் லொத்தர் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ செயன்முறை வெளிப்புற சேவை வழங்குநர் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதால், அவ் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் சபையின் ஊழியர்கள் மூலம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதற்கமைய, லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் கட்டமைப்பொன்றினை கொள்வனவு செய்வதற்காக 2019 ஒக்டோபர் 25ஆம் திகதி தேசிய போட்டி விலைமனு முறையைப் பயன்படுத்தி விலைமனுக்களைக் கோரப்பட்டு, விலைமனு மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வு வருட நிறைவில் அதாவது, 05 வருடங்களுக்கு அதிகமாக கழிந்துள்ள நிலைமையிலும் அந்நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாதிருந்த காரணத்தினால் 2020 தொடக்கம் 2024 வரையில் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் கட்டமைப்பு சேவைக்காக ரூ. 92,541,077 வெளிப்புற சேவை வழங்குநர் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டியிருந்தது. | இந்த கணக்காய்வு அவதானிப்பில் கூறப்பட்டுள்ளபடி, லொத்தர் செயல்பாட்டு முகாமைத்துவ மென்பொருள் அமைப்பை நிறுவுவதற்கான ஆரம்ப பெறுகை நடவடிக்கைகள் 2020.7.27 முதல் தொடங்கப்பட்டன.<br><br>அந்த பெறுகையின் கீழ், லொத்தர் செயல்பாட்டு செயல்முறைக்காக சபையால் தற்போது பயன்படுத்தப்படும் முக்கிய LMS மென்பொருள் அமைப்பால் செய்யப்படும் அனைத்து செயல்பாடுகளும் மற்றும் தற்போது Manual முறையில் மேறகொள்ளப்படும் செயற்பாடுகளும் தானியங்கி முறையில் செய்யப்படும் வகையில் சபையின் பணிகள் வினைத்திறன்மிக்க வகையில் அமையும் பொருட்டு சபைக்கு அதன் உரித்து மற்றும் முகாமைத்துவ வசதியைப் பெறும் வகையில் ஒரு புதிய மென்பொருள் அமைப்பு நிறுவப்பட்டது. அதன்படி, அந்த அமைப்பை உருவாக்குவதற்கும், அதன் மூலக் குறியீடு சபைக்குக் கிடைக்கும் வகையில் அந்த மென்பொருள் அமைப்பை நிறுவுவதற்கும் உள்ள தேவைகள் இந்த பெறுகை ஆவணத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| | அதன்படி, இது தொடர்பாக கேட்பு விலை கோரப்பட்டன. ஆயினும் பின்னர் பணிப்பாளர் சபை வழங்கிய வழிகாட்டுதல்களின்படி, சம்பந்தப்பட்ட மென்பொருள் அமைப்பு நிறுவப்பட்ட பிறகு அதன் செயல்பாட்டின் போது வழங்குனரின் உத்தியோகத்தர்கள் சபையின் ஊழியர்களுடன் ஒரே நேரத்தில் பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் மென்பொருள் அமைப்பின் நோக்கம் திருத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.<br><br>அதன்படி, இந்த பெறுகையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு இந்த விடயம் ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் மதிப்பீட்டுக் குழு அந்த விடயங்களில் கவனம் செலுத்தியது. முன்மொழியப்பட்ட நோக்கத்தை திருத்துவதில் பணியாற்றும் போது, அது தொடர்பான பின்வரும் விடயங்களுக்கு கவனம் செலுத்தப்பட்டது.<br><br>i. முன்மொழியப்பட்ட மென்பொருள் அமைப்பின் விடயப் பரப்பின் பிரகாரம் அமைப்பினை தாபித்த பினனர் தினசரி செயற்பாடுகளுக்காக சபை அதற்காகவே பிரத்தியாக ஒதுக்கப்பட்ட ஒரு தகவல் தொழில்நுட்ப ஆளணியைக் கொண்டிருக்கும் (இந்த சேவைகளை வழங்கும் தனியார் சேவை நிறுவனத்தின் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட நிரந்தர ஊழியர்கள் ஏற்கனவே அந்த நோக்கத்திற்காக முழுநேரமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.)<br><br>ii. தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர், மென்பொருள் அமைப்பு நிறுவப்பட்ட பின்னர், சபையின் தொழில்நுட்ப ஊழியர்களால் தீர்மானிக்கப்படுகின்றவாறு பல ஆண்டுகளுக்கு சபையின் அலுவலக வளாகத்தில் முழுநேரமாக முனைப்புடன் பணியாற்ற வேண்டும் (அதன்படி, வழங்குனரின் பொறியியல் ஊழியர்களில் இருவர் குறைந்தபட்சம் 02 ஆண்டுகள் பணியமர்த்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.)<br><br>iii. சபையின் லொத்தர் தொழிற்பாட்டு செயன்முறையில் சிறப்பு லொத்தர் சீட்டுகளை அறிமுகப்படுத்துவதற்கான விளம்பரத் திட்டங்கள் அடிக்கடி இருப்பதால், அதன் பொருட்டு மென்பொருள் மேம்படுத்தல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதற்கமைவாக change request, enhancement, Bug Fixing மற்றும் தகவல் பாதுகாப்பு தொடர்பான இற்றைப்படுத்தல்களை நிறைவேற்றும் முறை அத்துடன் அதற்காக அடிப்படை ஒப்பந்தத்திற்கு புறம்பாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் முறை<br><br>iv. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், சபையில் பணியாற்றும் ஊழியர்கள் உடனடியாக அதற்கு ஏற்றவாறு இசைந்தொழுக இயலாத சந்தர்ப்பங்களில், மென்பொருள் அமைப்பை உருவாக்கிய வழங்குனரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் இது தொடர்பாக வழங்குனருக்கும் சபைக்கும் இடையே ஒரு சேவை ஒப்பந்தத்தில் நுழைய வேண்டிய தேவைப்பாடு.<br><br>v. மென்பொருள் அமைப்பை நிறுவிய பின்னர் மற்றும் சபையின் ஊழியர்கள் அமைப்பை இயக்கப் பழகும் வரை ஏற்படக்கூடிய அத்தகைய மேம்படுத்தல்களைச் செய்வதற்கு 02 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மாதாந்த ஊதியத்தின் அடிப்படையில் வழங்குனரின் முழு உதவி தேவைப்படுவதுடன் இதற்காக, மென்பொருள் மேம்பாட்டுக் குழுவின் |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| | சேவைகள் தேவைப்படும் அதேவேளை அந்தக் குழுவுடன் ஒருங்கிணைந்து அவசரகால சூழ்நிலைகளில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரண்டு பொறியாளர்கள் சபையில் இருக்க வேண்டும்.<br><br>vi. அதற்கமைவாக, இந்தத் கருத்திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே சபைக்கு நிரந்தர முழுநேர ஊழியர்களைப் பணியமர்த்த முடியாவிட்டால், இந்த பெறுகையை தொடங்குவது பொருத்தமற்றதாகும்.<br><br>vii. அதன்படி, முன்மொழியப்பட்ட மென்பொருள் அமைப்பை நிறுவுவதற்கான கேட்பு விலையை கோருவதற்கு முன்னர், இந்தப் பணி தொடர்பான தகவல் தொழில்நுட்ப மனிதவளத் தேவையை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்,<br><br>viii. மற்றைய அரச நிறுவனங்களில் தனியார் துறையைக் கொண்டு ஏற்கனவே உயர் மட்ட தகவல் தொழில்நுட்ப பணிகள் செய்யப்பட்டு வருவதுடன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய அபாயங்களைத் தவிர்ப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது,<br><br>ix. மேற்படி குறிப்பிட்டுள்ளவாறு, வழங்குனரின் ஊழியர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சபையின் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுடன் பணியமர்த்தப்பட்டாலும், சபை அதற்காக கூடுதல் செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கலாம்.<br><br>குறிப்பாக, 2022/2023 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பாதகமான பொருளாதார சூழ்நிலை காரணமாக, தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் செலவு மற்றும் அரச துறைக்கு அனுபவம் வாய்ந்த நிபுணர்களை ஈர்ப்பதிலும் தக்கவைத்துக்கொள்வதிலும் உள்ள சிரமம் ஆகியவை அடையாளம் காணப்பட்டன. இத்தகைய சூழ்நிலையில், தகவல் தொழில்நுட்ப துறையின் முழு மனிதவளத் தேவையையும் முதலில் தீர்மானித்து, சம்பந்தப்பட்ட வெற்றிடங்களுக்கு புதிய பணியாளர்களை நியமித்த பின்னர் பெறுகை தொடர்பான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பெறுகை பிரிவுக்குத் தெரிவித்தது.<br><br>அதன்படி, இந்த விடயங்கள் 2022 ஆம் ஆண்டில் நிதி அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிவுறுத்தல்களின்படி, மனிதவளத் தேவை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையில் அதன் செலவு மற்றும் தனியார் துறையிலிருந்து இந்த சேவையைப் பெறுவதற்கான தற்போதைய செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 2023.09.26 மற்றும் 2023.11.19 ஆகிய தேதிகளில் பணிப்பாளர் சபையிடம் ஒப்பீட்டு பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், இந்த விடயம் தொடர்பாக நிதி அமைச்சின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இந்த விடயம் தொடர்பாக 14.02.2023 அன்று ஒரு கூட்டம் நடைபெற்றதுடன் அங்கு இந்த விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன. (இணைப்பு இல. 01)<br><br>அதன்படி, முன்மொழியப்பட்ட டூஆளு அமைப்புக்கான நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்துள்ளதுடன் இந்த விடயம் குறித்து நிதி அமைச்சிற்கு 12.01.2024 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| | அதற்கமைவாக, 26.07.2024 அன்று அமைச்சின் அங்கீகாரம் இதற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அமைப்பை நிறுவுவதற்கான முதல் விலை கோரலின் போது சம்பந்தப்பட்ட விடயப் பரப்பில் சேர்க்கப்பட்டிருந்த பல விடயங்கள் தற்போது திருத்தப்பட்டுள்ளதுடன் அந்த விடயங்கள் அடையாளம் காணப்பட்டு கேட்பு விலை ஆவணங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. சபையின் ஊழியர்கள் முன்மொழியப்பட்ட அமைப்பு பற்றிய பயிற்சி மற்றும் புரிதலைப் பெறுவதற்காக, வழங்குனர் நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு பொறியாளர்கள் சபையின் ஊழியர்களுடன் பணியமர்த்தப்பட வேண்டும் என்று கேட்பு விலை நிபந்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. கட்டாய இரண்டு ஆண்டு தேவைக்கேற்ப, சேவைக் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீடிக்க ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.<br><br>இந்தக் காலகட்டத்தில், கணினி மேம்பாடுகள், சேர்த்தல்கள், மாற்றங்கள் மற்றும் தினசரி செயல்பாடுகளுக்கான மாற்றங்களைச் செய்யும் பொருட்டு மிகவும் அறிவுள்ள ஒரு குழுவை நியமிக்க வேண்டும். அரசாங்க சம்பளத்துடன் ஒப்பிடும்போது இது மிகவும் கடினமான பணியாக இருப்பதுடன் இந்தக் காலத்திற்குள் அனைத்து வேலைகளுக்காகவும் தயாரானதும், அந்த நிறுவனத்திடமிருந்து முழுமையாக மென்பொருள் மேம்பாடு உட்பட அனைத்து வேலைகளையும் அபிவிருத்தி லொத்தர் சபை பொறுப்பேற்றுக்கொள்ளலாம். அதன்படி, மேற்படி பெறுகைக்கு ஏதுவாக கேட்பு விலைகள் கோரப்பட்டுள்ளதுடன் கேட்பு விலை திறப்பினை 2025.07.01 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது |
| (ஏ) சபையானது வொக்ஷோல் வீதியில் இலக்கம் 234இல் உள்ள கட்டிடத்தை வாடகை அடிப்படையில் 2006 ஒக்டோபர் மாதத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு செய்திருந்த ஒப்பந்தம் ஒருதலைப்பட்சமாக மீறப்பட்டதால், வைப்புத் தொகையாக செலுத்திய ரூ. 723,780 தொகை மற்றும் அந்த வருடங்களுக்கென செலுத்திய வாடகைப் பணத்தில் ஒரு பகுதியாகிய ரூ.4,976,220 ஆகிய தொகைகளின் மொத்தமாகிய ரூ. 5,700,000 ஐ 18 வருடங்களாக அறவிட்டுக் கொள்வதை சபை தவறவிட்டிருந்தது. | வொக்ஷோல் வீதியின் 234 ஆம் இலக்க கட்டிடத்தின் வாடகை தொடர்பாக நிதி அமைச்சின் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, சபைக்கு செலுத்த வேண்டிய ரூ. 5,700,000 தொகையை வசூலிப்பது தொடர்பாக அறிக்கை பெறப்பட்டதுடன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை செயல்படுத்த தேவையான சட்ட நடவடிக்கையை சட்டமா அதிபர் திணைக்களம் எடுத்து வருகிறது. சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களும் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட தகவல்கள் பெறப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து பெறப்படாததால், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வினவுவதற்கு 2023/07/24 மற்றும் 2025/02/21 ஆகிய தேதிகளில் மீண்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| (ஐ) 1990 ஆம் ஆண்டு வோர்ட் பிளேஸில் உள்ள ஒரு நபருடன் செய்து கொண்ட வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ. 2,520,000 கட்டிட வாடகை வைப்புத்தொகையை மீட்டெடுப்பதற்காக 23 ஆண்டுகளுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2016 ஜனவரி 11ஆம் திகதி கிடைக்கப்பெற்றது. குறித்த தொகையை அறவிட்டுக்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டு சுமார் 09 ஆண்டுகள் கடந்திருந்தாலும், மீளாய்வு வருட இறுதியிலும் சபையானது அந்தத் தொகையை அறவிட்டுக்கொள்ளத் தவறியிருந்தது. | இந்த நீதிமன்ற நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வினவுவதற்கு 2025.02.24 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. மீள அறவிட்டுக்கொள்ளும் செயன்முறை இறுதி கட்டத்தில் இருப்பதால், 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தத் தொகையை மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்த சட்ட நடவடிக்கைக்கு பொறுப்பான சட்டத்தரணி தெரிவித்தார். |

<table>
<tr><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள்</th><th>முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை</th></tr>
<tr><td>(ஒ) மீளாய்வு வருடத்தில் செய்யப்பட்ட 07 வரும்படி செலவுகளில் திருத்தப்பட்ட ஒதுக்கீட்டை மீறிய செலவின் மொத்தப்பெறுமதி ரூ. 5,735,563 ஆகும். ஒவ்வொரு வரும்படியையும் கருத்திற் கொள்கின்ற போது வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டு எல்லையை மீறிய செலவு 13 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான இடைவெளியில் இருந்தது.</td><td>கணக்காய்வு வினவுதலில் ட்டிக்காட்டப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டை விட அதிகமாக ஏற்பட்ட 07 செலவினங்களில், வாகன பழுதுபார்க்கும் செலவுகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு மீறப்படவில்லை என்பதுடன் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டை விட அதிகமாக ஏற்பட்ட மற்றைய 06 செலவினங்கள் பின்வருமாறு.<br><br>
<table>
<tr><th></th><th>உண்மை</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>கடித விநியோகச் செலவுகள்/முத்திரைக் கட்டணங்கள்</td><td>1,088,024</td><td>1,319,381</td></tr>
<tr><td>அலுவலக உபகரண பராமரிப்பு செலவுகள</td><td>2,669,038</td><td>3,253,669</td></tr>
<tr><td>A/C இயந்திரங்களின் பராமரிப்பு செலவுகள்</td><td>2,628,186</td><td>4,029,404</td></tr>
<tr><td>பத்திரிகை விளம்பர் செலவுகள்</td><td>2,022,955</td><td>2,274,816</td></tr>
<tr><td>GPS Tracking செலவுகள்</td><td>202,877</td><td>278,011</td></tr>
<tr><td>லொத்தர் சீட்டு பரிசோதனைக்காக பகுப்பாய்வு திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள்</td><td>150,000</td><td>261,420</td></tr>
</table>
<br>கடந்த ஆண்டில் சேவை விலைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான ஏற்ற இறக்கங்கள் காரணமாக சம்பந்தப்பட்ட பூர்வாங்க மதிப்பீடுகளைச் செய்வதில் உள்ள சிரமத்தின் விளைவாக நிர்வாகச் செலவுகள் தொடர்பான மேற்கண்ட செலவின உருப்படி 06 இன் ஏற்பாடுகள் மீறப்பட்டிருந்தாலும், மொத்த நிர்வாகச் செலவுகளின் மதிப்பிடப்பட்ட செலவு ஒட்டுமொத்தமாக மீறப்படவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்</td></tr>
</table>

# விரிவான வருமானக் கூற்று

**விரிவான வருமானக் கூற்று**

| டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு. | 2024 ரூ | 2023 ரூ |
|---|---|---|---|
| வருவாய் | 01 | 28,880,477,301 | 25,442,131,713 |
| லொத்தர் சீட்டுகளுக்கான கிரயம் | 02 | 832,983,406 | 1,147,660,028 |
| பரிசுகளுக்கான செலவினம் | 03 | 15,701,451,624 | 13,450,963,612 |
| சீட்டிழுப்பு கிரயம் | 04 | 910,638,754 | 826,071,896 |
| மொத்த இலாபம் | | 11,435,403,517 | 10,017,436,178 |
| ஏனைய வருமானம் | 05 | 248,494,660 | 434,981,322 |
| விநியோக கிரயம் | 06 | 7,320,020,849 | 6,704,738,408 |
| நிர்வாக செலவுகள் | 07 | 796,021,766 | 707,503,423 |
| தொழிற்படுத்தல் செலவுகளுக்கு பின்னரான மிகை | | 3,567,855,562 | 3,040,175,668 |
| வருமான வரி | 08 | 984,657 | 663,431 |
| பரிசுகளை செலுத்தித் தீர்த்தல் | | 630,219,350 | 476,784,240 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 4,197,090,255 | 3,516,296,477 |
| வருமான வரி | 09 | 111,163,568 | (106,210,247) |
| வருமான வரிக்கு பின்னரான இலாபம் | 10 | 4,085,926,687 | 3,622,506,725 |
| பிற விரிவான வருமானம் | | | |
| ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/நட்டம் | | (6,259,359) | (5,576,996) |
| மீள்மதிப்பீட்டு மிகை | | (1,249,980) | 1,648,326,333 |
| ஆண்டுகான மொத்த விரிவான வருமானம் | | 4,078,417,348 | 5,265,256,062 |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

**ஜே.ஏ.டி.கே. ஜயசூரிய**
பதில் கடமையாற்றும் பொது
முகாமையாளர் (நிதி)

**சட்டத்தரணி ஹேமந்த ஸ்வர்ணதிலக**
தலைவர்/பிரதம நிறைவேற்று
அதிகாரி

**எம்.ஏ. சாணக்கிய லியனகே,**
பணிப்பாளர்,

# நிதி நிலைக் கூற்று

**அபிவிருத்தி லொத்தர் சபை**
**நிதி நிலைக் கூற்று**

| டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் | குறிப்பு. | 2024<br>ரு | 2023<br>ரு |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொதுதுக்கள்** | 11 | | |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள்,உபகரணங்கள் | | 2,767,895,680 | 2,703,367,049 |
| நடைமுறையிலுள்ள முலதன வேலைகள் | | 2,178,884 | 8,550,596 |
| **அருவச் சொத்து** | 11 | 4,856,012 | 6,130,310 |
| | | | |
| **மொத்த நடைமுறையல்லாச சொத்துக்கள்** | | 2,774,930,577 | 2,718,047,956 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| சரக்குத் தொக்குகள் | 13 | 54,221,755 | 56,720,455 |
| வணிக கடன்பெற்றோர் மற்றும் பிற வருமதிகள் | 14 | 195,633,999 | 207,964,715 |
| முற்கொடுப்பனவு மற்றும் வைப்புகள் | 15 | 9,494,998 | 4,748,286 |
| நிலையான வைப்புகள் | 12 | 1,222,751,286 | 1,710,213,172 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 16 | 1,196,185,002 | 767,981,019 |
| **மொத்த நடைமுறை சொதுதுக்கள** | | 2,678,287,041 | 2,747,627,647 |
| **மொத்த சொத்துக்கள்** | | 5,453,217,617 | 5,465,675,603 |
| **உரிமைபபங்குகள் மற்றும் பொறுப்புகள்** | | | |
| **பங்களிப்பு மூலதனம்** | | | |
| சனாதிபதி நிதியம் | | 2,200,000 | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம | | 2,200,000 | 2,200,000 |
| பரிசுகளுக்கான ஒதுக்கக் கணக்கு | | 340,232,474 | 139,106,256 |
| சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டியவைகள | | 193,438,687 | 682,730,725 |
| மீள்மதிப்பீடு மிகை | | 2,267,659,447 | 2,268,909,427 |
| ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/ நட்டம் | | - | 6,259,359 |
| **மொத்த உரிமைப் பங்கு** | | 2,805,730,608 | 3,101,405,767 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் நலன்சார் பொறுப்புகள் | 17 | 13,363,119 | 9,081,293 |
| செலுத்தப்பட வேண்டிய முகவர் மற்றும் விநியோகத்தர் வைப்புகள் | 18 | 40,985,881 | 39,875,881 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுபபுகள்** | | 54,349,000 | 48,957,174 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வணிக மற்றும் ஏனைய சென்மதிகள | 19 | 833,301,365 | 690,726,582 |
| சென்மதியான பரிசுகள் | 20 | 1,611,749,784 | 1,456,785,350 |
| சென்மதியான கடன் வவுச்சார்கள் | | 148,086,860 | 167,800,730 |
| **மொதத நடைமுறை பொறுப்புகள்** | | 2,593,138,009 | 2,315,312,663 |
| **மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்** | | 5,453,217,617 | 5,465,675,603 |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

**ஜே.ஏ.டி.கே. ஜயசூரிய**
பதில் கடமையாற்றும் பொது முகாமையாளர் (நிதி)

**சட்டத்தரணி ஹேமந்த ஸ்வர்ணதிலக**
தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

**எம்.ஏ. சாணக்கிய லியனகே,**
பணிப்பாளர்,

# காசுப் பாய்வுக் கூற்று

**அபிவிருத்தி லொத்தர் சபை**
**காசுப் பாய்வுக் கூற்று**

| டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு. | 2024 ரூ | 2023 ரூ |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து விளைந்த காசுப் பாய்வு** | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | | 4,197,090,255 | 3,516,296,477 |
| **சீராக்கங்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | | 109,667,358 | 79,161,279 |
| பரிசுகளுக்கான ஒதுக்கக் கணக்கு | | 201,126,218 | (586,850,033) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | 15,376,459 | 8,722,804 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (4,665,373) | (6,884,568) |
| வட்டி வருமானம் | | (211,897,469) | (399,449,492) |
| நிலையான சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் | | 445,128 | (354,582) |
| வருமான வரி | | | (106,187,260) |
| சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தப்பட்டவை | | (4,575,218,725) | (3,255,567,041) |
| | | | |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படுத்தல் இலாபம்** | | (268,076,148) | (751,112,417) |
| **தொழிற்பாட்டு சொத்துக்களின் அதிகரிப்பு/குறைவு** | | | |
| சரக்குத் தொக்குகளின் அதிகரிப்பு/குறைவு | | 1,722,950 | (10,749,844) |
| கடன்பெறுனர்களின் அதிகரிப்பு/குறைவு | | 4,545,434 | (57,711,291) |
| வைப்பு மற்றும் முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/குறைவு | | (4,746,712) | 1,475,142 |
| **தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு ஃகுறைவு** | | | |
| கடன் தருநர்களின் அதிகரிப்பு/குறைவு | | 31,472,953 | 124,681,357 |
| சென்மதியான பரிசுகளின் அதிகரிப்பு/குறைவு | | 154,964,434 | 453,478,836 |
| கடன் வவுச்சர்களின் அதிகரிப்பு/குறைவு | | (19,713,870) | 44,447,170 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளினால் விளைந்த காசுப்பாய்வு** | | (99,830,960) | (195,491,046) |
| **முதலீட்டு செற்பாடுகளின் நிகர காசுப் பாய்வு** | | | |
| பணியாளர்களுக்கான கடன் - பெற்றவை | | 20,158,556 | 21,169,588 |
| பணியாளர்களுக்கான கடன் - செலுத்தப்பட்டவை | | (12,373,274) | (7,288,747) |
| நிலையான சொததுக்களின் சேர்ப்பு (ஆதனங்கள், இயந்திரசாதனங்ள் மற்றும் உபகரணங்கள்) | | (167,553,921) | (46,909,193) |
| நிரந்தர சொத்துக்கள் விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் | | 22,847 | 437,053 |
| வட்டி வருமானம் | | 211,897,469 | 399,449,492 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | 474,773,267 | 38,216,505 |
| முகவர் விநியோக வைப்புகளின் அதிகரிப்பு | | 1,110,000 | 1,157,000 |
| **முதலீட்டு செயற்பாடுகளினால் விளைந்த தேறிய காசு** | | 528,034,944 | 406,231,698 |
| | | 428,203,984 | 210,740,651 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய காசு அதிகரிப்பு.'.குறைவு | | 428,203,984 | 210,740,651 |
| ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | 767,981,019 | 557,240,367 |
| ஆண்டு இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள | 16 | 1,196,185,002 | 767,981,019 |
| வங்கிகளிலுள்ள பணம் இலங்கை வங்கி | | 482,924,160 | 342,627,989 |
| மக்கள் வங்கி | | 710,987,703 | 424,314,375 |
| ஹற்றன் நெ'னல் வங்கி | | 2,263,735 | 1,029,250 |
| | | | |
| அபிவிருத்தி லொத்தர் சபையின் அனர்த்த நிதியம | | 9,404 | 9,404 |
| | | 1,196,185,002 | 767,981,019 |

# உரிமைப் பங்கு மாற்றம் பற்றிய கூற்று

**2024 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது**

| | சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல பொறுப்பு நிதியம் | பரிசு ஒதுக்கக் கணக்கு | தக்கவைத்த வருவாய்கள் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 2023.01.01 இல் உள்ளவாறு மீதி | 4,400,000 | 725,956,289 | 315,791,041 | 620,583,095 | 11,836,354 | 1,678,566,779 |
| 2023 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவை | | (586,850,033) | 3,622,506,725 | 1,648,326,333 | (5,576,996) | 4,678,406,029 |
| சனாதிபதி நிதியத்திற்கான ஒதுக்கீடு - 2023 | | | (3,255,567,041) | | | (3,255,567,041) |
| **2023.12.31 இல் உள்ளவாறு மீதி** | **4,400,000** | **139,106,255** | **682,730,725** | **2,268,909,427** | **6,259,359** | **3,101,405,767** |
| 2024 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவை | | 201,126,218 | 4,085,926,687 | (1,249,980) | (6,259,359) | 4,279,543,566 |
| மீளாய்வாண்டில் சனாதிபதி நிதியத்திற்கான ஒதுக்கீடு | | | (4,575,218,725) | | | (4,575,218,725) |
| **2024.12.31 இல் உள்ளவாறு மீதி** | **4,400,000** | **340,232,474** | **193,438,687** | **2,267,659,447** | **0** | **2,805,730,608** |

# கணக்கீட்டுக் கொள்கைகள

### 1. அறிக்கையிடும் நிறுவனம்

அபிவிருத்தி லொத்தர் சபை 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. சபையின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகத்தின் முகவரி இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஆகும். இவ்வருடத்தில் சபையின் முதன்மையான பணி லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்வதாகும்.

### 2. தயாரிப்பதன் அடிப்படை

#### 2.1 இணக்க கூற்று

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள, இதனகத்துப் பின்னர் புள்ளி விபரங்கள் என அழைக்கப்படும் இலங்கை புதிய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை அரச நிதி ஒழுங்குவிதிகளிலும் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளும் குறித்துரைக்கப்படுகின்ற நியமங்களுக்கு அமைவாக இந்நிதி கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

#### 2.2. அளவீட்டின் அடிப்படை

பின்வருமாறு காட்டப்பட்டுள்ள முறைகள் தவிர்ந்ததாக இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. நிலையான வைப்பீடு மீதான முதலீடு - நியாய பெருமதியின் அடிப்படையில், காணிகள் மற்றும் கட்டிடங்கள் - மீள் கணிப்பீட்டு பெறுமானத்தின் அடிப்படையில். பணிக்கொடைகளுக்கான ஒதுக்கம்-பணிக்கொடைகளுக்கான சூத்திரம் மற்றும் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நடப்பு பெறுமதியின் அடிப்படையில்

#### 2.3 நடைமுறை சார்ந்த மற்றும் சமர்ப்பண செலாவணி

நிதிக்கூற்றுக்கள் சபையின் நடைமுறை சார்ந்த இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது. இலங்கை ரூபாய்கள் வடிவத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து நிதி தகவல்களும் அண்மித்த ரூபாய் பெறுமானத்தில் மட்டமாக்கப்பட்டுள்ளது.

#### 2.4 வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட திகதி

2024 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடுவதற்கு 2025 பெப்ரவரி 18ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

#### 2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளை ஈடுபடுத்துதல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக முகாமைத்துவம் கணக்கிட்டு கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அறிக்கை இடப்படுகின்ற சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் செலவுகளின் அளவுகளுக்கு தாக்கம் விளைவிக்கின்ற தீர்ப்புகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் வரலாற்று அனுபவங்கள் மற்றும் நிலவுகின்ற சூழ்நிலைகள் ஆகியவற்றின் கீழ் நியாயமானதென கருதப்படுகின்ற எதிர்பார்ப்புகளும் உள்ளிட்ட ஏனைய காரணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆகவே உண்மையான பெறுபேறுகள் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளையும் விட மாற்றம் அடையலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள ஊகங்கள் இடையறாத அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலத்தில் அது தாக்கம் விளைவிக்கின்ற எந்த ஒரு எதிர்கால காலத்திற்குமான கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அடையாளம் காணப்படும்.

#### 2.6 ஏதுவான தன்மை மற்றும் போதுமான தன்மை

நிதி கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இல.01 இற்கு இசைந்தொழுகும் அனைத்து சமமான உருப்படிகளும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். தன்மை அல்லது செயற்பாட்டில் சமமற்ற உருப்படிகளும் பொருட்களாயின் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். இனங்காணப்பட்ட அளவுகளை எதிரீடு செய்வதற்கு சட்டபூர்வமாக எதிர்வீடு செய்வதற்கு உண்மையுள்ள போதும் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே தடவையில் சொத்துக்களை காசுருவாக்கி பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு நோக்கம் கொண்டுள்ள போது மாத்திரம் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களை எதிரீடு செய்து தேறிய பெறுமானம் நிதிநிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும். ஏதேனும் கணக்கிட்டு கொள்கையொன்றின் அல்லது பொருள்கோடல் ஊடாக வரையறுக்கப்பட்டு அல்லது அனுமதி அளிக்கப்பட்டு இருக்குமாயின் தவிர அத்துடன் கணக்கிட்டு கொள்கைகளில் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவுகள் விரிவான நிதி கூற்றுக்களில் எதிரீடு செய்யப்படாது.

#### 2.7 வருமான வரி

சபையானது வருமான வரிக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி உள்ளிட்ட ஏனைய வரிகளுக்கு கட்டுப்பட்டதாகும். நிதிக்கூற்றுக்களில் இலங்கைமீது அறிக்கையிடல் நியமங்களை ஏதுவாக்கிக்கொள்ளும் விடயத்தை பின்பற்றுதல் தொடர்பாக வரி வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் வரை நடப்பு மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் வரி விதித்தல் நடவடிக்கைக்கு வரி அறவிட கூடிய இலாபம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு போதியளவு ஒரு தீர்ப்பு தேவையாக இருந்தது. இந்நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் வரிச் சட்டங்களின் ஏற்புடைய தன்மை தொடர்பான பொருள் கோடல்களுக்கு ஏதுவான நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வருமான வரி மற்றும் 17 வற் வரி மதிப்பீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. சபை மேன்முறையீடு செய்து எதிர்ப்பினை காட்டியுள்ளது. மேற்படி மதிப்பீடுகளில் பாரிய பொறுப்புக்கள் ஏற்படாதென சபை அபிப்பிராயம் கொள்கின்றது.

#### 2.8 இடையறாத்தன்மை

எதிர்வரும் காலத்தில் வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சபைக்கு சொந்தமாக சொத்துக்கள் உள்ளதென்பதைப் பற்றி சபை திருப்தி அடைதல் வேண்டும். மேலும் நடப்பிலுள்ள தொழில் முயற்சியாக கம்பனி தொடர்ந்து இயங்குவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பாக கணிசமான அளவு ஐயம் ஏற்படக்கூடிய பொருண்மையில் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக சபை எதையும் அறியவில்லை என்பதுடன் சபையினை கலைப்பதற்கு அல்லது அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அப்பிப்பிராயம் கொள்ளவில்லை. ஆகவே, சபையின் நிதி கூற்றுக்களை தயாரித்தல் இடையறாதன்மையை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

## 3. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள

### 3.1 ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம்

#### 3.1.1 இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவை சேவைகளை வழங்குவதற்காக அல்லது நிர்வாக பணிகளுக்காக வைக்கப்பட்டுள்ள தொட்டு உணரக் கூடிய பொருட்களாக இருப்பதுடன் அவை ஒரு காலகட்டத்திற்கு மேற்பட்ட தடவைகள் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**அ. இனங்காணுதல்**

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நலன்கள் சபைக்கு வந்து சேரும் ஆற்றல் உள்ளதாயின் அத்துடன் சொத்தின் கிரயம் நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் இனம் காணப்படும்.

**ஆ. ஆதனம், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்**

அனைத்து அறிக்கையிடல் திகதியின் போதும் சபை சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமான தேய்வு முறைகள் ஆகியவை தொடர்பாக மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமானங்கள், விகிதங்கள் மற்றும் முறைகளை மதிப்பீடு செய்யும்போது முகாமைத்துவத்தின் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இதன் காரணமாக அவை நிச்சயமற்ற தன்மைக்கு உள்ளாகின்றது. ஆதனங்கள் தொடர்பான வரிவானதொரு மீளாய்வு 2024 ஆம் சபையினால் நடாத்தப்பட்டது.

**இ. அளவிடுதல்**

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் ஒட்டுமொத்த பெறுமானத் தேய்வினை கழித்த பின்னர் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமானத்திற்கு குறிப்பிடப்படும்.

சொத்துக்களை கொள்வதற்கு நேரடியாகவே ஏதுவானதாக அமையும் செலவுகள் கிரயம் என்பதில் உள்ளடங்குகின்றது. சுயமாக கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்களின் கிரயத்திற்கு அவற்றை கட்டியெழுப்புவதற்கு ஈடுபடுத்தப்பட்ட பொருட்களினதும் உழைப்பினதும் கிரயம், அத்தகைய சொத்து அதன் எதிர்பார்க்கப்பட்ட பாவனைக்காக செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகவே ஏதுவாக்கிக் கொள்ளக் கூடிய ஏனைய செலவுகள் மற்றும் பொருட்களை பகுதிகளாக கழற்றி அகற்றி அவை அமைந்திருந்த தளத்தில் மீள பொருத்துவதற்கு ஏதுவான செலவுகளும் இதில் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்களை மீள அமைத்துக் கொள்வதற்கு அல்லது பேணி வருவதற்கு ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களை பழுது பார்த்தல் அல்லது பேணி வருவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகளும் அவ்வாறு செலவு செய்யப்பட்ட பின்னர் செலவாக இனங்காணப்பட்டுள்ளது.

**ஈ. அடுத்துறும் செலவுகள்**

நீண்ட சோதனைகள் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் உள்ளிட்டதாக தனித்தனியாக கணக்கு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் உருப்படி ஒன்றை மீளமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் செலவு மூலதனமாக்கப்படுகின்றது. ஏதேனும், ஆதனம், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உருப்படியொன்றின் ஒரு பகுதியின் எதிர்கால பொருளாதார நலன் சபைக்கு வந்து சேர்வதற்கான வாய்ப்பு உள்ளதாயின் அத்தகைய கிரயத்தை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அத்தகைய உருப்படியை மீளமைப்பதற்கான கிரயம் உருப்படியின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமானத்தில் இனங்காணப்பட்டுள்ளது. மீளமைக்கப்பட்ட பகுதியின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமானம் அகற்றப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் அன்றாட சேவை கிரயங்கள் உறப்பட்ட கிரயமாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

**உ. பெறுமான தேய்வு**

சாதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் அனைத்து பகுதிகளும் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட் காலம் மீது தேய்வுபெறுமானத்திற்கு உட்படுத்துதல் நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனம் காணப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு.

| | |
|---|---|
| கட்டிடங்கள்/கூடங்கள் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் | 25% |
| அலுவலக உபகரணங்கள் | 25% |
| இயந்திர உபகரணங்கள் | 12.5% |
| மோட்டார் வாகனங்கள்/ முச்சக்கர வண்டிகள் | 20% |
| கணினிகள் மற்றும் பாகங்கள் | 33.33% |
| வர்த்தக சின்னம் கொண்ட விற்பனைக் கூடங்கள் | 16.66% |
| மோட்டார் சைக்கிள்கள் | 25% |
| உள்ளீடு மென்பாகங்கள் | 33.33% |
| செல்லிடத் தொலைபேசிகள் | 50% |

ஒரு சொத்தை பயன்படுத்தக் கூடியவாறு சபைக்கு சொந்தமாக இருக்கும் திகதி முதல் அத்தகைய சொத்தை அகற்றும் திகதிவரை அல்லது அத்தகைய சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் சபை அச்சொத்தினை பெறுமான தேய்வுக்கு உட் படுத்துகின்றது.

